




# தமிழரசு

1—3—1977

மலர் : 7 இதழ் : 17

## இந்த இதழில்

பக்க எண்

வரலாறு காணாத வறட்சியை வென்றோம்!
—கே. வி. ராமநாதன்.. 2

வேளாண்மை வளர்ச்சியும் உணவு உற்பத்தியும்
—கே. வெங்கடேசன்.. 5

நாட்டு மக்களின் நலன் காக்க கூட்டுறவு செய்த பணி
—செல்வி எம். எஸ். ரமேஷ்.. 10

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி
—டீ. என். சேஷன்.. 17

அரிசன நலம் பெருக்கும் நல்வாழ்வுத் திட்டங்கள்
—ஜி. திருமால்.. 23

அறிவார்ந்த உணவுக் கொள்கை அளித்த அரும் பயன்கள்!
—கா. திரவியம்.. 27

குடிநீர்த் திட்டம்—சிறப்பு மிக்க சாதனைகள்!
—டி. வி. அந்தோணி..

நல்வாழ்வு—குடும்ப நலத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம்
—பி. முராரி.. 35

இந்து சமய அறநிலைய நிர்வாகம்
—ஜி. எஸ் சேஷாத்திரி.. 40

குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் மின்சாரத் துறையில் முன்னேற்றம்
—சி. என். ராகவன்.. 44


தொழிலாளர் நலப் பணிகள்
—ஏ. பத்மநாபன்.. 51

ஈடு இணையற்ற நல்வாழ்வை நோக்கிப் பீடுநடை போடுகிறது தமிழ்நாடு!
—ரதி வினய் ஜா.. 55

தமிழ்நாட்டில் சர்க்கரைத் தொழில்
—சி. ராமதாஸ்.. 61

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளி அல்ல.

நன்றி: 'தி எக்கனமிக் டைம்ஸ்' (2-3-1977)








# வரலாறு காணாத வறட்சியை வென்றோம்!

கே. வி. ராமநாதன், ஐ.ஏ.எஸ்.,
இரண்டாவது செயலாளர் மற்றும்
செயலாளர், வருவாய்த் துறை,
தமிழ்நாடு அரசு.

தமிழகத்தின் பெரும்பகுதியில் 1976-ஆம் ஆண்டில் ஏற்பட்ட வறட்சி நிலைமையை மாநில அரசு சமாளிக்க வேண்டியிருந்தது. 1975-ஆம் ஆண்டில் வடகிழக்குப் பருவமழை மிகவும் குறைவாக இருந்தது. ஏற்கனவே, 1974-ஆம் ஆண்டிலும் போதுமான மழை இல்லை; இவ்விரு ஆண்டுகளிலும் குறைந்த அளவே மழை பெய்ததன் விளைவாகத் தமிழகத்தின் பெரும் பகுதியில் கடுமையான வறட்சி நிலவியது. இம்மாநிலத்தில் தென்மேற்குப் பருவ மழை வழக்கமாகப் பெய்யும் அளவினைக் காட்டிலும் 1976-ஆம் ஆண்டில் மிகக் குறைவாகப் பெய்ததன் காரணமாக, வழக்கமாகத் தென்மேற்குப் பருவ மழையைப் பெறும் பகுதிகள், கொடும் வறட்சி நிலைமைக்கு உட்பட்டன. தமிழ்நாட்டின் பெரிய பாசனத் திட்டங்களுக்கு (காவிரி, பெரியாறு—வைகை, தாமிரபரணி) நீர் வழங்குகின்ற கேரள, கர்நாடக நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்த மழையளவும் மிகக் குறைவாக இருந்தமையால் பாசன வசதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன; மாநிலத்தின் பாசனப் பகுதிகள் சிலவற்றில் துயர் துடைப்புப் பணிகள் மேற்கொள்ள வேண்டியிருந்தது. இம்மாநிலத்தில், சென்னை, செங்கற்பட்டு நீங்கலாக மற்ற 13 மாவட்டங்களிலும் உள்ள 4,725 கிராமங்களில் துயர்துடைப்புப் பணிகள் மேற்கொள்ள வேண்டி வந்தன. இம்மாநிலத்தின் மக்கள் தொகையில் கால் பகுதியினர், அதாவது, ஒரு கோடி மக்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டனர்.

## ரூபாய் 27 கோடியில் வறட்சி நிவாரணத் திட்டம்.

வரலாறு காணாத இவ்வறட்சியைச் சமா ளிக்க, 27 கோடி ரூபாய் செலவிலான வறட் நிவாரணப் பெருந்திட்டம் ஒன்று மேற்கொள்ள பட்டது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக் குக் குடிநீர் வழங்குவதும், அங்குள்ளோருக் வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தருவதும் இத் திட்டத்தின் தலையாய நோக்கமாகும். இத்திட் டம், போர்க் காலத்தில் செயல்படுவதுபோல தீவிரமாகச் செயற்படுத்தப்பட்டது: ஆட்சிப் பொறுப்பில் உள்ள உயரதிகாரிகள் இத்திட்டம் குறித்துத் தொடர்ந்தாற்போல் பெருங் கவனம் செலுத்தி வந்தனர். ஆளுநர் அவர்களும் அவ ரது ஆலோசகர்களும் வறட்சியால் பாதிக்கப் பட்ட பகுதிகளுக்கு அடிக்கடி சென்று, துயர் துடைப்புப் பணிகளை மேற்பார்வையிட்டு, அப் பணியினை நிறைவேற்றுவதில் ஏற்படும் பிரச்சினை களுக்கு அங்கேயே, அப்போதே தீர்வு கண்டனர். 1976-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் நமது பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் வறட் சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்; அவரது பயணம்



வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் அளிப்பதாகவும் தெம்பூட்டுவதாகவும் அமைந்தது.

கொடிய வறட்சியால் கடுந்துயருற்ற பகுதியினருக்கு முன்னுரிமை அடிப்படையில் குடிநீர் வழங்கப்பெற்றது. இதற்கு அனுமதிக்கப்பட்ட மொத்தச் செலவு 12 கோடி ரூபாயாகும். குடிநீர் வசதி செய்து கொடுப்பதற்காகக் கீழ்க் காணும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.


(அ) துளைக் கிணறு இறக்கும் பெருந் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது; கையால் இயக்கும் குழாய்களுடன் கூடிய 6,711 துளைக் கிணறுகள் இறக்கப்பட்டன. இம்மாநிலத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் எவ்வளவு துளைக் கிணறுகள் இறக்கப்பட்டனவோ அவ்வளவு துளைக் கிணறுகள் சுமார் எட்டே மாதங்களில் இறக்கப்பட்டன; அவ்வகையில் இது பாராட்டுக்குரிய மகத்தான திட்டமாகும். நீர்ப் பற்றுக்குறைப் பிரச்சினையைத் திறம்படச் சமாளிக்க இத்திட்டம் பெரிதும் உதவியது.

(ஆ) இம்மாநிலத்தின் சில பகுதிகளில் நிலத்தடி நீர் உவர்ப்பாக இருக்கிறது. அப்பகுதிகளில் குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை வட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம், ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி, விளாத்திகுளம் பகுதிகளிலும், தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவா சத்திரம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும் இத்திட்டங்களை மேற்கொள்ள 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இத்திட்டங்களின் கீழ், கிராமங்களுக்குச் சிறிது தொலைவிலுள்ள நல்ல குடிநீர் நிலையிலிருந்து நீர் எடுக்கப்பட்டு, குழாய்கள் மூலம் கிராமத்திற்குக் கொண்டுவரப்படும்.

(இ) தமிழ்நாட்டில், துளைக் கிணறு திட்டத்தை அடுத்து, குடிநீர்க் கிணறுகளையும், ஊருணிகளையும் (குளங்கள்) ஆழப்படுத்தும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. 7,671 கிணறுகளும் 518 ஊருணிகளும் ஆழப்படுத்தப்பட்டன.

வறட்சியின் காரணமாக, உழவுத் தொழிலாளர்கள் பெரும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு ஆளாயினர். அவர்களுக்கு வேறு வேலை வாய்ப்புத் தரும் வகையில் நடுத்தர மற்றும் சிறு பாசனத் திட்டங்கள், மண்வளப் பாதுகாப்பு, காடு வளர்ப்பு, சீரான பருவ காலங்களில் பயன்படக் கூடிய சாலைகள் அமைத்தல் ஆகிய துறைகளில் 15 கோடி ரூபாய் செலவில் பல பணிகள் மேற்கொள்ளப்பட்டன; பாசனம், சாலை அமைத்தல், கசிவு நீர்க்குட்டைகளை அமைத்தல் என்பனவாக 4,600 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றோடுகூட 35,000 எக்டேரில் சம உயர வரப்பு அமைக்கும் பணியும் காடு வளர்ப்புப் பணியும் மேற்கொள்ளப்பட்டன. பாசனம், மண்வளப்

35,000 எக்டேரில் சம உயர வரப்புகள் அமைக்கப்பட்டன.





வறட்சியின் காரணமாக உழவுத் தொழிலாளர்கள் வேலையில்லாமல் திண்டாடினர். அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக சாலை அமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

பாதுகாப்பு, காடு வளர்ப்பு முதலிய பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. சாலை அமைக்கும் பணிகளுக்குக் கடைசி இடம் கொடுக்கப்பட்டது.

வேலை வாய்ப்புக்கும் வழிவகுப்பதுடன் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி முழுவதிலும் இயன்ற அளவுக்கு நிலையான வளங்களை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். வேலைவாய்ப்புகளைத் தோற்றுவிக்கும் இத்திட்டமானது, 1976ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து டிசம்பர் திங்கள் வரை சுமார் 150 இலட்சம் மனித உழைப்பு நாட்களுக்குரிய வேலை வாய்ப்பை அளித்தது. வேலையில் அமர்த்திக் கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கை அவ்வப்போது வேறுபட்டது; 1976-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் நாள்தோறும் உயரளவாக 1.75 இலட்சம் பேர் வேலையில் அமர்த்திக் கொள்ளப்பட்டனர்.

பயிர்கள் வறட்சியினுல் பாதிக்கப்பட்டு, அறுவடையின்றி, அவல நிலைமைக்கு உள்ளான உழவர்களுக்கு நிவாரணம் அளிக்கும்பொருட்டு, வயல்தோறும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆய்வின் அடிப்படையில், அரசுக்குச் செலுத்தப்பட வேண்டிய நிலவரி நிலுவைத் தொகைகள் முதலியவற்றை வசூல் செய்வதை ரத்துச் செய்யவும், ஒத்தி போடவும் அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இந்த வகையில், 2.18 கோடி ரூபாய் நிலவரி நிலுவை தள்ளுபடி செய்யப்பட்டது; 6.62 கோடி ரூபாய் கடன் நிலுவை வசூல்கள் அடுத்த ஆண்டுக்கு ஒத்தி போடப்பட்டன.

வறட்சி நிவாரணத் திட்டத்திற்கு ஆகும் பெருஞ்செலவைச் சரிக்கட்ட மத்திய அரசின் உதவியை மாநில அரசு வேண்டியது. மத்திய அரசும் திட்ட நிதியுதவி முன்பணமாக 15.70 கோடி ரூபாய் வழங்கியது.

வறட்சி நிவாரணப் பெருந்திட்டத்தை மேற்கொண்டதன் பயனுக, வறட்சிக் கொடுமை குறிப்பிடத்தக்க அளவுக்குக் குறைந்தது. எவரும் பட்டினியால் வாடியதாகத் தகவல் இல்லை. பொறுமைக்குப் பெயர்பெற்ற தமிழக மக்கள் இந்த வறட்சி நிலைமையைத் துணிவுடன் எதிர்த்துப் போராடினர். பல தொண்டு நிறுவனங்களும் வறட்சி நிவாரணப் பணிகளில் பங்கு கொண்டன; அவை நியாய விலையில் கால்நடைகளுக்குத் தீவனம் வழங்கியும், லாரிகள் மூலமாக மக்களுக்குக் குடிநீர் வழங்கியும் தொண்டாற்றின. அரசுக்கு மக்கள் முழுமனத்துடன் அளித்த ஒத்துழைப்பின் பயனுக வறட்சி நிலைமையை அரசு திறமையுடன் சமாளித்து வெற்றி கண்டது.



# வேளாண்மை வளர்ச்சியும் உணவு உற்பத்தியும்



**கே. வெங்கடேசன்,** ஐ.ஏ.எஸ்.,
செயலாளர்,
வேளாண்மைத் துறை,
தமிழ்நாடு அரசு.

---

**த**மிழ் நாட்டின் பொருளாதாரத்தில், வேளாண்மை இன்றியமையாத இடம் பெற்றுள்ளது. இம்மாநிலத்தின் உற்பத்திப் பொருள்களில் 43 சத அளவை வேளாண்மையே அளிக்கிறது. எனவே, நமது பொருளாதார நிலைமை, வேளாண்மையின் அளவையும், அதன் வெற்றியையும் பொறுத்தே அமைகின்றது. ஆனால் வேளாண்மையோ பெரும்பாலும் பருவநிலைமையைப் பொறுத்தே அமைந்துள்ளது. தமிழகத்திலுள்ள பயிரிடத்தக்க 76.5 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் 48 சதம் மட்டுமே பாசன வசதியைப் பெற்றுள்ளது. புன்செய்ப் பயிர் விளையும் எஞ்சிய பகுதி பெருமளவுக்குப் பருவகால மழையை—குறிப்பாக வடகிழக்குப் பருவமழையை—நம்பியே உள்ளது. பாசன வசதியுள்ள நிலங்கள் என்பவை ஆற்றுப்பாசனம், ஏரிப் பாசனம், கிணற்றுப் பாசனம் என்ற மூவழிகளில் பாசன வசதியைப் பெறுகின்றன. இந்த நிலங்கள் நல்ல விளைச்சல் காண்பது என்பது தக்க காலத்தில் போதுமான அளவு பெய்யும் பருவமழையைப் பொறுத்தே அமைகின்றது.

### முக்கியப் பயிர்களும், அவைகளின் பரப்பும்

மாநிலத்தில் விளையும் முக்கியமான பயிர்களும், அவை பயிரிடப்படும் பரப்பும் பின் வருமாறு உள்ளன.

| பயிரின் பெயர் | | பரப்பு எக்டேர் (இலட்சம்) |
|---|---|---|
| நெல் | ... | 26.41 |
| சிறுதானியங்கள் | ... | 19.89 |
| பயறு வகைகள் | ... | 7.07 |
| கரும்பு | ... | 1.55 |
| பருத்தி | ... | 2.99 |
| நிலக்கடலை | ... | 12.53 |


பருவகால நிலைமை 1975-76-ஆம் ஆண்டில் மிகவும் சாதகமாக இருந்தது. இச்சாதகமான நிலைமை 1975-76-ஆம் ஆண்டில் ஒளிமயமான பொருளாதார நிலைமை உருவாவதற்கு வழிகோலியது.

### வறட்சி வாட்டியது !


1975-76-ஆம் ஆண்டின் பிற்பாதியில் வேளாண்மைத்துறையின் மூலம் பெற்ற பயன்களை வைத்து மாநில பொருளாதார நிலை, வலிமை பெறத் தொடங்குவதற்கு முன்னதாக, முன்னொருபோதும் இல்லாத அளவிற்கு 1976-ஆம் ஆண்டில் தென் மேற்குப் பருவ மழை தவறிய காரணத்தால் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க முடியாத நிலைமை மீண்டும் ஏற்பட்டது. செப்டம்பர் முதல், டிசம்பர் வரையுள்ள காலத்தில் பெய்கின்ற வடகிழக்குப் பருவமழையே மாநிலத்தின் முதன்மையான பருவமழையாகக் கருதப்படும். என்றாலும், ஜூன் முதல் செப்டம்பர் வரையுள்ள காலப் பகுதியில் பெய்யும் தென்மேற்கு பருவ மழையின் போது, மாநிலத்தின் நீர்த் தேக்கங்களுக்கு வந்து நிறையும் நீரே, ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் வேளாண்மையின் வெற்றியைப் பெரிதும் நிர்ணயிக்கிறது. 1976-ஆம் ஆண்டின்போது, நீர்த்தேக்கங்களின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் பெய்திருக்கவேண்டிய தென்மேற்கு பருவமழை, முழுவதாகப் பொய்த்தது. மாநிலத்திலுள்ள ஏனைய பகுதிகளில் பெய்த மழையும் ஒழுங்கான அளவில் பெய்யவில்லை. எனவே, ஆற்றுப்பள்ளத்தாக்குகளில் நெற்பயிர் விளைச்சல் பாதிக்கப்பட்டது. அன்றியும் புன்செய்ப் பயிர்கள் விதைப்பும் தாமதப்பட்டது. எனினும், வடகிழக்குப் பருவமழை நன்கு பெய்தமையால் மொத்தத்தில் நல்ல விளைச்சல் காண்பதற்கான வாய்ப்புகள் பெரிதும் ஏற்பட்டன.

### மாற்றிப் பயிரிடும் முறை

மாநிலத்தின் சில பகுதிகளில் தென்மேற்கு பருவமழை பொய்த்ததாலும், வடகிழக்குப்



மாற்றிப் பயிரிடும் முறையினால் மகசூல் பெருகியது!




பருவமழை காலந்தவறிப் பெய்ததாலும், நிலையைச் சமாளிக்க சில உடனடித் திட்டங்களை வேளாண்மைத் துறை உருவாக்கியது. அத்திட்டங்கள் பல்வேறு பகுதிகளுக்குரிய மாற்றிப் பயிரிடும் முறையைக் குறிப்பவை. மாற்றிப் பயிரிடும் முறைத் திட்டம் வகுக்கப் பட்டதும், வேளாண்மைத்துறை அலுவலர்கள் இம்முறையைப் பற்றி நன்கு விளம்பரம் செய்ததும் இப்புதிய பயிரிடும் முறைகளை உழவர்கள் பரந்த அளவில் பின்பற்றியதும், தென்மேற்கு பருவமழை தவறியதால் ஏற்பட்ட இழப்பை பெருமளவு, குறைக்க உதவின. பாதிக்கப் பட்ட ஆற்றுப்பள்ளத்தாக்குப் பகுதிகளில் வழக்கமாகப் பயிரிடும் நெற்பயிருக்குப் பதிலாக குறைவான உழைப்பே தேவைப்படும் பயிர்களான சிறுதானியங்கள், பயறு வகைகள் முதலியவை பெருமளவு பயிரிடப்பட்டன. காவிரியாறு கடலோடு கலக்கும் கழிமுகப் பகுதியில் அமைந்துள்ள தஞ்சாவூர் மாவட்டத்தில் கல்லணைக் கால்வாய்ப் பகுதியில் புன்செய்ப் பயிர் போல விதைக்கப்படும் புழுதிச் சம்பா நெல்லையும், புன்செய்ப் பயிர்களான மக்காச்சோளம், கேழ்வரகு, பயறு வகைகள் முதலியவற்றையும் பயிரிட்டதன் மூலம் பெரும்பகுதி நிலங்கள் தரிசாகக் கிடப்பது தவிர்க்கப்பட்டது. மாற்றிப் பயிரிடப்படும் முறைத் திட்டமானது, வறட்சி காரணமாக, பயிரிடப்படும் பரப்பளவு மிகவும் குறைந்து விடாமல் தடுப்பது, கிராமத்தில் உள்ள தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகள் தொடர்ந்து கிடைக்கச் செய்வது என்ற இரட்டைப் பயன்களை விளைவித்துள்ளது.

## புன்செய் நிலங்களில் ஆண்டுக்கு இருபோகம் பயிரிடுதல்

நமது மாநிலத்தில் புன்செய் நிலங்களே உள்ள சில பகுதிகளில் பொதுவாக ஆண்டுக்கு ஒரு பயிர் மட்டுமே பயிரிடப்படும்; அத்தகைய இடங்களில் குறுகிய காலத்தில் விளையும் பயிர்களைப் பயிரிட்டும், ஏற்ற வகையில் விதைப்புக் காலத்தை மாற்றியும் ஆண்டில் இருபோகம் பயிரிடும் முறை புகுத்தப்பட்டது. வழக்கமான புன்செய்ப் பயிர்களையே பயிரிட்டு-குறைந்த பலனே காணுகின்ற நிலங்களில்—குறிப்பாகத் தென் மாவட்டங்களின் நிலங்களில்—வீரிய ஒட்டு ரகங்களையும் உயர் விளைச்சல் சிறுதானிய ரகங்களையும் பயிரிடும் முறையை வேளாண்மைத் துறையைச் சேர்ந்த களப்பணியாளர்களால் வெற்றிகரமாக அறிமுகப்படுத்த முடிந்துள்ளது. புன்செய் நிலங்களில் ஆண்டுக்கு இருபயிர்களைப் பயிரிடுவதில் நாம் பெற்றுள்ள வெற்றி, 'புன்செய்ப் பயிர்த் தொழிலில் குறிப்பிடத்தக்கச் சாதனையாகும்.

## பின் பருவம் மற்றும் கோடைத் திட்டம்

நம் மாநிலத்தில் வடகிழக்குப் பருவமழைக் காலத்தின் பிற்பாதியில் மழை நன்கு பெய்தது. மிகுதியான நிலப்பரப்பில் பயிரிடுவதற்கான வாய்ப்புகள் பெருகியுள்ளன. இந்த ஆண்டின் தொடக்கத்தில் உற்பத்தியில் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்யும் பொருட்டு, வரப்போகும் பின் பருவம் கோடைக் காலத்தின் போது, பயிர் விளைச்சலைப் பெருக்க சிறப்புத்திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் பின் பருவத்தில் வழக்கமாக 5 இலட்சம் ஏக்கரில் நிலக்கடலை பயிரிடப்படும். இந்த சிறப்புத் திட்டத்தின் கீழ், நிலக்கடலை பயிரிடப்படும் பரப்பை 7 இலட்சம் ஏக்கராக உயர்த்துவதற்குத் தனி முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மக்களின் துன்பங்களைத் தவிர்ப்பதற்கும்—நீக்குவதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அவற்றுள் முக்கியமான ஒன்று இராஜபாளையம் வட்டத்தில் மணற்காற்று வீசியதால், மணல் குவிந்து மூடிய 2,572 ஏக்கர் நிலத்தை 45 நாட்களுக்குள் பண்படுத்தியதாகும். வறட்சி நிவாரணப் பணிகள் கிராமப் பகுதிகளிலுள்ள உழவுத் தொழிலாளர்களுக்குப் பெருமளவில் வேலை வாய்ப்புகளை அளித்தன. அவற்றுடன் அப்பகுதிகளில் நீண்டகால வறட்சியினால் விளைந்த தீய விளைவுகளைக் களைவதற்கும் அவை உதவின.

புன்செய் நில உழவர்களுக்கு உதவும் வகையில் மேற்கொண்ட இன்னொரு பய


மிகுபயன் தரும் கே. எம். 1 கம்பு.



வேளாண்மைத் துறையினரின் அயராத முயற்சியால் மணல் குவிந்து மூடிய 2,572 ஏக்கர் நிலம் 45 நாட்களுக்குள் பண்படுத்தப்பட்டது!

னுள்ள பணி, விதைக்கும் கருவிகளைத் தயாரித்து அவற்றை இலவசமாக அவர்களுக்கு வழங்கியதாகும். வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ், இப்போதுதான் முதன் முதலாக கிராமங்களிலுள்ள கருமார்களையும், தச்சர்களையும் துணைக் கொண்டு விதைக்கும் கருவிகள் 1,000 தயாரிக்கப்பட்டுப் புன்செய் நில விதைப்புக்காகக் கொடுக்கப்பட்டன. இக்கருவிகளைக் கொண்டு புன்செய் நிலங்களில் மிகப் பெரும் பரப்பளவில் மிக விரைந்து விதைக்க முடிந்தது. இதனால், மழை பெய்த பின்னர் — நிலத்தில் ஈரம் உலரும் முன்பாக— விதைக்க முடிந்தால், ஈரத்தன்மையின் பயனை அதிக அளவில் அடைய முடிந்தது. அதற்குப் பெரிதும் உறுதுணையாக அமைந்ததால், இந்த கருவிகளின் பயனை அனைவரும் போற்றினர்.

## சாதனைகள்

இவ்வாண்டின் நிறைவேற்றப்பட்ட சில திட்டங்கள் பற்றிய முக்கிய விவரங்கள் பின் வருமாறு:

| பணி | சாதனைகள் (எண்ணிக்கை) | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| மண்வளப் பாதுகாப்பு | 78,515 ஏக்கர் | 60.61 |
| கசிவு நீரைத்தேக்கி வைக்கும் குட்டைகள் அமைத்தல் | 226 குட்டைகள் | 47.57 |
| மணல் மூடிய நிலங்களைப் பண்படுத்தல் | 2,572 ஏக்கர் | 11.48 |
| கிணறுகளில் தூர் வாருதல் | 120 கிணறுகள் | 0.43 |
| விதைக்கும் கருவிகளை வழங்குதல் | 1,012 விதைக்கும் கருவிகள். | |

## சிறுபாசனத் திட்டம்

சிறுபாசனத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் பல்வேறு திட்டங்களின் வாயிலாக ஏற்பட்ட முன்னேற்றங்களாவன:


| | (எண்ணிக்கை) |
|---|---|
| அமைக்கப்பட்ட தனியார் குழாய்க் கிணறுகள் | 2,631 |
| கிணறுகளில் துளை போடப் பட்டவை | 1,692 |
| அமைக்கப்பட்ட வடிமுனைக் குழாய்க் கிணறுகள் | 2,491 |
| ஆழப்படுத்தப்பட்ட கிணறுகள் | 1,078 |

## இடுபொருள்கள் வழங்குதல்

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தேவைப்படுகின்ற விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், பயிரிடு கடன்கள் ஆகியவை நாடெங்கிலுமுள்ள விவசாயக் கிடங்குகள் மூலம் நேரடியாகவும், ஏனைய முகவரமைப்புக்கள் மூலமாகவும் வழங்கப்பட்டன. நெல் பயிரிடப்படும் நிலப் பரப்பளவு குறைந்துள்ள போதிலும், நடப்பு ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட இரசாயன உரங்களின் அளவு, கடந்த ஆண்டில் இதே கால அளவில் விற்பனை செய்யப்பட்ட இரசாயன உரங்களின் அளவினை ஏறத்தாழ ஒத்ததாக இருந்தது.

## பூச்சிகளும், நோய்களும் கட்டுப்படுத்தப்பட்டன!

பயிர்களைப் பூச்சிகளும், நோய்களும் தாக்குகின்றனவா என்பது பற்றித் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வந்துள்ளது. பூச்சிகளும், நோய்களும் தாக்கா வண்ணம் தடுப்பு நடவடிக்கைகளும், அவை தாக்கிய இடங்களில் மருந்து தெளித்தல், முதலான கட்டுப்படுத்




தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. மாநிலத்தின் மற்றெல்லா இடங்களிலும் பயிர்களைத் தாக்கி வழக்கமாகத்தொல்லை கொடுக்கிற பழுப்பு நிறத்துப் பூச்சிகள், இந்த ஆண்டில் காவிரி கழிமுகப் பகுதிகளில் உள்ள பயிர்களைச் சேதப்படுத்த முற்பட்டன. ஆனால் தக்க தருணத்தில் நாம் நடவடிக்கை எடுத்ததன் விளைவாக அவற்றின் தொல்லை மிகுந்து விடாமல் தொடக்கத்திலேயே கட்டுப்படுத்தப்பட்டது.

மாநிலத்தின் எப்பகுதியிலும் கடந்த 9 மாதங்களில் பயிருக்குக் கடுமையான தீங்கு விளைவிக்கும் பூச்சிகளோ, நோய்களோ தோன்றவில்லை.

## உற்பத்திப் பெருக்கம்

*1975-76*-ஆம் ஆண்டில் நமது மாநிலத்தில் அரிசி உற்பத்தி, முன்னெப்போதையும் விட (*59.00* இலட்சம் டன்) மிகுதியாக இருந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கவொன்றாகும். அன்றியும் ஒரு எக்டேரின் உற்பத்தித் திறனும் அந்த ஆண்டில் மிக அதிகமாகும் (ஒரு எக்டேருக்கு *2,200* கிலோ).

நடப்பு ஆண்டில் பல்வேறு பயிர்களினின்றும் எய்தத் திட்டமிட்டுள்ள பொருள்களின் உற்பத்தி அளவுகள் பின்வருமாறு உள்ளன.

| பயிரின் பெயர் | இலட்சம் (டன்) |
|---|---|
| நெல் (அரிசி) ... | 63.00 |
| சிறு தானியங்கள் | 18.00 |
| பயறு வகைகள் | 2.70 |
| கரும்பு (வெல்லம்) | 13.90 |
| எண்ணெய் வித்துக்கள் | 13.43 |
| பருத்தி (பேல்கள்) | 3.50 |

பருவ நிலைகள் பாதகமாக இருந்தபோதிலும், அரிசியைத் தவிர மற்ற இனங்களில் உற்பத்திக் குறிக்கோள் அளவை அடைய முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறுவை பயிரிடும் காலத்தில் கூடுதல் நிலப்பரப்பில் நெல் பயிரிடுவதன் மூலம், அரிசி உற்பத்தி குறிக்கோள் அளவில் ஏற்பட்ட குறைவினைக் கூட ஓரளவு நாம் சரிக்கட்ட முடியும்.

நடப்பு ஆண்டில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதனால் உணவுப் பொருள்களின் விலைவாசி உயராமல் ஒரே அளவில் இருந்தது. அதன் மூலம் மாநிலத்தின் பொருளாதார நிலையும் சீரடைந்தது.




# நாட்டு மக்களின் நலன் காக்க கூட்டுறவு செய்த பணி


செல்வி எம். எஸ். ரமேஷ், ஐ.ஏ.எஸ்.,
செயலாளர்,
கூட்டுறவுத்துறை,
தமிழ்நாடு அரசு.

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் - 1976-77-ஆம் ஆண்டில் இம்மாநில மக்களுக்கு ஆற்றவேண்டிய பணிகளைப் பெருக்குவதிலும் மேம்படுத்துவதிலும் ஈடுபட்டு, பலதுறைகளில் மிக வேகமான, விரிவான வளர்ச்சியைப் பெற்றது என்று கூறலாம்.

**உறுப்பினர்கள் சேர்ப்பதில் தீவிரம்!**

கூட்டுறவு என்று சொன்னாலே அதன்பொருள், கூட்டுறவுக் கடன் வழங்கு பணிதான் என்று யாவர் மனத்திலும் தோன்றும். தமிழ்நாட்டின் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள குடும்பங்கள் ஏறத்தாழ 54 இலட்சம் இருக்கலாம். 31-1-'76-ஆம் நாள் வரையில், கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த குடும்பங்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 27.98 இலட்சம் மட்டுமே. எனவே, கூட்டுறவுச் சங்கங்களில் மேலும் கூடுதலாக உறுப்பினர்களைச் சேர்க்கும் இயக்கம் தொடங்கப்பட்டது. இவ்வியக்கம் பெருமளவிற்கு வெற்றி பெற்றது. அதன் வாயிலாக, 1976 நவம்பர் 30-ஆம் நாள்வரை கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகிய குடும்பங்களின் எண்ணிக்கை 35.84 இலட்சமாக உயர்ந்தது. கூடுதலாகச் சேர்க்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை 7.86 இலட்சமாகும். இந்த எண்ணிக்கையில் 6.07 இலட்சம் குடும்பங்கள், சிறு உழவர்கள், ஆதாயம் பெறமுடியாத சிறு உழவர்கள், நிலமற்ற ஏழைக் குத்தகைதாரர்கள் ஆகியோர் அடங்கியுள்ளனர்.





வேளாண்மைக் கடன்கள் விரைந்து வழங்கப்படுகின்றன!

நமது பாரதப் பிரதமரின் 20 அம்சத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள், சமுதாயத்தில் எளிய நலிந்த பிரிவினர்க்கு உதவுவதாகும். அந்த வகையில், இங்கே குறிப்பிட்டுள்ள, சமுதாயத்தின் எளிய, நலிந்த பிரிவினரைக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்த்து அதன் பயனடைய வகை செய்ததன் மூலம், அவர்களுக்கு உதவும் நோக்கினை உடைய தலையாய திட்டத்தை நாம் சிறப்பாகச் செயற்படுத்தியுள்ளோம்.

**வேளாண்மைக்குக் கடன்**


உழவர் குடும்பங்களுக்கு வழங்குகின்ற வேளாண்மைக் கடன்களின் அளவையும், கடன் வழங்கப்படுவோர் எண்ணிக்கையையும் உயர்த்துவதில் கவனம் செலுத்தப்பட்டது. கடன் வழங்குவதால் விளைகின்ற நன்மைகளும் பெருக வேண்டும்.

1976-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் 100 கோடி ரூபாய் மட்டுமே வேளாண்மைக் கடனாக வழங்கப்பட்டது. 1977-ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் விவசாயிகளுக்கு வேளாண்மைக் கடனாக 115 கோடி ரூபாய் வழங்குவது எனத் திட்டமிடப்பட்டுள்ளது. 1976-ஆம் ஆண்டில் பிப்ரவரித் திங்களில் தொடங்கி நவம்பர் திங்களுக்குள்ளாக, மொத்தம் 81 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையில் ஏறத்தாழ 46 சதவீதம் தொகை, சமூகத்தில் நலிந்துள்ள பிரிவினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

வேளாண்மைக் கடன்கள் வழங்கு பணியில் கூட்டுறவுகள் தமது தன்மைச் சிறப்பால் உயர்ந்து விளங்கின என்பதை ஒரு குறிப்பிட்ட பயிர் விளைவிக்கப்படும் பரப்பளவு, அந்தப்பயிருக்கு மொத்தக் கடனிலிருந்து ஒரு சங்கம் வழங்கியுள்ள கடன் அளவின் விழுக்காடு ஆகியவற்றுக்குரிய தொடர்பைக் கொண்டு அறியலாம். எடுத்துக்காட்டாக, சேலம் மத்திய கூட்டுறவு வங்கி வழங்கியுள்ள கடன் அளவைப் பற்றிய புள்ளி விவரங்களை ஆய்ந்தால், மேற்சொன்ன தொடர்பின் மூலம் வேளாண்மைக் கடன்கள் வழங்கியதால் விளைந்த பயன்கள் பெருகியுள்ளன என்பதை நன்கு அறியலாம். சேலம் மத்திய கூட்டுறவு வங்கி, 1975-ஆம் ஆண்டில், நெல், வேர்க்கடலை போன்ற பயிர்களைப் பயிரிடுவதற்கு வழங்கியதைக் காட்டிலும், மரவள்ளிக் கிழங்கு, வாழை, கரும்பு போன்ற பயிர்களுக்கு உயர்ந்த அளவில் கடன்களை வழங்கியுள்ளது. மற்றப் பயிர்களைக் காட்டிலும் இந்தப் பயிர்களுக்கே முதலிடம் கொடுத்துக் கடன் வழங்கியதானது, இவை பணப்பயிர்களாதலால் வழங்கிய கடன்கள் திருப்பிச் செலுத்தப்படுவதற்கு உத்தரவாதம் உள்ளது என்னும் எண்ணத்தில் செய்யப்பட்ட செயல் என்று சிலர் குறைகூறினார்கள். ஆயினும் அக்குற்றச்சாட்டு முற்றிலும் உண்மையே. இக்காரணத்தால், நெல் பயிரிட்டிருந்தவர்கள் கூட, தாம் மரவள்ளிக் கிழங்கு பயிரிட்டுள்ளதாகக் கூறிக் கடன் பெற்றனர்.

ஆகவே, கிராம வருவாய்க் கணக்குகளில் குறிப்பிட்டுள்ளபடி ஒவ்வொரு பயிரும் பயிரிடப்பட்டுள்ள சரியான பரப்பளவினைக் கருத்தில் கொண்டு முறையான ஆய்வு ஒன்று கூட்டுறவுத் துறையின் சிறப்பு அதிகாரியால் மேற்கொள்ளப்பட்டது; ஒவ்வொரு பயிரும், பயிர் செய்யப்பட்டுள்ள சரியான பரப்பளவைச் சரிபார்த்து அந்த அடிப்படையிலேயே ஒவ்வொரு பயிருக்கும் கடன் வழங்கும் முறையும் அளவும் வரையறுக்கப்பட்டன. இவ்வாறு மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் வகுத்துக் கொண்ட கடன் வழங்குமுறை, சிறப்பானதாகவும் சரியானதாகவும் அமைந்ததைக் கீழ்க்காணும்அட்டவணையிலிருந்து அறியலாகும்:

| பயிர் | 1-4-76 முதல் 31-10-76 வரை வழங்கப்பட்ட கடன்கள். | | 1-4-75 முதல் 31-12-75 வரை வழங்கப்பட்ட கடன்கள். | |
|---|---|---|---|---|
| | பரப்பு (ஏக்கரில்) | தொகை (ரூ. இலட்சத்தில்) | பரப்பு (ஏக்கரில்) | தொகை (ரூ. இலட்சத்தில்) |
| மரவள்ளிக் கிழங்கு | 9,848 | 83.71 | 40,742 | 339.37 |
| கரும்பு | 6,351 | 76.58 | 8,087 | 98.98 |
| நெல் | 19,492 | 137.93 | 2,139 | 11.51 |
| நிலக்கடலை | 30,173 | 102.13 | 1,566 | 7.83 |
| வாழை | 880 | 21.06 | 5,039 | 62.98 |



### செயல்படாத சங்கங்கள் கலைக்கப்பட்டன !

கூட்டுறவுத்துறையின் தன்மைச் சிறப்பு உயர்ந்து விளங்க எடுக்கப்பட்ட, நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்கவொன்று, ஆதாயமின்றித் தனித்தியங்க முடியாமலும் எவ்வகையிலும் செயல்படாமலும் இருந்த கூட்டுறவுச் சங்கங்களைக் கலைப்பதற்கென மேற்கொள்ளப்பட்ட 'களையெடுப்பு' நடவடிக்கை ஆகும். களையெடுப்பு நடவடிக்கையை, எடுத்துக்காட்டு ஒன்றால் விளக்கலாம். இறைவைப் பாசனச் சங்கங்கள் என்ற பெயரில் 2,442 சங்கங்கள் இருந்தன. இவற்றில் மிகப் பெரும்பாலானவை செயல்படத் தொடங்கவே இல்லை. இவ்வளவு எண்ணிக்கையில் 123 சங்கங்கள் மட்டுமே ஆதாயத்துடன் செயல்படுவதற்கான சிறிதளவு வாய்ப்பினைப் பெற்றிருந்தன. இந்த 123 சங்கங்கள் நீங்கலாக எஞ்சிய 123 சங்கங்களையும் மூடி விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அண்மையில் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தையும் அரசு திருத்தியுள்ளது. கூட்டுறவு சங்கங்கள் சிலவற்றை ஒன்றாக இணைப்பது, பொது மக்கள் நலனுக்குத் தேவையான ஒன்றாக இருப்பின், கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளர் விரைவாக அச்சங்கங்களை இணைப்பதற்கு இச்சட்டத் திருத்தம் உதவுகிறது.

மக்களுக்கு இன்றியமையாப் பண்டங்களை வழங்கும் பணியில், கூட்டுறவுச்சங்கங்கள் தொடர்ந்து முதன்மையான பங்கினை ஆற்றி வந்துள்ளது. இன்றியமையாப் பண்டங்களை வழங்கும் சில்லறை விற்பனைக் கடைகள் 9,000 உள்ளன. அவற்றில் 7,000 சில்லறை விற்பனைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுகின்றன. இன்றியமையாப் பண்டங்களை வழங்கும் பணியில் தொடக்கச் சங்கங்கள் மேலும் குறிப்பிடத்தக்க சிறப்பான பங்கினை ஆற்ற உதவுவதற்கு அரசு முன் வந்துள்ளது. இச்சங்கங்கள் பயன்கொள்வோர்க்கு இன்றியமையாப் பண்டங்களை வழங்கும் வாணிகத்திற்கென, மத்தியக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து ஏழு கோடி ரூபாய் அளவிற்கு வாங்கியுள்ள கடன்களைத் திருப்பிக் கொடுக்க அரசு உத்தரவாதமளித்துள்ளது.

### நுகர்வோர் நலன் காக்கும் திட்டம்

'கிராமப்பகுதி வாழ் நுகர்வோர் திட்டம்' என்னும் ஒரு திட்டத்தை தேசியக் கூட்டுறவு வளர்ச்சி மன்றம் மேற்கொண்டுள்ளது. அரசு இத்திட்டத்தையும் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளது. மொத்த விற்பனைப் பண்டகசாலைகளின் பங்கு மூலதன அளவை உயர்த்த இத்திட்டம் வழி வகுக்கிறது. அன்றி



யும் அவை தமக்கென மேசை, நாற்காலி முதலிய சாமான்களை வாங்கிக் கொள்ளவும், சரக்குகளை விரைந்து எடுத்துச் செல்வதற்கு வண்டியொன்று வாங்கவும் நிதியுதவி அளிக்கிறது. இந்தத் திட்டங்களின் கீழ் மொத்தம் 10 செயல் திட்டங்கள் தொடர்பாக 13.88 இலட்சம் ரூபாய் செலவிட 1976 ஆம் ஆணடு மார்ச் திங்களில் அனுமதி வழங்கப்பட்டது. இதன் மூலம், 232 தொடக்கச் சங்கங்கள் நுகர்வோர் மொத்த விற்பனைப் பண்டக சாலைகளுடன் இணைக்கப்பட்டன. இத்தகைய மேலும் 15 செயல் திட்டங்களில் மொத்தம் 18.86 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கிடவும் இதன் மூலம் 325 கிராமக் கடன் வழங்கு சங்கங்களையும் 12 மொத்த விற்பனைப் பண்டகசாலைகளையும் இணைக்கவும் அண்மையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் 43 நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தொடக்கச் செலவுப் பணமாக 29 இலட்ச ரூபாய் வழங்க இசைவளிக்கப்பட்டது; அச்சங்கங்கள் இன்றியமையாப் பண்டங்களை விற்பனை செய்யும் பொருட்டு, கடனுதவியளிக்கின்ற ஏனைய வங்கிகளிடமிருந்து பெருமளவில் வங்கிக்கடன் பெறுவதற்கு இந்தப் பணம் உதவும்.

நுகர் பொருள் விற்பனை-வாணிகத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் குறிப்பிடத்தக்க சிறப்புடைய பங்கினை ஆற்றியுள்ளன என்பது தெளிவாகப் புலப்படுகிறது. எவ்வாறெனில், கூட்டுறவுப் பண்டகசாலைகள் மூலமாக 1974-'75-ஆம் ஆண்டில் விற்பனையாகிய நுகர் பொருட்களின் மதிப்பு 120.93 கோடி ரூபாய் அளவுக்கே இருந்தது; பின்னர் 1975-'76ஆம் ஆண்டில், இந்த அளவு 144.65 கோடியாக உயர்ந்தது; 1976-ஆம் ஆண்டில், ஜூலைத் திங்கள் முதல் செப்டம்பர் திங்கள் வரையிலான கால அளவில், இந்த அளவு 48.65 கோடி ரூபாயை எட்டியது. விற்பனையளவு உயருகின்ற இந்த வேகம் நீடிக்குமானால், 1976-'77ஆம் ஆண்டில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த வாணிகத் தொகை 200 கோடி ரூபாயை எட்டவும் கூடும்.

### மலிவு விலைத் துணி விற்பனை !

தமிழ்நாட்டில் விலைக்கட்டுப்பாடு குறிக்கப்பட்ட மலிவு விலைத் துணி, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மட்டுமே விற்பனை செய்யப்படுகின்றன. இவ்வாறு கட்டுப்பாட்டு விலைத் துணியை விற்பனை செய்யும் சில்லறை விற்பனைக்



மலிவு விலைத் துணிகள், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவே வழங்கப்படுகின்றன!

கடைகள் 1976-ஆம் ஆண்டில் தொடக்கத்தில் 4,276 இருந்தன இந்த எண்ணிக்கை 1976-ஆம் ஆண்டு இறுதியில் 4687 ஆக உயர்ந்தது. இவற்றில் 4,007 சில்லறை விற்பனைத் துணிக் கடைகள் கிராமப்பகுதிகளில் உள்ளன. 1976-ஆம் ஆண்டில், பிப்ரவரியில் தொடங்கி நவம்பர் முடிவிற்குள்ளாக, இக்கடைகள் மூலமாக 15,342 பேல் துணி, விற்பனை செய்யப்பெற்றது. விலைக்கட்டுப்பாட்டுத் துணியை விற்பனை செய்வதற்காகக் கூடுதலான நடைமுறை மூலதனத்தை திரட்டுவதற்காக, இந்திய அரசும் கூட, 35 கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தொடக்கச் செலவுப் பணமாக 9.28 இலட்சம் ரூபாய் வழங்க இசைவளித்துள்ளது.

### மாணவர் பெற்ற பயன் !

ஆண்டின் தொடக்கத்தில், நுகர்வோர்க் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 195 மாணவர் விடுதிகளுக்கு மட்டுமே இன்றியமையாப் பண்டங்கள் வழங்கப்பட்டன. 1976-ஆம் ஆண்டில் டிசம்பர் திங்கள் வாக்கில் இவ்வாறு பண்டங்கள் வழங்கப்பட்ட விடுதிகளின் எண்ணிக்கை 240 ஆகவுயர்ந்தது. அதனால் விடுதி மாணவர்கள் செலுத்த வேண்டிய உணவுக்கட்டணம் பெருமளவில் குறையலாயிற்று. அத்துடன் வாங்கப் பெற்ற பண்டங்கள் தரமானவையாக-கலப்படமற்றவையாக இருந்தன என்பதால் மாணவர்களும் மன நிறைவடைந்தனர்.

மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் வசதி பெருமளும்,

மாணவர் விடுதிகளில் உணவுக் கட்டணம் குறைந்ததற்கு, நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களே காரணமாகும்!



குறைந்த கட்டணத்தில் உணவு பெற முடியாமலும், உள்ள கல்லூரி மாணவர்களுக்கு உதவுவதற்கென, கல்லூரிகளிலுள்ள நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகச்சாலைகளின் மூலமாக பொதுச் சமையல் கூடங்களை அமைக்க 1976-ஆம் ஆண்டில் நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது. அண்மையில், மதுரையிலுள்ள தியாகராசர் பொறியியற் கல்லூரியில் இத்தகைய 'கல்லூரி மாணவர் பொதுச் சமையற் கூடம்' ஒன்றை நிறுவுவதற்கு இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதைப் போன்றே, மேலும் பல பொதுச் சமையற் கூடம் இம்மாநிலத்திலுள்ள எல்லாக் கல்லூரிகளிலும் அமைய வாய்ப்பு உள்ளது.

### பாட நூல்களை விற்பதில் கூட்டுறவின் பணி

இம்மாநிலத்தின் கூட்டுறவு இயக்கத்திற்குப் புகழ் சேர்க்கின்ற வகையில் அமைந்த குறிப்பிடத்தக்க முதன்மைச் சிறப்புடைய இன்னொரு நடவடிக்கை அரசுப் பாடநூல் நிறுவனம் வழங்கும் பாடநூல்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக விற்பனை செய்து வருதல் ஆகும். இதுகாறும் அரசுப் பாடநூல்களை விற்பனை செய்யும் பணியைத் தனிப்பட்ட வணிகர்களே செய்து வந்தனர். 'அவர்கள் உரியநேரத்திற்குள் பாடநூல் நிறுவனத்திடமிருந்து புத்தகங்களை எடுத்து வருவதில்லை-தாமதித்தே எடுத்து வருகின்றனர்' என்றும் 'அதனால் கல்வியாண்டு தொடங்கிய பின் உரிய காலத்திற்குள் புத்தகங்கள் கிடைக்கத் தவறின' என்றும் புகார்கள் இருந்ததால் கூட்டுறவுச் சங்கங்கள் இந்தச் சிரமமான பணியைத் தாமே மேற்கொள்ள முன்வந்தன.

கூட்டுறவுச் சங்கங்கள் இப்பணியை மேற்கொண்ட முதல் ஆண்டிலேயே 2.55 கோடிரூபாய் மதிப்புள்ள 169 இலட்சம் புத்தகங்கள் கூட்டுறவுச் சில்லறை விற்பனைக் கடைகள் மூலமாக விற்பனையாயின.

புத்தகங்களைக் கிடங்கிலிருந்து எடுத்து வருவது, சில்லறை விற்பனைக் கடைகளுக்குக் கொடுப்பது, அங்கு மாணவர்களுக்கு விற்பது ஆகிய இந்தப் பணிகள் யாவும் உரிய காலத்திற்குள், பள்ளிகள் கோடை விடுமுறைக்குப் பின் திறக்கப்படுவதற்குப் பல நாட்கள் முன்னதாகவே செய்து முடிக்கப்பட்டன.

இந்திய அரசிடமிருந்து சலுகை விலையில் 400 டன் பேப்பர் வாங்கப்பட்டு அவை பாடக் குறிப்பு ஏடுகளாக உருவாக்கப் பெற்று, சலுகை விலையில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.


### ரொக்கக் கடன்

தமிழ்நாட்டில் கடன் நிவாரணச் சட்டம், கடன்வசூல் ஒத்திவைப்புச் சட்டம் ஆகியவை செயல்படுத்தப் பட்டுள்ளன. அதன் விளைவாக, அடகுக்கடைக்காரர்கள் வட்டிக்குக் கடன் கொடுப்போர் . ஆகியவர்களைப் போல, ரொக்கக் கடன் தரும் தொழிலை வழிவழியாகச் செய்து வருவோரிடமிருந்து ரொக்கக் கடன் வசதி கிடைக்கும் அளவு குறைந்து விட்டது. இதனால், ரொக்கக் கடன் வசதியைத் தருகின்ற பொறுப்பானதும், சங்கடங்கள் நிறைந்ததுமான பணியை ஏற்கின்ற பெரிய பொறுப்பு, கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்பட்டது.

கூட்டுறவு நகர வங்கிகள் 1-2-76இல் தொடங்கி 30-11-76 ஆம் நாள் வரையிலான கால அளவில், 3.45 இலட்சம்பேருக்கு

மாணவர்களுக்குரிய பாடநூல்களை விற்பனை செய்வதிலும் கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாகப் பணியாற்றுகின்றன!





சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கடன் வழங்கப்படுகிறது.

20.12 கோடி ரூபாய், நகைகள் ஈட்டின் பேரில் கடனாக வழங்கியுள்ளன.

கிராமப்பகுதிகளில், மத்தியக் கூட்டுறவு வங்கிகள் தமது கிளைகள் மூலமாகவும் பெரிய, கூட்டுறவு வேளாண்மைக் கடன் வசதிச் சங்கங்கள் மூலமாகவும் ரொக்கக்கடன்கள் வழங்கும் அளவை உயர்த்தியுள்ளன.

இச்சங்கங்கள் 1-2-76 முதல் 30-11-76 வரையிலான கால அளவில் 1.88 இலட்சம் பேருக்கு 11.22 கோடி ரூபாய் அளவிற்கு நகை ஈட்டுக்கடன்கள் வழங்கியுள்ளன. இவ்வாறு பார்த்தால் 1976, பிப்ரவரி முதல் நாளுக்கு முன்னர், எல்லாக்கூட்டுறவுச் சங்கங்களும் வழங்கிய நகை ஈட்டுக் கடன்கள் மாதமொன்றுக்குச் சராசரியாக 1.82 கோடி ரூபாய் அளவிலேயே இருந்தது என்பதும் அந்நாளுக்குப் பின்னர் நவம்பர் திங்கள் வரையிலான கால அளவில், திங்கள் ஒன்றுக்கு வழங்கப்பட்ட நகை ஈட்டுக் கடன்களின் சராசரி அளவு 3.13 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது என்பதையும் அறியலாம்.

**நலிந்தவர்களுக்குச் செய்த நற்பணி!**

உழவர் சமுதாயத்தில் எளிய, நலிந்த பிரிவினருக்குக் கூட்டுறவு வேளாண்மைக் கடன் வசதிச் சங்கங்கள் மூலமாக நபர் ஜாமீன் பேரில் ரொக்கக் கடன்கள் வழங்கும் பணியும் நடைபெற்று வருகின்றது. உழவர் சமுதாயத்தில் நலிந்த பிரிவினரான சொந்தமாக பாசன வசதியுடைய 2.5 ஏக்கர் நிலம் அல்லது அதற்குக் குறைவான நிலம் உடைய உழவர்கள், அல்லது 5 ஏக்கர் புன்செய் நிலம் உடைய உழவர்கள், நிலமற்ற குத்தகைதாரர்கள், விவசாயக் கூலிகள், கைத்தொழிலாளர்கள் ஆகியோர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரொக்கக் கடன் வசதி பெறுகின்றனர். இவ்வாறு வழங்கப்படும் கடன்கள் ரூ. 75 முதல் ரூ. 250-க்குள் தான் வழங்கப்படும் என வரையறுக்கப்பட்டுள்ளது. இக்கடனும் திருமணங்கள், மருத்துவச் செலவு, ஈமச் சடங்குகள் போன்ற இன்றியமையாத நிகழ்ச்சிகளுக்காக மட்டுமே வழங்கப்படும். கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் ரொக்கக் கடன் வசதிகளுக்கு இந்திய ரிசர்வு வங்கி மறு நிதியுதவி அளிப்பதில்லை.

ஆயினும், சமுதாயத்தின் நலிந்த பிரிவினர்க்கு ரொக்கக் கடன் வழங்குவது என்ற தேசிய பொறுப்புணர்ச்சியைக் கொண்டிருக்கின்ற காரணத்தால் தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு வங்கிகள் இந்தச் சுமையான பொறுப்பைத் தயங்காமல் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. 1975-76-ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் ரொக்கக் கடன் வசதி வகையில் 22 கோடி ரூபாய் மட்டுமே வழங்கின; 1976-77-ஆம் ஆண்டில் இவ்வகையில் இவை 40 கோடி ரூபாய் முதல் 45 கோடி ரூபாய் வரையில் வழங்கக் கூடும். இப்பணியில், தமிழ்நாட்டின் கூட்டுறவுத் துறை ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது என்பது பெருமை தருவதாகும்.



நலிந்த பிரிவினரின் வாழ்வில் வளம் சேர்க்க, நடப்பு ஆண்டில் 40 முதல் 45 கோடி ரூபாய் கூட்டுறவு மூலம் வழங்கப்படவிருக்கிறது.

# அஞ்சலக வங்கியின்
# மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் **ஜனவரியிலும் ஜூலையிலும்** நடைபெறும்

**ரூ. 20½ இலட்சத்திற்கு**
**11,116 பரிசுகள்**

*ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட*
***11,116** பரிசுகள் உண்டு.*


| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆரும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

*ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/–க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.*

*உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறாதவர்க்கும் அளிக்கப்படும்.*

*விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.*

**இயக்குநர்,**
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.




# தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி!

டி. என். சேஷன், ஐ.ஏ.எஸ்.,
செயலாளர்,
தொழில் துறை,
தமிழ்நாடு அரசு.

தமிழ்நாடு 1950-65-ஆம் ஆண்டுகளில் தொழில் துறையில் குறிப்பிடத்தக்கதொரு பெரு முன்னேற்றத்தைப் பெற்றிருந்தது. இவ்வாண்டுகளில் பல்வகைத் தொழில்கள் விரிவுபடுத்தப்பட்டன. ஒவ்வொரு தொழிலும் பல்வேறு துறைகளில் வளர்ச்சியடைந்தது. புதிய பொருட்களை உற்பத்தி செய்வதோடு மட்டுமல்லாமல், நவீன இயந்திரங்களும் உருவாக்கப்பட்டன. இந்த வளர்ச்சி, குறிப்பிட்ட துறைக்குள் நின்றுவிடாமல், பொதுத்துறை, தனியார்துறை என இரு துறைகளிலும் ஏற்பட்டது. அதுபோல், சிறுதொழில் துறையும் வளர்ச்சி அடைந்துள்ளது. தொழில் முனைவோர் திறம்படச் செயலாற்றவும், தொழில் புரியவும் ஊக்கமளிக்கப்பட்டனர். மாநில அரசும் அவர்கட்குப் பேராதரவு அளித்துத் தொழில் துறையை வளர்த்தது. அனைத்திந்தியாவிலும் தமிழகம் தொழில் துறையில் முக்கியமானதோர் இடத்தை வகித்து வந்துள்ளது. சிமிட்டித் தொழில், மோட்டார் வண்டிகளுக்குத் தேவைப்படும் துணைப்பொருட்கள் தயாரிப்பு, சிறு பொறியியல் தொழில்கள் ஆகிய தொழில்களில் தமிழகம் சிறந்து விளங்கியது.

### தொழில் வளர்ச்சியைத் தூண்டிடும் புதிய முயற்சிகள்

இருந்தபோதிலும், கடந்த சில ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் தொழில் முதலீட்டின் அளவு குறைந்துள்ளது. பெருமளவில் மின்வெட்டுச் செய்ய நேரிட்டதும், பல தொழில் உற்பத்திப் பொருட்களுக்கும், நுகர்வோர் பொருட்களுக்கும் போதுமான அளவுக்குத் தேவை ஏற்படாதிருந்ததும் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி பின்னடையக் காரணமாய் அமைந்தன. இந்த மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமலுக்கு வந்த பின்னர், தொழிலைத் தொடங்க ஊக்கமளிப்பு




தும், புதிய துறைகளில் தொழில்கள் தொடங்குவதற்கு ஆராய்ந்து வழி காண்பதும் நம் முன் நிற்கும் பெரும் பணிகளாக அமைந்தன. தொழில் வளர்ச்சி வீதம், முன்பு போல் மீண்டும் உயர்ந்திடச் செய்யும் பொருட்டு சரியான நெறியில் முயற்சிகளை மேற்கொள்வதற்காக, ஒவ்வொரு துறையிலும் தொழில் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளவை எவையெவை எனக் கண்டறிய வேண்டியிருந்தது. இப்போது நம்மிடம் இருக்கின்ற ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்தி, மிக உயர்ந்த உற்பத்தித் திறன் அளவை அடைய வேண்டும் என்பதில் ஐயமில்லை. கனி வளத்தைப் பொறுத்த மட்டில், நாட்டின் மற்றப் பகுதிகளில் கனி வளம் மிகுதியாக இருப்பது போல் தமிழ்நாட்டில் இல்லை. ஆனால் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சிக்குத் தேவைப்படுகிற உயர்ந்த பயிற்சியும் கட்டுப்பாடும் உடைய மனித ஆற்றல், மிகுந்த அளவில் இருக்கிறது. தொழில் முனைவோர் இங்குள்ள ஏராளமான மனித ஆற்றலைக் கொண்டு தொழிலைத் துணிந்து தொடங்கலாம். அதன் பின்னர் மேம்பட்ட தொழில் நுட்பத் திறனைப் பயன்படுத்துகிற அளவைப் படிப்படியாக உயர்த்தித் தொழிலைப் பெருக்கலாம்.

உயர்ந்த நுட்பத்திறம் கொண்ட பொறியியல் பொருட்கள், அணுவியல் பொருட்கள், அடிப்படையான நேர்த்தியான ரசாயனப் பொருட்கள், மேம்பட்ட தொழில் நுட்பத்திறம் வாய்ந்த நவீன இயந்திரங்கள், நிறைவு பெற்ற தோல், தோல் பொருள்கள் போன்ற உயர் மதிப்பு வாய்ந்த உற்பத்திப் பொருள்களைத் தயாரிக்கும் தொழில்களில் நாம் வளர்ச்சி பெற வேண்டும் என்பதையும் இவற்றால் அறியலாம். மூலப்பொருட்களையும், ஓரளவு வேலை நிறைவு பெற்ற பொருட்களையும் ஏற்றுமதி செய்வதை விடுத்து, முழுமையாக வேலை நிறைவு பெற்ற பொருட்களையே ஏற்றுமதி செய்ய வேண்டும் என்கின்ற தேசியக் கொள்கையை நோக்கி மாநில அரசு நடைபோடுகின்றது.

**தோல் தொழில் வளர்ச்சி**

அதற்கிணங்க, மாநில அரசுத் துறை நிறுவனங்கள் தமது நாட்டத்தைச் செலுத்தி முன்னேற்ற விழைந்துள்ள தொழில்களில் ஒன்று, தோல் தொழிலாகும். இந்தத் தொழில் நமக்கு மிக உயர்ந்த அளவில் அந்நியச்



முடிவு செய்யப்பட்ட தோல் தயாரிப்பதற்கான வசதிகள் தமிழ்நாட்டில் பெருமளவில் உருவாக்கப்படவிருக்கின்றன.

செலாவணியைப் பெற்றுத் தருகிறது. மேலும் சமூகத்தில் நலிந்த பிரிவினர்களைச் சேர்ந்த 5,00,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பும் அளிக்கிறது.


நாட்டின் தோல் தொழிற்சாலைகளில் மூன்றில் இரண்டு பங்கு தமிழ்நாட்டில் மட்டும் அமைந்துள்ளன. ஏற்றுமதியில் நமது மாநிலத்தின் பங்கு 85 சதவீதமாக உள்ளது. ஆண்டு ஒன்றுக்கு 600 கோடி ரூபாய் அளவுக்கு வேலை நிறைவு பெற்ற தோலை ஏற்றுமதி செய்வதெனத் தேசிய அளவில் ஏற்றுமதி இலக்கு குறிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கை அடைய வேண்டுமெனில், தோலைப் பதனிட்டு வேலை நிறைவு செய்யும் வசதிகள் தமிழ்நாட்டில் பெரும் அளவில் உருவாக்கப்படவேண்டும். மத்திய அரசு 25 இலட்சம் ரூபாயை ஒதுக்கித் தந்து, தமிழ்நாட்டில் பணி வசதி நிலையம் ஒன்றை அமைக்க முடிவு செய்துள்ளன.


அதே நேரத்தில், அம்மாதிரியான பணி வசதி நிலையங்கள் தேவைப்படுகின்ற 10 இடங்களை மாநில அரசு தேர்ந்தெடுத்துள்ளது. மாநில அரசு ஐந்து பணிவசதி நிலையங்களை அமைப்பதற்கு மத்திய அரசின் உதவியை முதலீடாகப் பயன்படுத்திக் கொள்ளக் கருதியது. தொழில் கூட்டுறவு நிலையங்களாக நடைபெறுகின்ற முறையில் அவை நிறுவப்படும்.

**மின்னணுவியல் துறைக்கு ஊக்கம்**

சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டு தொழில்வளம் காண அரசுத்துறை நிறுவனங்கள் தெரிந்தெடுக்கப்பட்ட பிறிதொரு தொழில், மின் அணுவியல் தொழிலாகும். இத்தொழில் துறையில் முறையாகவும், விரைவாகவும் வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு ஒரு திட்டத்தை வகுப்பது இன்றியமையாதது என அரசு உணர்ந்தது. அரசுத் துறையிலும், கூட்டுத் துறையிலும்

மின்னணுவியல் துறை தமிழ்நாட்டில் முன்னேறி வருகிறது.






ஆண்கள் மட்டுமல்ல; பெண்களும் பெருமளவில் தொழில் வளர்ச்சிக்கு உதவுகின்றனர்.

காரணங்களில், செய்முறை வசதிகள் போதாமை, மூலப் பொருள் பற்றுக்குறை, நிதி, விற்பனை, நிர்வாகம் தொடர்பான பிரச்சினைகள் ஆகியவையும் அடங்கும். அவற்றில் ஒரு சில சிறு தொழிற்சாலைகள், பற்றுக்குறையாகவுள்ள மூலப் பொருள்களைப் பெறுவதற்கு வழி வகுக்கும் பொருட்டு, நிறுவன அமைப்புடைய பெருந்தொழில் அமைப்பில் கொண்டு வரப்பட்டன. சிறுதொழில் பிரிவுகளுக்குப் புத்துயிரூட்டுவதற்கான அவற்றின் ஆற்றலை மதிப்பிட்டறியவும், அப்பிரிவுகளில் இயங்காமல் கிடக்கும் சிலவற்றை இயங்கச் செய்ய எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைக் குறிப்பிடுவதற்காகவும் சிறுதொழில் பிரிவுகளைப் பற்றிய விரிவான ஆய்வு ஒன்று நடைபெற்று வருகின்றது. கடந்த ஒரு சில திங்களுக்கு முன் தொடங்கப்

## புத்தம் புதிய சிறு தொழில்கள் நித்தம் மலருகின்றன!

மின் அணுவியல் தொழில்களை நிறுவுவதற்கான திட்டங்களும் இத்திட்டத்தில் அடங்குவன. தவிரவும், தனிப்பட்ட தொழில் முனைவோருக்குப் பண வசதியளித்து ஆதரவு அளிக்கவும் வேண்டியிருக்கும். இன்னின்ன பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும், அதற்கு இவ்வளவு மனித ஆற்றல் வேண்டும் - என்பனவும் தேர்ந்து குறிப்பிடப்படும். இத்திட்டம் மின் அணுவியல் தொழிலுக்கு மட்டும் அல்லாமல், சாதனங்கள் தொழில் நுட்ப இயல் கருவிகள் சோதனை, உற்பத்தி வளர்ச்சி, தரக்கட்டுப்பாடு ஆகியன போன்ற மின்னணுவியல் . தொழிலுடன் சார்புள்ள தொழில்களுக்கும் தற்போதுள்ள தொழிற்சாலை வசதிகளையும் கட்டிடங்கள்-தகவல்-போக்குவரத்துச் சாதன அமைப்பு வசதிகளையும் நாம் ஏற்படுத்தும் வகையில் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தக் குறிக்கோள்களுடன் அரசு 1976-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் குழு ஒன்றை அமைத்தது, இக்குழு இப்போது தனது அறிக்கையை அரசுக்குத் தந்துள்ளது. இந்த அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது. அரசு ஒப்புதல் அளிக்கின்ற பரிந்துரைகள் விரைவாக நிறைவேற்றப்படும்.



### சிறுதொழில்கள் பெருகுகின்றன!

நிறுவன அமைப்பினையுடைய பெரிய, நடுத்தரத் தொழில்கள், அரசின் நாட்டத்தைப் பெற்றிருக்கும் அதே நேரத்தில், கூடவே சிறு தொழில்களின் விரைவான வளர்ச்சிக்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நமது மாநிலத்தில் ஏற்கெனவே ஏறக்குறைய 38,000 பதிவு செய்யப்பட்ட சிறு தொழிற்சாலைகள் இருக்கின்றன. இவற்றில் ஒரு சில தொழிற்சாலைக்ள் இயங்காமல் இருக்கின்றன. அவை இயங்காமல் இருக்கின்ற நிலைமைக்குரிய

பட்ட இந்த ஆய்வு இப்போது மும்முரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதிய சிறு தொழில் பிரிவுகளைத் தொடங்கும் விரைவு இயக்கும் அண்மையில் முடிவுற்றது. இவ்வியக்கத்தின்போது 8,000-க்கு மேற்பட்ட புதிய சிறு தொழிற் பிரிவுகள் பதிவு செய்யப்பட்டன. இவை எல்லா

மாவட்டங்களிலும் பரவலாக அமைந்துள்ளன. புதிய சிறு தொழில்களைப் பதிவு செய்வது என்பது முதல் நடவடிக்கை மட்டுமே எனவும், இந்தச் சிறு தொழில் பிரிவுகள் யாவும் உற்பத்தி செய்யும் தகுதி வாய்ந்தவையாக மாற்ற, மிகுந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கும் எனவும், தொழில் துறை மிக நன்றாக அறியும். இந்த முயற்சிகள் சுறுசுறுப்புடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கட்டடங்கள், சாலைகள், செய்திப் போக்குவரத்துத் தொடர்புக்குரிய இன்றியமையா அடிப்படை வசதிகள் போன்றவை இச் சிறு தொழில் பிரிவுகளுக்குச் செய்து தரப்படுகின்றன. மூலப்பொருட்களும் வழங்கப்படுகின்றன.

### கைத்தறித் தொழில்

இருபது அம்சத் திட்டத்தில் இன்றியமையாத அம்சமாகக் கருதப்படுகின்ற கைத்தறித்துறையின் வளர்ச்சிக்காகப் பணிகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த மாநிலத்தில் உள்ள நாலரை லட்சம் நெசவாளர்களில் 30 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்க்கப்பட்டவர்கள். அடுத்து வரும் மூன்று ஆண்டுகளில் மேலும் 30 சதவீதத்தினர் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டுவிடுவர். நெசவாளர்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் கூட்டுறவு நூற்பாலைகள் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன. கைத்தறிக்குத் தேவைப்படும் இன்றியமையாப் பொருட்களான சாயங்கள், இரசாயனப் பொருட்கள், செய்முறை வசதி முதலியன கிடைப்பதற்கு வழி வகுக்கப்பட்டு வருகிறது. 'கோ-ஆப்டெக்ஸ்' எனப்படுகின்ற கூட்டுறவு கைத்தறி விற்பனை நிறுவனம் தனது ஆண்டு வணிகத் தொகையை 16 கோடி ரூபாயிலிருந்து 25 கோடி ரூபாயாக உயர்த்தும் வகையில் விற்பனையளவு பெருகுமாறு அதன் செயல் திறன் முடுக்கி விடப்பட்டுள்ளது. கரூர், ஈரோடு, காஞ்சீபுரம் ஆகிய இடங்களில் கைத்தறிகளுக்காகப் புதிய திட்டங்கள் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்திராத மற்ற நெசவாளர்களுக்குப் பயன் தரும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.




**தமிழ்நாட்டின் கைத்தறிப் பட்டுப் புடவைகளை அயல்நாட்டு ஆரணங்குகளும் விரும்பி வாங்குகின்றனர்!**

### பிரச்சினைகளைத் தீர்க்க......

பல்வேறுபட்ட புதிய துறைகளில் தொழில் வளர்ச்சியைப் பேணி வரும் தறுவாயில் தற்போதுள்ள தொழில்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவும் மாநில அரசு மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டுள்ளது. நலிந்த நெசவு ஆலைகளின் பிரச்சினைகளை ஆய்வு செய்யவும், மூடப்பட்ட ஆலைகளை திரும்பத் தொடங்கவும் அரசு மாநில அளவிலான குழு ஒன்றை அமைத்தது. இக்குழு 29 ஆலைகளின் வேலை நிலைமையை மதிப்பிட்டது. அதன் பின்னர், நிதி உதவி, அரசு உத்தரவாதம், நிலுவை ஒத்தி வைத்தல் நவீன இயந்திரங்களை நிறுவுதல், அமைப்புச் செலவுகள், ஆலை நிர்வாகச் செலவுகள் ஆகியவற்றைக் குறைத்தல் முதலிய கருத்துக்களை இக்குழு தனது பரிந்

**கைத்தறி நெசவாளர்களின் தேவைகள் கூட்டுறவின் மூலம் நிறைவு செய்யப்படுவதால், கைத்தறித் தொழில் முன்னேறுகிறது.**



துரையில் குறிப்பிட்டுள்ளது. மத்திய அரசு நியமித்த இது போன்ற குழு ஒன்று, தமிழ்நாட்டில் உள்ள மிகவும் நலிந்த 16 ஆலைகளை ஆய்விற்கு எடுத்துக் கொண்டுள்ளது.

### கூட்டுத்துறை வளர்ச்சி


தொழில் துறைகளில் மற்றொரு பிரிவு கூட்டுத்துறையின் கீழ் வருவது, கூட்டுத்துறையில் புதிய சாதனைகளைச் செய்யத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், திட்டங்களைத் தீட்டி வருகின்றது. ஏற்கனவே உற்பத்தியில் இறங்கிவிட்ட 'ஸ்பிக்', 'டைனுவிஷன்', 'தமிழ்நாடு குரோமேட் அண்ட் கெமிகல்ஸ்' போன்ற 12 தொழிற்சாலைகளைத் தவிர, மேலும் 12 தொழிற்சாலைகளை நிறுவும் பணிகள் பல்வேறு கட்டங்களில் நடைபெற்று வருகின்றன. தமிழ்நாடு கெமிகல், பிராடக்ட்ஸ், அரக்கோணம் காஸ்டிங்ஸ் அண்டு போர்ஜிங்ஸ் லிமிடெட், தமிழ்நாடு ஃப்ளோரின் அண்ட் அல்லைட் கெமிகல்ஸ் லிமிடெட் முதலியன அவற்றில் சிலவாகும். மரப்பிசின்கள், மருந்துகள், மகினீசிய உலோகம் ஆகியவற்றைத் தயாரிக்கும் மற்ற திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன. பொதுத்துறையில் 'டிட்கோ' அரியலூரில் 20 கோடி ரூபாய்க்குப் புதிய சிமிட்டி உற்பத்தித் தொழிற்சாலையை நிறுவும் பணியை அண்மையில் தொடங்கியிருக்கிறது.


### சர்க்கரைத் தொழில்

தனியார் துறையிலும் கூட்டுறவுத் துறையிலும் தற்போது இருக்கின்ற சர்க்கரை ஆலைகளுடன் பல புதிய ஆலைகள் தோன்றியுள்ளன. இதன் மூலம் சர்க்கரைத் தொழில் வளர்ச்சிக்குப் புதிய தூண்டுதல் அளிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுத் துறையின் கீழ் திருப்பத்தூர், வேலூர் ஆகிய இடங்க்ளில் இரண்டு சர்க்கரை ஆலைகளும், தஞ்சையில் ஒன்றும் மிகக் குறுகிய காலத்தில் நிறுவி முடிக்கப்பட்டு, ஏறத்தாழ உற்பத்தியைத் தொடங்கி உள்ளன. பெரம்பலூரில் நிறுவப்பட்டுவரும் மற்றொரு ஆலை இந்த ஆண்டில் தயாராகிவிடும். சங்கரன்கோயிலில் நிறுவப்பட்டுள்ள மற்றொரு ஆலையில் பணி தொடங்கும் நிலை உள்ளது. 1976-ம் ஆண்டு பிப்ரவரித் திங்களிலிருந்து கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கான மற்ற இன்றியமையாப் பொருட்களை வழங்குவதற்கும், கரும்பு வளர்ச்சிக்கும் உரிய முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இந்த முயற்சிகளின் விளைவால், 1975-76-ம் ஆண்டில் 20 இலட்சம் டன் கரும்பிலிருந்து சாறுபிழியும் திறன் கொண்டிருந்த ஆலைகள் 1976-77-ஆம் ஆண்டில் 35 இலட்சம் டன் கரும்பிலிருந்து சாறு பிழியும் திறனைப் பெற்றிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் பயனாய், சர்க்கரை உற்பத்தி 1.69 இலட்சம் டன்னிலிருந்து 3 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.

### தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்


இருபது அம்சப் பொருளாதார திட்டத்தையொட்டி, தொழில் கூட்டுறவுகள் மூலம் மிகுதியான அளவில் வேலை வாய்ப்பு வசதிகளை உருவாக்குவதில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. 1976-ம் ஆண்டில், 1,000-க்கும் மேற்பட்ட கைவினைஞர்களுக்கும் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்க 37 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வைரம் அறுக்கும் பணியில் ஈடுபட்டிருந்த 210 கொத்தடிமைத் தொழிலாளர்கள் விடுவிக்கப்பட்டனர். வடசேரி, திருப்பைஞ்ஞீலி ஆகிய இடங்களில் இரண்டு புதிய வைரம்





நலிவுற்று மூடப்பட்ட ஆலைகள் மீண்டும் திறக்கப்பட்டன!





'சிப்காட்' நிறுவனத்தின் முயற்சியால் ராணிப்பேட்டைப் பகுதி தொழில்மயமாகி வருகிறது.

அறுக்கும் சங்கங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இராமநாதபுரம் மாவட்டத்தில் அரசு அளித்த 1.60 இலட்சம் ரூபாய் பங்கு மூலதனத்துடன் 17 தீப்பெட்டி தயாரிக்கும் பணியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தோல் தொழிலுக்காக, வாணியம்பாடியில் 41.50 இலட்சம் ரூபாய் செலவில் தோல் பதனிட்டுப் பளபளப்பாக்கப் பணி வசதிகளுடைய பொது நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் புதிய கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் இரண்டு தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.


## தொழில் உதவிப் பணிகள்

அரசு, தொழில் முனைவோருக்குச் சிறந்த பண வசதிகளை வழங்கும் பொருட்டு தொடர்ந்து மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக 1976-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் தொழில் உதவிப் பணிகள் (Industrial Escort Services) ஏற்படுத்தப் பட்டுள்ளது: புதிய தொழில் முனைவர் ஒருவருக்கு உரிமம் வழங்குதல், மூலதனப் பொருள்களுக்கு இசைவு அளித்தல், வெளிநாட்டு ஒத்துழைப்புக்கு ஏற்பாடுகள் செய்து தருதல் போன்ற வகையில் பல்வேறுபட்ட அனுமதிகளை அரசிடமிருந்து பெறுவதில் உதவுவதற்கும், தொழிற்சாலை அமைப்பதற்கு வேண்டிய இன்றியமையா அடிப்படை வசதிகளுக்குத் தேவைப்படுவனவற்றைப் பெற்றுத் தருவதில் உதவும் பொருட்டும், அவருக்குத் தேவைப்படும் உதவிகள் அனைத்தும் தொழில் துறையின் கீழ் அமைந்துள்ள மேற்சொன்ன தொழில் உதவிப் பணிகள் நிறுவனத்தால் ஒரே சமயத்தில் கவனித்துக் கொள்ளப்படுகின்றன. இந்த நிறுவனம் ஆதாயமுடைய நல்ல சாதனைகள் சிலவற்றைப் புரிந்து உள்ளது. 1976-ஆம் ஆண்டில் செப்டம்பர் திங்களில் அமைக்கப்பட்ட குழு ஒன்றின் மூலமாகத் தற்போது இருக்கின்ற நிறுவனங்களைச் சீர்படுத்தும் ஆய்வை, அரசு மேற்கொண்டுள்ளது. பொதுத்துறையில் உள்ள தொழில் நிறுவனங்கள் எந்த அளவுக்குத் தங்களுடைய செயல் திறனை மேம்படுத்த முடியும் என்பதையும், தொழில் துறைக்கு எவ்வளவு உதவி செய்ய முடியும் என்பதையும் முடிவு செய்யும் வகையில், அவை செயல்படுதலைக் குறித்து ஆய்வதற்காகவே இக்குழு அமைக்கப்பட்டது.



அரக்கோணம் தொடர் வார்ப்படத் தொழிற்சாலை விரிவு பெற்று வருகிறது.


தமிழ்நாடு ஒரு காலத்தில் தொழில் வளர்ச்சியில் முதல் வரிசையில் இடம் பெற்றிருந்தது. மாநில அரசும் அரசின் பல்வேறு துறைகளும் நிறுவனங்களும் உறுதியுடனும், தியாக உணர்வுடனும் செயலாற்றுவதன் வாயிலாகவும், புதிதாகத் தொழில் முனைவோர்கள் தாங்கள் அருஞ்செயலைச் செய்கிறோம் என்ற எழுச்சியும் ஆர்வமும் கொண்டு செயல்படுவதன் வாயிலாகவும் முன்பு போலவே மீண்டும் நாம் தொழில் வளர்ச்சியில் முதல் வரிசையில் இடம் பெறுவோம் என்பது உறுதி.



# அரிசன நலம் பெருக்கும் நல்வாழ்வுத் திட்டங்கள்


— ஜி. திருமால், ஐ.ஏ.எஸ்.,
செயலாளர், சமூக நலத்துறை.

"வருணாசிரம தருமம்'' என்னும் கருத்தின் அடிப்படையில் தோன்றியதுதான் சாதி முறை. அப்போதிருந்த நோக்கம் இந்துச் சமூகத்தைப் பல்வேறு சாதிகளாகப் பிரிக்க வேண்டும் என்பதல்ல. தொழில் முறைக் கோட்பாடுகளின் அடிப்படையில்தான் மக்கள் பிரிக்கப்பட்டனர்; ஆனால் பிற்காலத்தில் இதுவே வலுவான சாதிமுறையாக உருவெடுத்தது. பல்வேறு தொழில்கள் தொடர்பான வரிசை அடிப்படையில், தான் பிறப்பால் உயர்ந்தவன் என்ற கருத்து, பிற்காலத்தில் தான் உருவாகி இருக்கும்போல் தோன்றுகிறது. குறிப்பிட்ட சில வகைத் தொழில்களைச் செய்து, சமூகத்திற்கு உதவியாக இருந்தவர்கள் காலப்போக்கில் தீண்டத் தகாதவர்களாகி விட்டனர். தீண்டாமை என்பது இந்திய சமூக முறையில், ஆழ்ந்து வேரூன்றி விட்ட தீமையாகும். தீண்டாமை என்னும் கொடிய பழக்கத்திலிருந்து மக்களைத் திருத்த, சமூக சீர்திருத்தவாதிகளும், சமயத் தலைவர்களும், சிந்தனையாளர்களும் பல்வேறு முயற்சிகளையும் சீர்திருத்தப் பணிகளையும் செய்து வந்துள்ளனர். எனினும், மகாத்மா காந்தி அவர்கள் இந்திய விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமை ஏற்று நடத்தும் வரை, தீண்டாமை ஒழிப்பு இயக்கம் போதிய வலுப்பெறவில்லை. மகாத்மா காந்தி அவர்கள் தமது நிர்மாணத் திட்டங்களில் அரிசன முன்னேற்றத்திற்கு முக்கிய இடம் அளித்தார். இந்துச் சமூகத்தில் அரிசன சமுதாயத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதற்காகவும், அரிசனங்களுக்கென்று தனித் தேர்தல் தொகுதி என்ற பொறியில் அவர்கள் வீழ்வதைத் தடுப்பதற்காகவும் இறக்கும் வரை உண்ணாவிரதம் இருந்தார் என்பதும் நினைவு கூரத் தக்கதாகும்.



தீண்டாமையை ஒழிப்பதற்கு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 17, மற்றும் 35-ஆவது பிரிவுகளின் கீழ் வகை செய்யப்பட்டுள்ளது. இதையொட்டி, 1955-ஆம் ஆண்டு தீண்டாமை

(குற்றங்கள்) சட்டம் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின் தண்டனையளிக்கும் விதிகள் போதிய அளவுக்குக் கடுமையானவை அல்ல என்பதையும், அவை எதிர்பார்த்த அளவுக்குப் பலனளிக்கவில்லை என்பதையும் கடந்த இருபதாண்டு அனுபவம் நமக்கு எடுத்துக் காட்டுகின்றது. 1955-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டு, பின்னர் திருத்தப்பட்டு ''குடி உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்'' என்ற பெயரில் இயற்றப்பட்டுள்ள சட்டத்தில், மேலும் கடுமையான தண்டனைகள் அளிப்பதற்குரிய விதிகள் இடம் பெற்றுள்ளன.




குடி உரிமைகள் சட்டத்தினைச் செயல்படுத்தத் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ், வழக்குகள் பதிவு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளும் பொறுப்பு காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இன்ஸ்பெக்டர் ஒருவர், சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர், தலைமைக் காவலர்கள் இருவர், காவலர்கள் இருவர் அடங்கிய படையாக 6 நடமாடும் காவல் படைகள், அரிசன்ங்கள் மிகுந்துள்ள 6 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. நடமாடும் காவல்படை 1972-ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கியது. 1976 ஜூன் மாதம் வரை 5,046 வழக்குகளை இப்படையினர் பதிவு செய்துள்ளனர். அவற்றில் 3,206 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

குடி உரிமைகள் சட்டத்தினைத் திறம்படச் செயல்படுத்துவதற்காக, ஆளுநரின் ஆலோசகரைத் தலைவராகவும் பொது மக்களின் முக்கியமான சிலரை உறுப்பினர்களாகவும், கொண்ட மாநிலக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. இச்சட்டம் செயல்படுத்தப்படுவதை மேற்பார்வையிடுவதற்காகக் காவல்துறை டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஒருவரது தலைமையில் சிறப்புப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் முக்கிய விதிகளைக் கோடிட்டுக் காட்டும் சுவரொட்டிகளையும் கைப்பிரதிகளையும் தமிழ்நாடு அரசு விளம்பரத் துறை விநியோகித்துள்ளது. 1976-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 14-ஆம் நாள் முதல் 21-ஆம் நாள் வரை ''குடி உரிமைகள் பாதுகாப்பு வாரம்'' கொண்டாடப்பட்டது; குடி உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தை இயற்றுவதற்கான காரணங்களையும் நோக்கங்களையும் மக்களுக்கு விளக்கிக் கூறி விளம்பரப்படுத்தப்பட்டது.



மக்கள் மனத்தில் மாற்றம் ஏற்பட்டு, சாதி இந்துக்களின் மனத்திலே நிலவி வரும் காலத்திற்கொவ்வாத வேற்றுமை உணர்ச்சி அறவே நீங்கினால்தான், சட்டம் பயனளிக்கும்; சட்டத்தின் நோக்கங்கள் நிறைவேறும். தங்களுக்கு என்னென்ன உரிமைகள் அளிக்கப்பட்டுள்ளன என்பதை அரிசனங்களும் உணர வேண்டும்; தங்கள் உரிமைகளை மென்மேலும் வலியுறுத்த வேண்டும். தீண்டாமையைக் கடைப்பிடிப்பதால் மனித சக்தி எந்த அளவுக்கு வீணாகிறது என்பதையும், அது எப்படி ஒருவகையான 'இன ஒதுக்கல்' குற்றம் ஆகிறது என்பதையும் பொதுமக்கள் உணர வேண்டும். தீண்டாமையை அனுசரிப்பது, மனித உரிமைகளை மீறும் ஒரு செயலாகும்; தீண்டாமை இன்னும் நீங்கப்படாது இருப்பது, எல்லோருக்கும் 'சம வாய்ப்பு அளிக்கும், ஒரு முழுச் சுதந்தரமான நாடல்ல நம் நாடு என்பதைத்தான் தொடர்ந்தாற் போல் நினைவுறுத்திக் கொண்டிருக்கும்.

அரிசனங்களின் வாழ்க்கை நிலைமைகளைச் சீராக்கவும், சமுதாயத்தில் மிகவும் மேம்பட்ட நிலையிலுள்ளவர்கள் மட்டத்திற்கு அம்மக்கள் முன்னேறி வரவும், தமிழ்நாடு அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. பிரதமரின் 20 அம்சத் திட்டம் அரிசனங்கள், பழங்குடி மக்கள் ஆகியோரின் நல்வாழ்வில் நேரடித் தொடர்புள்ள பல திட்டங்களைக் கொண்டதாகும். நிலமற்ற அரிசனங்களுக்கு நிலங்கள் வழங்குதல், மாணவர் இல்லங்களில் உள்ள அரிசன மாணவர்களுக்கு மலிவு விலையில் இன்றியமையாப் பொருள்கள் வழங்குதல், மலிவு விலையில் நோட்டுப் புத்தகங்களும் எழுது பொருள்களும் வழங்குதல் ஆகியவை இத்திட்டங்களில் அடங்கும்.

அரசுப் புறம்போக்கு நிலங்கள் உள்ள இடங்களிலெல்லாம் அவை கையகப்படுத்தப்பட்டு, அரிசனங்கள் பயிர்த் தொழில் செய்யவும் வீடு கட்டிக் கொள்ளவும் அரிசனங்களுக்கு வழங்கப்படுகின்றன. அரசு நிலங்கள் கிடைக்காத இடங்களிலெல்லாம் தனியார் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, அரிசனங்களுக்கு வீட்டு மனைகளாக வழங்கப்படுகின்றன. 1-2-1976 முதல் 31-5-1976 வரை, அதாவது, தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி வந்த பிறகு, 39 லட்சம் ரூபாய் செலவில் கையகப்படுத்தப்பட்ட 771.72 ஏக்கர் பரப்புள்ள 15,457 வீட்டு மனைகள் அரிசனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன, 1978-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களுக்கு முன்னர் எல்லா அரிசனங்களுக்கும் வீட்டு மனைகள் வழங்க வகை செய்யும் தீவிரத் திட்டமொன்றைத் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் அண்மையில் அறிவித்துள்ளார். இதன் மூலம் 3 லட்சம் அரிசனங்கள் பயன் பெறுவர்.

அரிசனங்களுக்கென்று 681 மாணவர் இல்லங்கள் உள்ளன. இவைகளுக்கு உணவுப் பொருள் வழங்கு நிறுவனம் அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மலிவு விலையில் இன்றியமையாப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. இம்மாநிலத்தில், அரிசன, பழங்குடி மக்களுக்கென்று 118 பள்ளிகள் உள்ளன. நடப்புக்



கல்வியாண்டில், பள்ளிகள் தொடங்கிய 15 நாட்களுக்குள்ளாகவே, இப்பள்ளிகளில் கல்வி பயிலும் 1,47,125 மாணவர்களுக்கு மொத்தம் 11.50 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பாடப் புத்தகங்களும், நோட்டுப் புத்தகங்களும் சிலேட்டுப் பலவகைகளும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

மொத்த மக்கள் தொகையில் 0.76 சதவீதமுள்ள பழங்குடி மக்களுக்காக 794.65 லட்சம் ரூபாய் செலவிலான பழங்குடி மக்கள் துணைத்திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது. பழங்குடி மக்கள் அதிகமாக வாழும் சேலம் வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தருமபுரி, திருச்சிராப்பள்ளி ஆகிய 5 மாவட்டங்களில் 9 பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். நடப்பாண்டில், வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, சிறு பாசனம், கூட்டுறவு, காடு வளர்ப்பு, சாலைகள், சமூகப் பணிகள் முதலிய இனங்களின்கீழ் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும் பணிகளை நிறைவேற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது; பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளில் இப்பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.


அரிசனங்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கும் பொருட்டுத் தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தை 1974-75 ஆம் ஆண்டில் அரசு நிறுவியது. சமவெளிகளில் 4,000 ரூபாய் செலவிலும் மலைப்பகுதிகளில் 6,000 ரூபாய் செலவிலும் இக்கழகம் வீடுகள் கட்டி வருகிறது. இத் திட்டத்தின்கீழ் இதுவரை 33,000 வீடுகளுக்கு மேல் கட்டப்பட்டுள்ளன.

அரிசனங்கள் தங்கள் பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ளும் பொருட்டு சிறு தொழில்களைத் தொடங்குவதற்காக வட்டியில்லாக் கடன்கள் வழங்கும் திட்டமொன்று செயல்படுத்தப்படுகிறது. தொழிலின் தன்மைக்கேற்ப, குறைந்தது 125 ரூபாயிலிருந்து 15,000 ரூபாய் வரை கடன் கொடுக்கப்படுகிறது, இத்திட்டத்தின்கீழ், 1975-76, ஆம் ஆண்டு இறுதி வரை 9,784 பேருக்கு 65.45 லட்சம் ரூபாய் வரை கடன் வழங்கப்பட்டுள்ளது.




அரிசனங்கள், பழங்குடி மக்கள் நன்மைக்காக வேலைவாய்ப்பு, பயிற்சி இயக்குநரால் தொழிற் பயிற்சி நிலையங்கள் நடத்தப்படுகின்றன. இந்நிலையங்களில் பயிற்சி பெறுவோருக்கு அரிசன நலத்துறை நிதியிலிருந்து பயிற்சி உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. இயன்றவிடங்களில் எல்லாம் அரிசனங்கள், பழங்குடி மக்கள் நன்மைக்காகப் பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களும் நடத்தப்படுகின்றன. அரிசனங்கள், பழங்குடி மக்களுக்கு வேலை வாய்ப்பைப் பெருக்க, ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ். தேர்வுகள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழு நடத்தும் தொகுதி நான்காவது பணித் தேர்வுகள், தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சி ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு அரசில் அரசிதழ் பதிவு பெற்ற, பதிவு பெறாத பதவிகளில் 18 சதவீதம் வரை அரிசனங்கள், பழங்குடி மக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. 18 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும் நிலையில், மொத்தம் உள்ள பதவிகளில் சுமார் 10 சதவீத பதவிகளில்தான் அரிசனங்கள் பழங்குடி மக்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். மருத்துவ, பொறியியல் கல்லூரிகளில் 18 சதவீத இடங்கள் அரிசன, பழங்குடி மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. 1976-77ஆம் ஆண்டில் மருத்துவ, பொறியியல் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர் எண்ணிக்கை முறையே 178,180 ஆகும். அரிசன, பழங்குடி மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி உதவித் தொகைகள் வழங்கப்படுவதால் தொழிற் பயிற்சி நிலையங்களில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் விஷயத்தில்கூட இந்த இட ஒதுக்கீடு முறை பின்பற்றப்படுகிறது.






''சாதி வேற்றுமைகளைக் களையவும், சமூகத்தில் பரந்த பொது நோக்கு உணர்வை வளர்க்கவும், அரிசனங்களுக்கும் ஏனைய வகுப்பாருக்கு இடையே கலப்பு மணம் நடைபெறுவதைத் தமிழ்நாடு அரசு ஊக்குவிக்கிறது. கலப்பு மணம் செய்து கொண்ட ஒவ்வொரு தம்பதிக்கும் 1.5 பவுன் வீதத்தில் 14 காரட் தங்கப் பதக்கம் வழங்கப்படுகிறது. இது வரை, கலப்பு மணம் செய்து கொண்ட 417 தம்பதிகளுக்குத் தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன், வீட்டுக்குத் தேவையான பாத்திரங்கள் வாங்குவதற்காக ஒவ்வொரு தம்பதிக்கும் ரொக்க மானியமாக 200 ரூபாய் வழங்கப்படுகிறது. இதுவரை 112 தம்பதிகளுக்கு ரொக்க மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன. கிராமப் பகுதிகளில், கலப்பு மணத் தம்பதிகளுக்கு 3 சென்ட் வீட்டு மனைகளையும் அரசு வழங்குகிறது. சென்னை மாநகரில், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் கட்டியுள்ள வீடுகளிலிருந்து 10 குடியிருப்புகளையும், அரிசனங்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் என வீட்டு வசதி வாரியம் ஒதுக்கீடு செய்துள்ள 10 சதவீத ஒதுக்கீட்டிலிருந்து, மனைகளை அல்லது வீடுகளை ஒதுக்கீடு செய்ய அரசு முடிவு செய்துள்ளது. இந்தக் குடியிருப்புகளை அல்லது வீடுகளை வாங்குவதற்காக ஒவ்வொரு தம்பதிக்கும் '1200 ரூபாய்க்கு மேற்படாத அளவில் உதவித் தொகை வழங்கப்படும். அரிசன மக்கள் கடந்த ஓராண்டுக் காலத்தில், இம்மாநிலத்தில் ஊக்கமும் உயர்வும் பெற்று வருகின்றனர்.


காற்று நிகர் மென்மை
வண்ணத்துப் பூச்சியின்
எழில் வண்ணம்
கோ-ஆப்டெக்ஸ்
அச்சிட்ட நூல் சேலைகள்
உண்மைதான்! மென்மையான அச்சிட்ட நூல் சேலைகள்—நவீன டிசைன்கள்—யமுனா, அஜந்தா, சாமுண்டி-உள்ளங்கவர் வகைகள்—பரவசமூட்டும் வண்ணங்கள். கோ-ஆப்டெக்ஸ் அச்சிட்ட சேலைகள் இன்றைய நாகரீகமாகத் திகழ்பவை!
கைத்தறியே
வண்ணத்துப்பூச்சி



# அறிவார்ந்த உணவுக் கொள்கை அளித்த அரும் பயன்கள்!


— கா. திரவியம், ஐ.ஏ.எஸ்.,
செயலாளர்,
உணவுத்துறை,
தமிழ்நாடு அரசு.

**போ**து மக்களுக்கெனத் திட்டமிடப்பட்டுச் செயலாக்கத்துடன் செம்மையாக அமைந்த உணவுக் கொள்கை இருமுனை வெற்றியைத் தேடித்தந்துள்ளது.

கொள்முதலைப் பெருமளவுக்கு ஈட்டமுடிந்தது ஒன்று. பொது மக்களுக்குப் பங்கிட்டுத் தருவதில் நன்கு திட்டமிட்டுச் செயல் புரிய இயன்றது இரண்டு.

இந்த இருமுனை நடவடிக்கைகளின் மூலம், தமிழ்நாட்டில் இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து நிலவிய கொடிய வறட்சியினால் ஏற்பட்டுள்ள கடும் உணவுப் பிரச்சினையைக் குறிப்பிடத்தக்க முறையில் தீர்க்க முடிந்தது. 1976-ஆம் ஆண்டில், 5.5 இலட்சம் டன்னுக்கு மேல் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. வேளாண்மைப் பொருள்கள் விலை நிர்ணயக் குழு நமது மாநிலத்திற்காக முடிவு செய்த குறிக்கோளைவிடக் கூடுதலாகவே இந்த அளவு அமைந்தது. அரசுப் பொறுப்பேற்கும் முகவர் அமைப்புகள் நேரடியாகவே நெல் கொள்முதல் செய்தது இங்குக் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்த முகவரமைப்புகள், மூலை முடுக்கில் உள்ள கிராமங்களில் கூட, கொள்முதல் நிலையங்களை ஏற்படுத்தியுள்ளன. இதனால், தனிப்பட்ட இடைத்தரகர்களின் முறைகேடான செயல்கள் அறவே அகற்றப்பட்டதுடன் அரசளிக்கும் முழுப்பயனும் உற்பத்தியாளருக்குக் கிடைக்க வழி பிறந்தது!

மாநில அரசு நிறுவனமான தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கல் நிறுவனம் நெல் கொள்முதல் செய்வதற்குப் பொறுப்பாக உள்ளது. இப்பணியின் பெரும் பகுதியை அதுவே நிறைவேற்றுகிறது. கூட்டுறவுச் சங்கங்களும், இந்திய அரசு உணவுக் கழகமும் மாநில அரசின் சார்பில் நெல் கொள்முதல் செய்கின்றன. கொள்முதல் செய்யப்பட்ட பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டு செல்லும் பணியைக் கூடத் தனியார் ஆலை உரிமையாளர்களிடம் விடாமல் தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கல் நிறுவனமே ஏற்று, தானே கொண்டு செல்கிறது. உணவுப் பொருள் வழங்கல் நிறுவனம் நடத்தும்



1976-ஆம் ஆண்டில் நெல் கொள்முதல் செய்வதில் குறிப்பிடத்தகுந்த சாதனை செய்ததால், அரிசி இருப்பு ஏராளமாக உள்ளது.


நவீன அரிசி ஆலைகளிலும் நெல் அரைவை முகவரமைப்புகளாக நியமிக்கப்பட்ட தனியார் அரிசி ஆலைக்காரர்கள் மூலமாகவும் நெல்லை அரைத்த பின்னர், மாநிலம் எங்கணும் உள்ள பல்வேறு சேமிப்பு முனைகளுக்கு இந்நிறுவனம் பொருள்களை எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்கிறது.

தமிழ்நாடு முழுவதிலும் உணவுப் பங்கீட்டு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. பகுதிகள் எதிலும்சட்டபூர்வமான உணவுப் பங்கீடு இல்லாதிருக்கின்ற போதிலும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், உணவுப் பொருள் வழங்கல் நிறுவனத்தின் சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமாகவும் பொதுமக்களின் தேவையை நிறைவு செய்ய, கட்டுக்கோப்பான பொதுமக்கள் உணவுப் பங்கீட்டு நடைமுறை பராமரிக்கப்பட்டு வருகிறது. மலைப் பகுதி மாவட்டமான நீலகிரி மாவட்டத்தின் ஒரு பகுதி நீங்கலாக, மாநிலம் முழுவதிலும் கூட்டுறவுகள், ஊராட்சிகள், அரசுப் பொறுப்பேற்கும் உணவுப் பொருள் வழங்கல் நிறுவனம் ஆகியவைகளே உணவுப் பங்கீட்டுப் பணியை மேற்கொண்டுள்ளன என்பது தமிழ்நாட்டில் உணவுப் பங்கீடு ஏற்பாட்டின் குறிப்பிடத்தக்க மற்றொரு சிறப்புக் கூறாகும். இந்த அமைப்புகள் ஏறத்தாழ 9,500 சில்லறை விற்பனை நிலையங்கள் நடத்திக் கொண்டிருக்க, 18 விற்பனை நிலையங்கள் மட்டுமே அதிகாரம் பெற்ற தனியார் சில்லறை விற்பனையாளர்களாக, நியமிக்கப்பட்டுள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் மட்டும்தான் இந்த நிலை. பொது மக்கள் உணவுப் பங்கீட்டு ஏற்பாட்டினைச் செவ்விய முறையில் வைத்திருக்க அரசுக்கு இது உதவியது; உணவுப் பொருள் இருப்புக் குறித்துப் பிரச்சினை எழும்போது அல்லது வெளி அங்காடியில் உணவுப் பொருளின் விலைகள் உயரக்கூடிய நிலவரம் இருக்கும்போது, உணவுப் பொருள் இருப்புகளைக் கொண்டுவந்து நிலைமை சீர்பட உதவுகிறது.

**தென் அரிசி மண்டலம்**

மூன்று தென் மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களைக் கொண்ட பெரியதோர் அரிசி மண்டலத்தை ஏற்படுத்தியதன் மூலம் 1976-ஆம் ஆண்டில் முக்கிய சாதனையை எய்த முடிந்தது. 1976-ஆம் ஆண்டு அக்டோபர் 15-ஆம் நாள் முதல், செயலுக்குக் கொண்டு வரப்பட்ட இந்தத் தென் அரிசி மண்டலம் மூன்று மாநிலங்களிடையே அரிசிப் போக்கு வரத்து தாராளமாக நடைபெற உதவியது.

இந்த அரிசி மண்டலம் ஏற்படுத்தப்பட்டதிலிருந்து சில மாதங்களில் ஏறத்தாழ 60,000 டன் அரிசி தமிழ்நாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. அதே நேரத்தில், விரிவான தென் மாநிலங்கள் மண்டலம் அமைக்கப்பட்டதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு மாநிலம் முழுவதிலும் ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு நெல், அரிசி எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. இதனால் உபரியாக விளையும் மாவட்டங்களிலிருந்து பற்றாக்குறை மாவட்டங்களுக்கு அரிசியைத் தடையின்றி எடுத்துச் செல்ல வழி ஏற்பட்டது. இது, இருப்பு நிலைமை குறைந்து விடாமலும், விலைவாசிகள் உயர்ந்து விடாமலும் சம நிலை மீண்டும் நிலவிடப் பெரிதும் உதவியது. உபரியாக விளையும் மாவட்டத்தைச் சேர்ந்த உற்பத்தியாளருக்குத் தற்போது நல்ல விலை கிடைப்பதுடன் அவரது உற்பத்திப் பொருட்களைப் பெருமளவில் விற்பதற்கான நல்ல வாய்ப்புகளும் உள்ளன. கட்டுப்பாடு நீக்கப்பட்டதன் பயனாகக் குறைவாக விளைந்த மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்குக் குறைந்த விலையில் அரிசி கிடைக்கிறது.



உபயோகிப்போர்களுக்கு நியாய விலை!

மாவட்டங்களுக்கு இடையிலான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதனுல், உபரி மாவட்டங்களில் அரிசி விலைகள் சற்றே அதிகரித்தன. அதே நேரத்தில், பற்ருக்குறை மாவட்டங்களில் கணிசமான அளவுக்குக் குறைந்தன. எனவே மாநிலத்தில் அரிசியின் பொதுவான விலைவாசிகள், தற்பொழுது, கிட்டத்தட்ட, நுகர்வோருக்கு நியாயமான அளவிலும் அதே நேரத்தில் உற்பத்தியாளருக்கு ஆதாயம் தரக்கூடிய அளவிலும் உள்ளன. 1975-ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் பெரும்பான்மையோரால், பயன்படுத்தப்படுகின்ற நடுத்தரப் புழுங்கல் அரிசியின் விலை, பற்ருக்குறை மாவட்டங்களில் கிலோ ஒன்றுக்கு 4 ரூபாயை எட்டியது. ஆனுல் 1977 ஜனவரியில் அதே வகை அரிசியின் விலை, கிலோ ஒன்றுக்கு ரூ. 1.60 முதல் 2.15 வரையில் இருந்தது. பருவக் காலச் சூழ்நிலையை ஒட்டி விலைவாசிகளில் ஏற்றத்தாழ்வுகள், ஏற்படுவது தவிர்க்க முடியாததே. ஒரு குறிப்பிட்ட தரத்தைச் சிலர் நாடுவதாலும் ஒன்றுக்கொன்று விலை சற்றுக் கூடுவதும் குறைவதும் இயல்பே. என்ருலும், விலை நிலவரங்களைச் சற்று உன்னிப்பாக ஆராய்வோமானுல், 1974-1975 ஆகிய இரண்டு ஆண்டுகளில் காணப்பட்ட அரிசியின் மிகக் குறைவான விலைக்கும் மிக உயர்ந்த விலைக்கும் இடையிலான வேறுபாடு, 1976-ல் குறைந்துள்ளதைக் காணலாம். தற்போதைய நிலவரங்கள் மக்களுக்கு நிறைவளிப்பதாய் இருப்பதுடன், அரிசியின் விலை ஏற்றம் இனிமேல் ஏற்படாத பழங்கதையாகிவிடும் என்றும் உறுதியாக எதிர்பார்க்கலாம்.




### 1977-ல் உணவுப் பிரச்னை எழாது

1977-ஆம் ஆண்டில் தொடக்கத்திலேயே தமிழ்நாட்டில், கணிசமான அரிசி இருப்பு உள்ளது. வெளிச் சந்தையில் அரிசி தாராளமாகவும், எளிதாகவும் கிடைப்பதாலும், உபரி மாநிலமான ஆந்திரப் பிரதேசத்திலிருந்து ஏராளமாக அரிசி வந்துள்ளதாலும், மாநிலத்திற்குள் நெல், அரிசி எடுத்துச் செல்வது தொடர்பான மாநிலங்களுக்கிடையிலான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதாலும், மற்றும் அரிசியின் விலைவாசிகள் குறைந்து வருவதாலும், 1977-ல் உணவு நிலைமையைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டில் எந்தவிதப் பிரச்சினையும் எழாது என்று உறுதியாக நம்பலாம். இந்திய அரசும் தேவையான நேரத்தில் தாராளமாக உதவுவதாக உறுதியளித்துள்ளது. கடந்த சில மாதங்களில் பொது விநியோக அமைப்புகளில் விற்பனை அளவு குறைந்து வருவது, வெளிச் சந்தைகளில் அரிசி தாராளமாகவும் எளிதாகவும் கிடைப்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. விரிவான அரிசி மண்டலத்தை அமைப்பதில் இந்திய அரசு கடைப்பிடித்த அறிவார்ந்த உணவுக் கொள்கையின் வெற்றிக்கும் இதுவே நல்ல சான்ருக விளங்குகிறது. இருப்பினும், பற்ருக்குறை ஏற்பட்டுவிட்டது என்று கூறும் வதந்திக்குப் பதில் சொல்லும் வகையிலும், விலைவாசி உயர்வுகளினுல் வேண்டத்தகாத நிலைமைகள் உருவாவதைத் தடுக்கும் வகையிலும் முன் நடவடிக்கையாகப் பொது விநியோக அமைப்பைத் தொடர்ந்து செயல்படுத்த உத்தேசித்துள்ளது.

### கோதுமைப் பொருள்கள் நியாயமான விலையில் கிடைக்கின்றன.

தமிழ்நாட்டில், தொன்றுதொட்டு அரிசியே பெரும்பாலோர் உட்கொள்ளும் உணவாக இருந்து வந்துள்ளது. ஆனுல் தற்போது, நகர மக்கள் மட்டும் அல்லாமல் கிராம மக்களும் கோதுமை உணவை உண்டு வருகின்றனர், என்பது மனநிறைவைத் தருகின்றது. மத்திய அரசின் பரிந்துரையைத் தொடர்ந்து, கோதுமையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் கோதுமைப் பொருட்களின் விலைகள் மீதும், அவ்வாறு உற்பத்தி செய்யப்பட வேண்டிய பொருள்களின் சதவீதம் எவ்வளவு இருக்கவேண்






கோவைப் பேருந்து நிலையத்தில் 26-5-'76 அன்று ஆளுநர் ஆலோசகர் திரு பி. கே. தவே அவர்கள் அவினாசிலிங்கம் மனை இயல் கல்லூரியினரால் நடத்தப்பெறும் ஜனதா உணவகத்தை, அவினாசிலிங்கம் கல்வி நிலையங்களின் நிறுவனர் திரு. தி. சு. அவினாசிலிங்கம் அவர்கள் தலைமையில் தொடங்கி வைத்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எஸ். நரசிம்மன் விற்பனையைத் தொடங்கி வைத்தார். இந்தியாவிலேயே, ஒரு கல்லூரியினரால், அதன் ஆசிரியைகளாலும், மாணவிகளாலும் நடத்தப்படுகிற முதல் ஜனதா உணவகம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

டும் என்பது பற்றியும் விதித்திருந்த கட்டுப்பாடுகள் அனைத்தையும் மாநில அரசு விலக்கி விட்டது. இந்தக் கொள்கையைச் செயற்படுத்தியதன் விளைவாகவும், தமிழ்நாட்டிலுள்ள 28 கோதுமை அரைவை ஆலைகளுக்கும் கோதுமையைத் தாராளமான அளவில் ஒதுக்கீடு செய்ததன் விளைவாகவும் தமிழ்நாட்டில் நியாயமான விலைகளில் கோதுமைப் பொருள்கள் எளிதாகக் கிடைக்கும் நிலைமை உருவாகியது.

**பற்றுக்குறையோ, பஞ்சமோ வராது!**


அரிசி, கோதுமை, சர்க்கரை முதலியவை தொடர்பாகப் பொதுப் பங்கீட்டு முறையைப் பேணி வருவதில் அரசு ஒருமுகமாக எடுத்துக் கொண்ட முயற்சிகளும், ஏனைய இன்றியமையா உணவுப் பொருள்களின் விலைகள் உயராவண்ணம் ஒரே சீராக வைத்துக் கொள்வதில் இடைவிடாத விழிப்போடு அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளும் சேர்ந்து மக்களிடையே உணவுப் பற்றுக்குறையோ பஞ்சமோ வராது என்ற நம்பிக்கையையும், நம்மிடம் ஏராளமான உணவுப் பொருள்கள் இருப்பில் உள்ளன என்ற தெம்பையும் தோற்றுவித்தன.

**கடலை எண்ணெய் கிடைக்க மேற்கொண்ட முயற்சிகள்!**

கடந்த சில திங்களாக கடலை எண்ணெய்யின் விலை உயர்ந்துள்ளது. இந்தக் கடலையெண்ணெய் வாணிகத்தை ஒழுங்குபடுத்துவதற்காகப் பல்வேறுபட்ட நடவடிக்கைகளை உறுதியாகச் செயல்படுத்தியதோடு மட்டும் அல்லாமல், மற்ற மாநிலங்களிலிருந்து கடலை எண்ணெய்யை வாங்க ஏற்பாடுகள் செய்தும், பெரிய நகரப் பகுதிகளில் நியாயமான விலைகளில் பொதுப்பங்கீட்டு முறை மூலம் விற்பனை செய்தும், கடலையெண்ணெய்ப் பற்றுக்குறையால் விளைந்த இடர்ப்பாடுகளை மாநில அரசு கட்டுப்படுத்தியுள்ளது. அரசு, கடலை எண்ணெய் வணிகர்களுடன் நடத்திய பேச்சு வார்த்தையின் விளைவால், பொது மார்க்கட்டில் கடலையெண்ணெயின் விலையைக் குறைக்கத் தற்போது இந்த வணிகர்கள் முன் வந்துள்ளனர்.

**விலைகள் குறைந்தன!**

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு கிலோ ரூபாய் 29 ஆக இருந்த மிளகாயின் விலையானது, தற்போது அந்த விலையில் மூன்




அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படும் இன்றியமையாப் பொருள்களை நியாயமான விலையில் 'அமுதம்' வழங்குகிறது.

றில் ஒரு பங்காகக் குறைந்து கிலோ ரூ. 5.80 முதல் ரூ. 6.50 வரை விற்கப்படுகிறது. வெளிச் சந்தையில் சர்க்கரையின் விலையும் குறிப்பிட்ட அளவுக்குக் குறைந்துள்ளதாகப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. இருப்பினும், ஆண்டுதோறும் வழக்கமாக ஜூலை முதல் டிசம்பர் வரையிலான காலத்தில் உற்பத்தி குறைந்தும், பண்டங்கள் விலை சிறிது உயர்ந்தும் காணப்படும்; இந்த ஆண்டிலும் இதே காலத்தின்போது, பருவகால மாறுபாடுகளின் விளைவால், நுகர்வோர் விலைவாசிப் புள்ளிக் குறியீட்டெண் சற்று உயர்ந்தது. இந்த உயர்வு 1974-ஆம் ஆண்டில் இருந்ததைவிட மிகமிகக் குறைவானது. தமிழ்நாட்டில் நுகர்வோர் விலைவாசிப் புள்ளிக்குறியீட்டெண் அனைத்திந்திய சராசரியைவிடக் குறைவாக இருக்கிறது.

## ஜனதா சாப்பாடு

குறைந்த விலையில் ஜனதா சாப்பாடு வழங்க முதன் முதலாக முயற்சியினை மேற்கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இங்கு ஜனதா சாப்பாடு விலை ஒரு ரூபாய் எனச் சட்டத்தின் மூலம் வரையறுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு பிறப்பித்த உணவு நிறுவனங்கள் (உணவுப் பொருள்களின் விலைகளை வரையறுத்தல்-விலைப்பட்டியலைப் பார்வைக்கு வைத்தல்) ஆணையில், காப்பி, தேநீர் ஆகியவை உட்பட உணவகங்களில் பொதுவாக அதிக எண்ணிக்கையினரால் உட்கொள்ளப்படுகின்ற ஒன்பது பொருள்களின் அதிகபட்ச விலைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதுபோன்ற நடவடிக்கைகளைத் தவிர, நியாயமான விலையில் சத்துணவு கிடைக்கச் செய்ய, சிற்றுண்டி விடுதிகளை நடத்தவும் முன்வருமாறு தனித் தொண்டு நிறுவனங்களைத் தூண்டுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குறைந்த விலையில் சிற்றுண்டிகளை வழங்க 'கில்டு ஆப் சர்வீஸ்' நடத்தும் சிற்றுண்டி விடுதிகள், அனைத்து இந்திய மகளிர் கூட்டமைப்பு மன்றம் நடத்தும் 'அன்னபூர்ணா சிற்றுண்டி விடுதி', கோயம்புத்தூர் அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரி நடத்தும் 'அமுதம்' சிற்றுண்டி விடுதி முதலியன குறைந்த விலையில் சத்துணவை



உணவு தானிய உற்பத்தி பெருகுவதால் ஒளிமயமான எதிர்காலம் உருவாவது திண்ணமே!

வழங்கிச் சிறந்த முறையில் பணி புரிந்து வருகின்றன. தமிழ்நாடு இன்றியமையாப் பண்டங்கள் (இருப்புகள் - விலைப்பட்டியலைப் பார்வைக்கு வைத்தல்-கணக்குகளைப் பேணி வருதல்) ஆணை, சிப்பம் கட்டப்பட்ட பொருள்கள் (ஒழுங்கு முறைப்படுத்தல்) ஆணை ஆகியவற்றைத் தீவிரமாகச் செயல்படுத்தும் நடவடிக்கைகளைப் பொதுமக்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர். இவ்வாணைகள் விலைவாசி உயர்ந்துவிடாமலும், இன்றியமையாப் பொருள்கள் தட்டுப்பாடின்றிக் கிடைக்கச் செய்வதிலும் பெரும் பங்காற்றியுள்ளன.

## ஒளிமயமான எதிர்காலம்!


அரசு பின்பற்றிய தெளிவான உணவுக் கொள்கையும், பொது மக்களின் தேவையை உணர்ந்து நிர்வாகத்தினர் சுறுசுறுப்புடனும் விழிப்புணர்ச்சியுடனும் எடுத்த நடவடிக்கைகளும் வெளிச்சந்தையில் விலைவாசி உயர்ந்துவிடாமல் தொடர்ந்து விழிப்போடு கண்காணித்து வந்ததும், தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகள் வறட்சியினால் பாதிக்கப்பட்ட தமிழ்நாடு 1976-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் எதிர்நோக்கி நின்ற கடுமையான உணவு நெருக்கடி நிலைமையைச் சமாளிக்கப் பெரிதும் உதவின. மேலும், 1977-ஆம் ஆண்டின் உணவுத் துறையில் உறுதியும், உணவு உற்பத்திப் பெருக்கமும், குன்றாத வளமும் உடைய சூழ்நிலை காரணமாக ஒளிமயமான எதிர்காலம் தமிழ்நாட்டில் உருவாகுமென மக்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றனர்.



# குடிநீர்த் திட்டம்


## சிறப்புமிக்க சாதனைகள்!

—டி. வி. அந்தோணி, ஐ.ஏ.எஸ்.,
செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சி நிருவாகத்துறை, தமிழ்நாடு அரசு.



தமிழ்நாட்டின் மக்கள் தொகை 1971-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி 4.11 கோடியாகும். இவர்களில் 1.55 கோடி மக்கள், 2 மாநகராட்சிகள், 101 நகராட்சிகள், நகரியங்கள், 624 பேரூராட்சிகள் ஆகியவற்றில் வாழ்கின்றனர். கிராமப்புற மக்கள் தொகை 2.56 கோடியாகும்; இவர்கள் 12,347 ஊராட்சிகளில் அடங்கிய 58,595 கிராமங்களிலும் சிற்றூர்களிலும் வசிக்கின்றனர். மொத்தமுள்ள 103 நகராட்சி, . நகரியங்கள் மற்றும் மாநகராட்சிகளில் இன்னும் 7 நகராட்சிகளிலும், 3 நகரியங்களிலும் மட்டுமே, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்யப்பட வேண்டியுள்ளது. 1972-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வின்படி, சுமார் 18,960 கிராமங்களில் போதிய அளவு குடிநீர் வசதி கிடைக்காமலும், பற்றாக்குறை நிலைமையிலும் அல்லது நீரின் வழியாகப் பரவும் கொள்ளை நோய்கள் தோன்றுவதற்குரிய குடிநீரைக் கொண்டுள்ளதாகவும் இருந்தன என்பது தெரியவந்தது. இந்த நகராட்சிகளுக்கும், கிராமப் பகுதிகளுக்கும் குடிநீர் வசதி செய்து கொடுக்க, பல்வேறு திட்டங்களைத் தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம் சீரானமுறையில் மேற்கொண்டு வருகிறது. 1972-73-ஆம் ஆண்டில் தொடங்கி, இப்போது ஆண்டொன்றுக்குச் சராசரியாக 1,750 கிராமங்களில் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

1976-77-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் 15 மாவட்டங்களில் 12 மாவட்டங்கள் எதிர்பாராத வறட்சியினால் பாதிக்கப்பட்டன.



குறுகிய காலத்தில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க 'பவர் டிரில்'கள் இரவும் பகலும் இயங்கி, துளைக்கிணறுகள் அமைத்திட உதவின!

ஆகவே, குடிநீர் பற்றுக் குறையால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான கிராமங்களிலும் நகர்ப் பகுதிகளிலும் குடிநீர் வழங்கும் பெருந்திட்ட மொன்றை அரசு மேற் கொண்டது. வறட்சியால் பாதிக்கப்பட்ட எல்லா மாவட்டங்களிலும் சுமார் 7 கோடி ரூபாய் செலவில் 6,700 குழாய்க் கிணறுகளைத் தோண்டும் திட்டமொன்று 3-4-1976-ல் தொடங்கப் பட்டது. இத்திட்டத்தை மேற்கொள்வதற்காக இம்மாநிலம் முழுவதிலிருந்தும் வெளி மாநிலங்களிலிருந்தும் துளையிடும் கருவிகள் தருவிக்கப்பட்டன. துளைக் கிணறு ஒவ்வொன்றும் 120 முதல் 300 அடி ஆழம் வரை செல்லக்கூடியது. இவற்றில் பெரும்பாலானவை கையால் அடிக்கும் குழாய்களுடன் பொருத்தப்பட்டவையாகும். கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள கிணறுகள் 250 முதல் 300 அடி ஆழம் வரை செல்லுகின்றன; அங்கு, பெரும்பாலான இடங்களில் விசைக் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**ஐந்தாண்டுகளில் செய்த சாதனைகளுக்குச் சமமாக எட்டே மாதத்தில் செய்யப்பட்டன!**

எட்டே மாதங்களில் புதிதாக 6,700 கிணறுகள் தோண்டப்பட்டு, திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டது. இதன்மூலம், முந்திய ஐந்து ஆண்டுகள் முழுவதும் எத்தனை குடிநீர் வழங்கும் குழாய்க் கிணறுகள் இறக்கப் பட்டனவோ அதே எண்ணிக்கையில் குடிநீர் வழங்கும் குழாய்க் கிணறுகள் இந்த எட்டே மாதங்களில் இறக்கப்பட்டன. இது ஒரு பெரிய சாதனையாகும்.

இன்னும் குடிநீர்க் கிணறுகள் தோண்டப் பட்டு முடியாமலுள்ள, இடர்ப்பாடு நிரம்பிய ஒரு சில பகுதிகளில், பற்றுக்குறையைச் சமாளிக்க மேலும் 1000 ஆழ்துளைக் கிணறுகள் இறக்கப்படுகின்றன; அவை, ஒரு கோடி ரூபாய் கூடுதல் செலவுடன் 1977-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இறுதிக்கு முன்னர் தோண்டி முடிக்கப்படும். இங்கே இணைக்கப்படவிருக்கும் கைக் குழாய்களையும் இதற்கு முன்னர் இறக்கப்பட்ட குழாய்க்கிணறுகளில் இணைக்கப் பட்டுள்ள கைக் குழாய்களையும் ஆண்டு தோறும் 25 இலட்சம் ரூபாய் செலவில் பேணி வருவதற்கு குடிநீர்க் குழாய்க்கிணறுகள் பேணுதல் நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தவும் அனுமதி வழங்கியுள்ளது.

**இரண்டு இலட்சம் மக்களுக்கு முதன்முதலாக நிரந்தரக் குடிநீர் வசதி கிடைத்தது!**

நம் மாநிலத்தில் சில கிராமங்களில் நிலத்தடி நீர் உவர்ப்பாக இருப்பதால் அல்லது நிலத்தடி நீர் கிடைப்பதே அரிதாக இருப்பதால் ஆழ் துளைக் கிணறு தோண்டும் திட்டம்





**தானியங்கிக் குழாய்க் கிணறு (ஆர்ட்டீசியன் கிணறு)**

இக்கிராமங்களுக்குப் பெரிதும் உதவியாக அமையவில்லை. இப்பகுதிகளிலுள்ள மக்கள் பல ஆண்டுகளாகவே தங்கள் குடிநீர் தேவைக்கு வானவாரிக் குளங்களையே நம்பியுள்ளனர். இதன் காரணமாக, நீர் மூலம் பரவக்கூடிய பல்வேறு நோய்கள் பரவ ஏதுவாயிற்று. வறட்சிக் காலத்தில் இக்குளங்களும் வற்றி விடுகின்றன. இப்பகுதிகளின் பிரச்சனையைத் தீர்க்க, 40 கிலோ மீட்டர் தொலைவுக்குள் அமைகின்ற 'பொது நிலத்தடி நீர் நிலைகளில்' இருந்து, குழாய்கள் மூலம் இக்கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் பல திட்டங்களைத் தமிழ்நாடு அரசு முதன் முதலாக மேற்கொண்டுள்ளது. மொத்தம் 2 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களுக்கு முதன் முதலாக நிரந்தர, குடிநீர் வசதி கிடைக்கும். இவ்வாண்டில், இத்திட்டங்களுக்கு மொத்தம் 3 கோடி ரூபாய் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. 51 கிராமங்களில், சுமார் 40,000 மக்களுக்கு நன்மை அளிக்கக்கூடிய 3 திட்டங்கள் ஏற்கெனவே முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணி விரைவாக நடந்து வருகிறது. நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்களால் திருநெல்வேலி மாவட்டம், ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 44 கிராமங்களும், இராமேசுவரம் தீவிலுள்ள ஐந்து சிற்றூர்களும் குடிநீர் வசதி பெறுகின்றன.

துளைக் கிணறுகள் தோண்டுவதுடன், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள 3,200 கிணறுகளை ஆழப்படுத்தி, குடிநீர் வழங்கு திட்டத்தை மேம்படுத்துவதற்கு ரூபாய் 97.5 இலட்சத்தை அரசு அனுமதித்துள்ளது. இப்பணிகளை ஊராட்சி ஒன்றியங்கள் நிறைவேற்றின. இத்துடன், இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டங்களில் ஊருணிகளை ஆழப்படுத்தவும் 17.21 இலட்சம் ரூபாய்க்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**அடுத்த மூன்றாண்டிற்குள் அனைத்துக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி!**

கிராமப் பகுதிகளில் "குடிநீர் நிலைமை குறித்து அரசுக்குக் கிடைத்த தகவல்களில் தவறுகள் இருந்தன என்பது, பின்னர் ஏற்பட்ட வறட்சியிலிருந்து தெரிய வந்தது. ஆகவேதான், சிற்றூர் தோறும் புதியதோர் ஆய்வு தொடங்கப்பட்டுள்ளது. இன்னும் ஒரு சில வாரங்களில் இந்த ஆய்வு முடிக்கப்பட்டு, எவ்வெவற்றுக்கு முன்னுரிமை அளிப்பதென்று பரிசீலனை செய்யப்படும். நீர் பற்றாக் குறையாலும், கொள்ளை நோயாலும் பாதிக்கப்பட்டுள்ள எல்லாப் பகுதிகளிலும் வாழும் மக்களுக்கு அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க முடியுமென்ற நம்பிக்கை இப்போது உள்ளது.


நகராட்சிகளின் குடிநீர் வழங்கு திட்டங்களும் நடப்பாண்டில் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. நகர்ப் பகுதிக் குடிநீர் வழங்கு திட்டங்களுக்காக, கடந்த காலத்தில் ஆண்டு தோறும் சுமார் 5 கோடி ரூபாய் செலவிடப்பட்டது, ஆனால், 1976-77-ஆம் ஆண்டில் இச்செலவு 8.2 கோடி ரூபாய் ஆக உயரலாம்.

கோயம்புத்தூர் மாநகரில் நீண்ட காலமாகவே நீர்ப்பற்றாக்குறை இருந்து வருகிறது. கோயம்புத்தூர் மாநகருக்கும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் தற்போது 70 இலட்சம் காலன் குடி நீர்தான் கிடைத்து வருகிறது; இவ்விடங்களுக்கெல்லாம் 1980-ஆம் ஆண்டில் 220 இலட்சம் காலன் நீர் கிடைக்கச் செய்வதற்காகத் தற்போது மேற்கொண்டுள்ள திட்டம் மிகவும் குறிப்பிடத்தக்க பணியாகும்.

திருச்சிராப்பள்ளி குடிநீர் வழங்கு திட்டம், இந்நகருக்கு அன்றாடம் வழங்கும் குடிநீர் அளவை 40 இலட்சம் காலனிலிருந்து 70 இலட்சம் காலனாக உயர்த்தும்.

வருகின்ற மூன்றாண்டுக் காலத்தில் தமிழ்நாட்டிலுள்ள எல்லா நகராட்சிகளுக்கும் நகரியங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க இயலுமென அரசு நம்புகிறது.

தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம் மூலமாக, கிராமப்புற, குடிநீர் வழங்கு திட்டத்திற்காக, 1971-72-ஆம் ஆண்டிலிருந்து 1975-76ஆம் ஆண்டு வரை, மொத்தம் சுமார் 13.6 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. ஆனால், இந்த ஆண்டின் (1976) திட்டத்திற்கு மட்டும் 12 கோடி ரூபாய் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம், கடந்த ஐந்து ஆண்டுகளில் எவ்வளவு கிராமங்கள் பயனடைந்தனவோ அவ்வளவு கிராமங்கள் இந்த ஓராண்டில் பயனடையும். இது பெருமை தரும் சாதனையாகும்.



# நல்வாழ்வு-குடும்பநலத் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம்

—பி. முராரி, ஐ.ஏ.எஸ்.,
செயலாளர்,
நல்வாழ்வு—குடும்பநலத்துறை,
தமிழ்நாடு அரசு.

நகர கிராமப் பகுதி மக்களுக்குத் தமிழ்நாடு அரசு எப்போதுமே முனைப்புடன் சுகாதாரப் பணிகளைச் செய்து கொடுக்கும் நன்கு மேம்பட்ட முறையொன்றைப் பின் பற்றி வந்துள்ளது; அது மட்டுமின்றி ஏழை எளிய மக்களுக்கென்றே தனிக் கவனத்துடன் சிறப்புத் திட்டங்களையும் மேற்கொண்டு வந்துள்ளது. அவ்வாறு பல்வேறு திட்டங்களை மேற்கொண்டாலும் நோய் வாய்ப்பட்ட மக்கள் மாநகர, மாவட்ட மருத்துவ மனைகளுக்கு எண்ணற்றோர் வருகின்ற காரணத்தால், கூட்ட நெருக்கடியால் சில இடர்ப்பாடுகளும் பிரச்சினைகளும் இருந்தன. தமிழகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமலுக்கு வந்த பிறகு, ஏழைகளுக்கும் மருத்துவ உதவி வேண்டுவோர்க்கும் மருத்துவ வசதிகள் செய்து கொடுப்பதில் பல புதிய வசதிகள் செய்யப்பட்டன. ஓராண்டுக்கால குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் சுகாதாரத் துறை முனைப்புடன், மற்ற துறையினரும் இதனை எடுத்துக் காட்டாய்க் கருதிப் பின்பற்றத் தக்க அளவுக்குச் செயலாற்றி வந்துள்ளது.

## வந்துபோகும் நோயாளிகளுக்கான சிகிச்சைப் பணிகள்

முன்பெல்லாம் கடுமையான நோய்கள் மற்றும் அதிர்ச்சியால் உண்டாகும் நோய்களுக்கெல்லாம் புற நோயாளிகள் சிகிச்சைப் பிரிவில்தான் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. மருத்துவ மனை நிர்வாகத்தில் எந்த நோயாளியை எந்தப்பிரிவில் சேர்க்க வேண்டும், எந்த நோயாளிக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதெல்லாம் மிகவும் இன்றியமையாத, அடிப்படை அம்சங்களாகும், ஆனால் இத்தகைய ஒழுங்குமுறை இதற்கு முன்னர் பின்பற்றப்படவில்லை; எல்லா நோயாளிகளும் ஒரே மாதிரிதான் கவனிக்கப்பட்டு வந்தனர். அரசு இது குறித்துப் பல ஆய்வுகள் நடத்திய பிறகு இரண்டு ஆணைகளைப் பிறப்பித்தது. அந்த ஆணைகளின்படி நோய் சிகிச்சைப் பிரிவுகள் நோயின் தன்மைக்கேற்ப சாதாரண நோய், கடுமையான நோய், அதிர்ச்சி நோய் என வகைப்படுத்தப்பட்டன; இவ்வாணைகள் கடுமையான நோயினாலும், அதிர்ச்சி நோயினாலும் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்காகத் தீவிர சிகிச்சைப் பிரிவுகளும் ஏனையோருக்காக 24 மணி நேரமும் பணியாற்றும் எலும்பு முறிவுச் சிகிச்சைப் பிரிவும் மருத்துவமனையில் தொடங்குவதற்கு வகை செய்தன. அரசின் ஆணைகளை அண்மையில்தான் தீவிரமாகச் செயல்படுத்த முடிந்தது; நோய்களின் தன்மைக்கேற்ப அவற்றை வகைப்படுத்தும் பணி நிறைவேற்றப்பட்டுள்ளது; புற நோயாளிகளுக்கும், கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் சிகிச்சை அளிப்பதில் அவசியமான ஒழுங்குமுறை பின்பற்றப்பட்டது. இத்தகைய நன்முறைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வேளையில் மருத்துவக் கல்வி இயக்குநர் முக்கிய விதிமுறை ஒன்றை வகுத்தார். அக நோய் சிகிச்சைப் பிரிவின் செயல்முறை போன்றே, புறநோய் சிகிச்சைப் பிரிவிலும் ஒரு நோயாளியை, குறிப்பிட்ட ஒரு மருத்துவர்தான் நாள்தோறும் கவனிக்க வேண்டும் என்பதுதான் அந்த விதிமுறை. இதனால், சிகிச்சையின் தரத்தில் வரவேற்கத்தக்க அளவுக்குப் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. இதன் காரணமாக, நோயாளிகளுக்குப் பெரும் மன நிறைவு ஏற்படுகிறது: மருத்துவர்கள் சிகிச்சைக்காக எடுத்துக் கொள்ளும் கால அளவும் குறைகிறது. மருந்துகளின் உபயோகம் சோதனைக்கூட ஆய்வுகள் எல்லாம் கூடுமானவரை குறைகின்றன. ஏனைய மருத்துவ மனைகள் எல்லாவற்றிலும் இந்த முறை பின்பற்றப்படும்.

எட்டு மருத்துவக் கல்லூரிகளில் 6 தீவிர சிகிச்சைப் பிரிவுகளும், 4 தீவிர இருதய நோய் சிகிச்சைப் பிரிவுகளும் தொடங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவை திறம்படச் செயல்பட்டு வருகின்றன.

## நோயாளிகளின் வீடு தேடி மருத்துவர்கள் செல்கின்றனர்

சமுதாயத்தின் தேவைகளுக்கேற்ப மருத்துவக் கல்வி முறையை மாற்றியமைப்பது, மருத்துவர்களை கிராமங்களுக்கு அனுப்புவது குறித்து ஸ்ரீவத்வசா



சென்னை இராயப்பேட்டை அரசினர் மருத்துவ மனையில் விபத்துக்களைக் கவனிக்கும் பகுதியை உள்துறை இராஜாங்க அமைச்சர் திரு ஓம் மேத்தா அவர்கள் 22—1—1977 அன்று திறந்து வைத்துப் பார்வையிட்டார்.


குழு ஓர் அறிக்கை கொடுத்துள்ளது; அந்த அறிக்கையின் மீது அண்மைக் காலத்தில் பெருமளவில் விவாதங்கள் நடந்துள்ளன. இத்தகைய மகத்தான குறிக்கோள் இருப்பினும், ஏழை மக்களின் இல்லங்களுக்கே சென்று இலவச சிகிச்சை அளிப்பதற்காக மருத்துவர்களை அல்லது தனியார் நிறுவனங்களை அனுப்புவது அரசுக்கு இயலவில்லை. பல மாநாடுகள் நடந்தன; பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவையனைத்தும் பயனளிக்கவில்லை. மருத்துவக் கல்லூரித் துறைத்தலைவர்கள், முதல்வர்கள், கண்காணிப்பாளர்கள் கூட்டமொன்று சென்னையில் நடைபெற்றது. மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர் ஒவ்வொருவருக்கும் 2,500 நோயாளிகள் என்ற விகிதாசாரத்தைப் பல்வேறு மருத்துவக் கல்லூரிகளின் சிகிச்சைப் பிரிவுத் தலைவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது; அதன்படி, சம்பந்தப்பட்ட மருத்துவக் கல்லூரியிலிருந்து நடைதூரத்திலுள்ள ஓரிடத்தில் அதாவது, ஒரு கிராமத்திலுள்ளதைப் போன்ற வாழ்க்கைச் சூழல்களுள்ள அல்லது அந்நிலைமைகளைக் காட்டிலும் மோசமான சூழல்களமைந்த ஓரிடத்தில் உள்ள 2,500 பேருக்குச் சிகிச்சை அளிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என விதிக்கப்பட்டது. ஆளுநர் அவர்களும் அவரது ஆலோசகரும் இக்கருத்துக்கு ஆதரவு தெரிவித்தனர், மருத்துவக் கல்லூரி இயக்குநரின் நடவடிக்கைக்கு ஒப்புதல் அளித்து அரசு தற்போது ஆணைகள் பிறப்பித்துள்ளது; மாநகரிலுள்ள 102 மருத்துவப் பிரிவுகள், 2.5 லட்சம் மக்கள் கொண்ட குடிசைப் பகுதிகளில் சிகிச்சை அளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டும், இம்மாநிலம் முழுவதிலும் உள்ள 8 மருத்துவக் கல்லூரிகளைச் சேர்ந்த மொத்தம் 274 மருத்துவப் பிரிவுகள், அவற்றைச் சுற்றிலுமுள்ள குடிசைப் பகுதிகளில் சிகிச்சை அளிக்க ஒப்புதல் வழங்கியும் அந்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இவ்வாறாக, மொத்தம் 6.85 இலட்சம் குடிசைவாசிகளை மருத்துவ சிகிச்சைப் பிரிவுத் தலைவர்கள் கவனித்துக் கொள்கின்றனர். அவர்கள் குடிசைவாசிகளின் வீடுகளுக்கே சென்று ஒருங்கிணைந்த சுகாதாரப் பாதுகாப்புப் பணி செய்கின்றனர்.

தங்களுக்கென்று தனி மருத்துவ ஆலோசனை அறைகள் பெற்றுள்ள முதுநிலை மருத்துவப் பேராசிரியர்களைச் சிகிச்சை சம்பந்தமாகச் சந்தித்து ஆலோசனை பெற வேண்டுமானால் பதினைந்து நாட்கள் கூடக் காத்திருக்க வேண்டும்; அவர்களெல்லாம் தற்போது குடிசைவாசிகளின் வீடுகளுக்கே சென்று மருத்துவ சிகிச்சை அளிக்கின்றனர். இம்மாநிலத்தில் தொடங்கப்பட்ட ''நோயாளிகளின் வீடுகளுக்கே சென்று சுகாதாரப் பாதுகாப்புச் சிகிச்சை' அளிக்கும் முறையில் இது குறிப்பிடத்தக்கதொரு சாதனையாகும். இத்திட்டம் அறிமுகப்படுத்தப் பெற்ற 15 நாட்களுக்குள்ளேயே எதிர்பாராத வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு நகரைத் துயரில் ஆழ்த்தியது. அந்த வகையில் உரிய நேரத்தில் உதவிக்கு வந்த ஒரு திட்டம் என்றே இதனைக் கூறலாம். 102 மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் மாநகருக்குள் தொற்று நோய்த் தடுப்பு ஊசி குத்தும் பணியில் ஈடுபட்டன. மொத்தமுள்ள 8 இலட்சம் குடிசைவாசிகளில் 6.11 இலட்சம் பேருக்கு இந்த நோய்த் தடுப்பு ஊசி 15 நாளில் குத்தப்பட்டது; 10 நாட்களிலேயே பெரும்பாலோருக்கு ஊசி குத்தி முடிக்கப்பட்டது. ஏனையோருக்குத் தொற்று நோய்த்தடுப்பு ஊசி குத்தும் பணியைப் பொதுச் சுகாதாரத் துறையினரும், மருத்துவத் துறையினரும் மேற்கொண்டு தொடர்ந்தனர். இதன் காரணமாக இம்மாநகரில் காலராவினால் ஏற்படும் பெரியதோர் அபாயம் தடுக்கப்பட்டது.

## தொற்று நோய்த் தடுப்பு

கொடிய தொற்றுநோயான பெரியம்மை நோய் கடந்த காலத்தில் எண்ணற்ற உயிர்களைக் குடித்து வந்தது. இம்மாநிலத்தில் அந்நோய் அறவே ஒழிக்கப்பட்டு விட்டது. இம்மாநிலத்தில்








சென்னை இராயப்பேட்டை அரசினர் மருத்துவ மனையின் விபத்துக்களைக் கவனிக்கும் பகுதியைச் சார்ந்த நடமாடும் ஊர்தியின் பணியினைத் தமிழ்நாடு ஆளுநர் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் 22—1—1977 அன்று துவக்கி வைத்தார்.

எவரும் பெரியம்மை நோயால் பாதிக்கப்படவில்லை. **இந்தியாவில் பெரியம்மை நோயை அறவே ஒழித்த முதல் மாநிலம் என்ற பெருமையைத் தமிழ்நாடு பெற்றது.** என்றாலும், இந்நோய் ஒழிப்புப் பணிக்கென நியமிக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்ந்து விழிப்புடன் பணியாற்றி வருகின்றனர்.


1976-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாளிலிருந்து தமிழ்நாடு அரசு உரிய நேரத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகள், நோயாளிகள் குறித்த கணக்கெடுப்புப் பணிகள் காரணமாக மலேரியா நோய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 1966-ஆம் ஆண்டில் மாநில மலேரியா ஒழிப்புக்குழு அமைக்கப்பட்டது; அதன் பின்னர் அக்குழு கூடவே இல்லை; 1976-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் ஆளுநரின் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்களைத் தலைவராகக் கொண்டு புதிய குழுவொன்று அமைக்கப்பட்டது. இந்நோயைத் தடுக்கும் ஏற்பாடுகளை மேற்கொள்ள அக்குழு மாதந்தோறும் கூடி வருகிறது. நோய் குறித்த இடையறாத கணக்கெடுப்புப்பணிகளும், மலேரியா ஒழிப்பு நடவடிக்கைகளும் மேற்கொண்டதன் காரணமாக மலேரியா நோய் கணிசமான அளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இது வகையில் தொண்டு நிறுவனங்கள், தேசிய மாணவர் சேவைப்படை முதலிய அமைப்புகள், அரசின் முயற்சிகளுக்குப் பெரிதளவில் உதவியும் ஆதரவும் அளித்து வருகின்றன.

தொழுநோய் ஒழிப்புத் தேசியத் திட்டத்தின் ஒரு பகுதியாக, தொழுநோய் பரவுதலைக் கட்டுப்படுத்தவும், தொழு நோயாளிகளுக்கு நவீன சிகிச்சையும் வசதிகளும் அளிக்கவும் 1976-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களிலிருந்து தனி இயக்கம் ஒன்றை மாநில அரசு தொடங்கியுள்ளது. மொத்தம் 7.5 இலட்சம் தொழு நோயாளிகள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். 1976-77-ஆம் ஆண்டில் தொழு நோய்க் கட்டுப்பாட்டுச் சிகிச்சைப் பிரிவுகள், பழைய சிகிச்சைப் பிரிவுகளை எல்லா வசதிகளும் கொண்டவையாகத் தரமுயர்த்தல், நகர்ப்புறத்தில் தொழுநோய்க் கட்டுப்பாட்டு நிலையங்களை அமைத்தல், தொழு நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக மருத்துவ மனையில் படுக்கைகள் கொண்ட தற்காலிக வார்டுகள் ஏற்படுத்தல், தொழு நோயாளிகளுக்கு அறுவைச் சிகிச்சை செய்து, அவர்களைப் பழைய நிலைக்குக் கொண்டு வர உதவும் சிகிச்சைப் பிரிவுகளை அமைத்தல் முதலியவை தொடர்பாக 60.53 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. 1976-ஆம் ஆண்டில் பள்ளிக் குழந்தைகளிடையே தொழுநோய் பரவியுள்ளதா என்பதைக் கண்டறிவதற்காக மருத்துவ பரிசோதனை மேற்கொள்வதற்கான புதியதொரு திட்டமொன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆசிரியர்களும், மருத்துவத் துணைப்பணியாளர்களும் மருத்துவர் குழுவுடன் இணைந்து, பள்ளி மற்றும் பள்ளிப் பருவம் வரா பாலர் பள்ளிச் சிறுவர்களைப் பரிசோதனை செய்து, திறம்படச் சிகிச்சை அளித்துப் பணியாற்றுவர்.

**ஊட்டச்சத்து மாத்திரை வழங்கும் திட்டம்:**

ஊட்டச்சத்து குறைவு, வைட்டமின் 'ஏ' பற்றுக்குறை காரணமாக, தமிழ்நாட்டிலுள்ள சுமார் 2 இலட்சம் குழந்தைகள் படிப்படியாகப் பார்வை இழந்து வருவதாக ஆய்வு அறிக்கை ஒன்றில் கூறப்பட்டிருந்தது; இதைக் கண்ணுற்றுப் பெரிதும் அதிர்ச்சியுற்ற இந்தியப் பிரதமர் அவர்கள் நிவாரண நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக 1976 ஆம் ஆண்டு மத்தியில் பிரதமர் நிவாரண நிதியிலிருந்து 2 இலட்சம் ரூபாய் வழங்கினார். தமிழ்நாடு அரசு இந்த நன்கொடையைப் பயன்படுத்தி, ஊட்டச்சத்துணவுத் திட்டம் நடைமுறையில் இல்லாத மாவட்டம் ஒவ்வொன்றிலும் உள்ள ஒரு வட்டாரத்தில் குழந்தைகளிடையே தோன்றும் பார்வையின்மையைத் தடுத்து, அதைக் கட்டுப்படுத்தும் திட்டத்தைச் செயல்படுத்த அனுமதி வழங்கியுள்ளது.

மாவட்ட சுகாதார அலுவலரும் மக்கள் தொடர்பு அலுவலரும் இத்திட்டத்திற்குப் பொறுப்பேற்றுள்ளனர். மருத்துவத் துணைப் பணியாளர்களும், சமுதாய நலப் பணியாளர்களும் ஊட்டச்சத்து, சுகாதாரக் கல்விப்



1976-ஆம் ஆண்டில்தான் கல்ராயன் மலைப் பகுதியில் வாழும் மக்களுக்கு முதன்முதலாக மருத்துவ வசதி கிடைத்தது!

பணிகளை மேற்கொள்வர்; பற்றுக் குறை நோய்களைக் கண்டறிவர்; தேவையானவர்களுக்கு வைட்டமின் 'ஏ' கலந்த மருந்துகள் வழங்குவர்; மக்கள் தங்கள் உணவில் கீரை வகைகளைச் சேர்த்துக் கொள்ளுமாறு எடுத்துக் கூறுவர்.

**பழங்குடி மக்களின் நலங்காக்கும் திட்டம்:**

பழங்குடி மக்களுக்கு மருத்துவப் பாதுகாப்பு வசதிகள் செய்து கொடுப்பதில் மருத்துவப் பணிகள் துறை, அதிக நாட்டம் செலுத்தி வருகிறது. கடந்த ஓராண்டில் பழங்குடி மக்கள், கொத்தடிமை முறையிலிருந்து விடுதலை பெற்றவர்கள் ஆகியோரின் நன்மைக்காக, மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருந்தகங்கள் தொடங்கும் சிறப்புத் திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மலைப்பகுதிகளில் மருத்துவ வசதிகள் செய்து கொடுப்பதும் இத்தகைய சிறப்புத் திட்டங்களில் ஒன்றாகும். 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் ஒரு பகுதியாக, கல்ராயன் குன்றுகளில் கொத்தடிமைகளாக இருந்த பழங்குடி மக்கள் விடுவிக்கப்பட்டனர்; அவர்களின் நன்மைக்காக நடமாடும் மருத்துவப்பிரிவு ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது; கள்ளக்குறிச்சி, அரூர், ஆத்தூர் ஆகிய இடங்களில் உள்ள வட்ட மருத்துவ மனைகள் மூன்றில் ஆய்வுக்கூட வசதிகளைப் பெருக்கியுள்ளது. இப்பகுதிகளில் குழந்தைகளுக்கு நோய்த்தடுப்பு ஊசி குத்தவும், சுகாதார சுற்றுப்புறத் தூய்மைப் பிரச்சினைகளைக் கவனிப்பதற்காகவும் மூன்று சுகாதார ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**குடும்பநலத் திட்டம்**


குடும்ப நலத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு எப்போதுமே முன்னிலையில் இருந்து வந்திருக்கிறது. எனினும் குடியரசுத் தலைவர் ஆட்சி அமலுக்கு வந்த பிறகு, இத்திட்டத்தில் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 25 அம்சத் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஆய்வு நடத்துவதற்காகக் கூடும் ஒவ்வொரு கூட்டத்திலும், குடும்ப நலத் திட்டப் பணியைத் தொடர்ந்து மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்படுகின்றன.

இம்மாநிலத்தில் 1976-77-ஆம் ஆண்டில், 5 இலட்சம் ஆண்களுக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும், 35,000 பெண்களுக்குக் கருத்தடை வளையங்கள் பொருத்த வேண்டும், 1,47,500 பேர் வழக்கமான கருத்தடை முறையைப் பின்பற்றச் செய்ய வேண்டும் என்று இந்திய அரசு இலக்கு வரையறுத்தது. இதுவரை இம் மாநிலம் குடும்பநலத்திட்டத்தில் எய்திய சாதனை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | பேர் |
|---|---|
| ஆண்களுக்கு அறுவைச் சிகிச்சை | 5,15,678 |
| பெண்களுக்குக் கருத்தடை வளையங்கள் பொருத்துதல் | 26,891 |
| வழக்கமான கருத்தடை முறையைப் பின்பற்றுதல் | 1,42,321 |

அரசு மருத்துவ நிலையங்களில் ஓரளவு வசதிகள்தான் இருக்கின்றன; ஆகவே, கருத்தடைச் சிகிச்சை முகாம் முறையை அரசு வலியுறுத்தி வருகிறது. இம்முறையினால் குறிப்பிடத்தக்க பலன்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதை வைத்து அரிமா சங்கம், ரோட்டரி சங்கம், வட்ட மேசை சேவா சங்கம் முதலிய அமைப்புகள் சென்னை மாநகரத்திலும், ஏனைய நகரங்களிலும் கருத்தடைச் சிகிச்சை முகாம்களை வெற்றியுடன் நடத்தி வருகின்றன. உள்ளாட்சி மன்றங்கள், கிராமத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இத்தகைய சிறப்பு முகாம்களை நடத்துமாறு இந்த அமைப்புகள் மாவட்டங்களிலுள்ள தங்கள் கிளைகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளன.






'பின்னி அண்டு கம்பெனி', மெட்ராஸ் சிமெண்ட்ஸ், 'போர்ட் டிரஸ்ட்', 'டாக் லேபர் போர்டு முதலிய தொழில் துறையினர் சிறப்பு முகாம்கள் நடத்தினர். இந்த முகாம்கள் நம்பிக்கையூட்டும் பலன்களை அளித்தன. கருத்தடைச் சிகிச்சைக்குப் பிறகு, பிந்திய வசதிகள் செய்து கொடுப்பதில் பெரும் கவனம் செலுத்தப்படுகிறது என்பது இந்த முகாம்களில் குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும்; இவ்வாறு வசதிகள் செய்து கொடுக்கப்படுவதால் இம்முறையை ஏனையோரும் ஊக்கத்துடன் பின்பற்றுவதற்கு வாய்ப்பாக அமைந்தது. தொண்டு நிறுவனங்கள், இளைஞர் சங்கம், மாதர் சங்கம் போன்ற அமைப்புகளும் இத்திட்டத்தில் பங்கு கொண்டுள்ளன.

சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள், கரும்பு பயிரிடுவோர், அவர்தம் பணியாளர்கள் ஆகியோரின் நன்மைக்காக, 10-15 நாட்கள் கொண்ட குடும்பநலத் திட்டச்சிறப்புமுகாம்கள் நடத்துமாறு சர்க்கரை ஆலை அதிபர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில், இத்திட்டம் சம்பந்தமாகக் குறிப்பிடத் தக்க அம்சம் என்னவென்றால், எல்லாச் சிறுபான்மை மதத்தினரும் குடும்பநலத் திட்டத்தை ஏற்றுக் கொள்கின்றனர் என்பதுதான். அவர்களில் பலரும் இத்திட்டத்தைப் பின்பற்றி, அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள முன் வந்துள்ளனர்.

**புதிய சலுகைகள்**


அரசுப் பணியாளர்கள், பொது மக்கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள் முதலியோர் இத்திட்டத்தைப் பின்பற்றினால் கிடைக்கக்கூடிய சலுகைகள் என்னென்ன, பின்பற்றாவிடில் பெறவியலாதவை என்னென்ன, என்று வகுத்துக் கூறப்பட்டுள்ளன. அரசுப் பணியாளர்களைப் பொறுத்தவரை, பேறுகால விடுப்பு, பயணப்படி, மருத்துவச் சலுகைகள் முதலியன முதல் மூன்று குழந்தைகள் பெறும் வரைதான் என்று வரையறுக்கப்பட்டுள்ளன. அரசிதழ்ப் பதிவு பெறாத அரசுப் பணியாளர் அல்லது அவரது மனைவி அறுவைச் சிகிச்சை செய்து கொண்டால் அவருக்கு முன்கூட்டியே ஒரு சம்பள உயர்வு அளிக்கப்படும் என்று அரசு அண்மையில் அறிவித்துள்ளது. அரசுப் பணியாளர்கள் மூலம் இத்திட்டத்திற்கு மேலும் ஊக்கமளிக்கும் வேறுபல நடவடிக்கைகள் மேற்கொள்வது பரிசீலனையில் உள்ளன.

குடும்பநலத்திட்டத்தின் குறிப்பிடத்தக்கதோர் அம்சமாக இவ்வாண்டு பேறுகால - குழந்தை நலத் திட்டங்களில் அதிக நாட்டம் செலுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் பேறுகால- குழந்தைகள் நலத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதில் நாம் முன்னேற்றம் கண்டுள்ளோம்.

1000 பேருக்கு 29 குழந்தைகள் என்ற குறைந்த அளவு பிறப்பு விகிதாசாரத்தைத் தமிழ்நாடு எட்டியுள்ளது.

ஐந்தாவது ஐந்தாண்டுத்திட்டக் கால இறுதியில் 1,000 பேருக்கு 25 குழந்தைகள் என்ற அளவுக்கு பிறப்பு விகிதாசாரத்தைக் குறைப்பதன் மூலம், தேசிய மக்கள் தொகைக் கொள்கை இலக்கை எட்டுவதற்கான தருணம் வந்துள்ளது.





# இந்து சமய அறநிலைய நிர்வாகம்

— ஜி. எஸ். சேஷாத்திரி, ஐ.ஏ.எஸ்.,
செயலாளர், வணிகவரி மற்றும் சமய அறநிலையத்துறை, தமிழ்நாடு அரசு.

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களும், மடங்களும் நமது நாட்டின் பண்பாட்டினையும், பாரம்பரியத்தையும் பேணிப் பாதுகாப்பதற்குத் தமது சிறப்பான பங்கை ஆற்றியுள்ளன என்று பெருமையோடு கூறலாம். பன்னெடுங்காலமாகவே மாநில, அரசு, பொதுமக்களின் சமய அறக் கட்டளைகளைப் பாதுகாப்பதைத் தனது பணிகளில் ஒன்றாகக் கருதியதே இதற்குக் காரணமாகும். 1817-ஆம் ஆண்டைய சென்னை ஒழுங்குமுறை விதிகள் (7) முதல் தற்போது செயலில் உள்ள சட்டம் வரையில் (22/1959) உள்ள எண்ணற்ற ஒழுங்குமுறை விதிகள் இக்கொள்கையைச் செயல்படுத்த உதவின.

1959-ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் இந்து சமய நிறுவனங்கள் பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் என்றும், பட்டியலிடப்படாத நிறுவனங்கள் என்றும் வகைப் படுத்தப் பட்டுள்ளன. அறங்காவலர்களை நியமித்தல், திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தல், வரவு செலவுத் திட்டங்களுக்கு அனுமதி வழங்குதல், கணக்குகளைத் தணிக்கை செய்தல் முதலியவற்றிற்காக ஆணையாளருக்கும், அவரது சார்நிலை அதிகாரிகளுக்கும் அதிகாரங்களை வழங்கியதன் மூலம் மேற்பார்வைப் பணி செய்யப்பட்டு வருகின்றது. மாநில அரசு நிதிகளிலிருந்து அரசு ஆண்டொன்றுக்குக் கொடுக்கும் ஒரு இலட்சம் ரூபாய் அடையாளத் தொகை தவிர இத்துறையை நிர்வகிப்பதற்கான செலவு முழுவதும் இச்சமய நிறுவனங்கள் மீது விதித்து வாங்கப்படும் தொகையின் மூலம் சரிக்கட்டப்படுகிறது. அவற்றின் ஆண்டு வருமானத்தில் 2 முதல் 7 சதவீதம் வரை தொகை வசூலிக்கப்படுகிறது. தவிர, 1,000 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் ஆண்டு வருமானம் உள்ள கோயில்களிலிருந்து 1.5 சதவீதம் தணிக்கைக் கட்டணமாகவும் வாங்கப்படுகிறது. அதேபோல, திருக்கோயில்கள், அறக்கட்டளைகள் ஆகியவற்றின் நிர்வாகத்திற்காக நியமிக்கப்பட்ட நிர்வாக அதிகாரிகளுக்குச் சம்பளம், படிகள் கொடுப்பது குறித்து ஆகும் செலவுத் தொகை அக்கோயில்களிடமிருந்து முழுவதுமாக வசூலிக்கப்படுகிறது. எல்லா நிறுவனங்களும் அச்செலவுத் தொகையை ஏற்றுக்கொள்ள இயலாது. ஆதலால் எந்த நிறுவனங்கள் நிர்வாக அதிகாரிகளின் சம்பளத்தையும், படிகளையும் கொடுக்கக் கூடிய நிலையில் உள்ளனவோ அவை மட்டும் அச்செலவினை ஏற்றுக் கொள்ளுமாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பிற நிறுவனங்களின் நிர்வாகத்தினை, தொகை எதுவும் வாங்காமல் மேற்பார்வையிடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் 51,000 சமய நிறுவனங்கள் தங்களுக்கெனச் சொந்தமாக நிலங்களை உடையன என்று இந்து சமய-அறநிலையத் துறை அண்மையில் நடத்திய ஆய்வு ஒன்றால் புலப்படுத்தியது.


முன்னாள் அறங்காவலர்கள் இச்சமய நிறுவனங்களை நிர்வகிப்பதில் முறைகேடான முறையில் நடந்து கொண்டனர் என்று குற்றம் சாட்டிப் பல்வேறு பிரிவைச் சேர்ந்த மக்களிடமிருந்து கணக்கற்ற மனுக்களும், புகார்களும் இம்மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமலுக்கு வந்ததும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதே முக்கியமான குற்றச் சாட்டாகும். கடவுள் மீது அல்லது சமயத்தின் மீது நம்பிக்கையில்லாமல் அல்லது இத் திருக்கோயில்களில் நடைபெறும் சமயச் சடங்குகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றினை மதிக்காத அப்போதைய ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்லது அக்கட்சியின் அனுதாபிகள் அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். தன் சொந்த உயர்வுக்கும், பயனுக்கும் இப்பதவிகளை அவர்கள் பயன்படுத்திக் கொண்டனர். திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள், கட்டிடங்கள், மனைகள் ஆகியவற்றினைத் தவறான முறையில் பயன்படுத்தியது குறித்தும் பல்வேறு குற்றச் சாட்டுகள் வந்துள்ளன. இந்த நிலங்களைக் குத்தகைக்கு விடுதலில் அல்லது

விற்பனை செய்வதில் முறைகேடுகள், தனிப்பட்ட சலுகைகள் காட்டுதல், மேற்கொள்ளப்பட்ட கட்டுமானப் பணிகள், திருப்பணிகள் ஆகியவற்றிற்கான ஒப்பந்தங்கள் வழங்குவதில் முறைகேடுகள், அறநிலையங்களுக்கு முற்றிலும் தொடர்பில்லாத காரியங்களுக்குத் திருக்கோயில் நிதிகளைச் செலவிடுதல், குறிப்பிட்ட நபர்கள் வெளியிடும் புத்தகங்களையும், பத்திரிகைகளையும் தனிப்பட்ட முறையில் பாரபட்சமாக வாங்குதல், கட்சிப் பத்திரிகைகளில் வகை தொகையற்ற விளம்பரங்கள் செய்தல் ஆகியவை முன்னாள் அறங்காவலர்கள் மீது கூறப்பட்ட ஒரு சில முக்கியமான குற்றச் சாட்டுகளாகும்.

எண்ணற்ற இப்புகார்களைக் கவனமாகப் பரிசீலித்த பின்னர் அரசு, தன்னிடம் வரப்பெற்ற பல்வேறு புகார்களை விசாரணை செய்வதற்கு முதுநிலை நிர்வாக அதிகாரி, கணக்குத் துறைத் தலைவர் அலுவலகத்திலிருந்து வரவழைக்கப்பட்ட முதுநிலைத் தணிக்கை அதிகாரி, பொதுப் பணித்துறை நிர்வாகப் பொறியாளர் ஆகியோரடங்கிய சிறப்பு விசாரணைக் குழு ஒன்றை நியமித்தது.


அதே சமயத்தில், அக்குழுவின் புலன் விசாரணை அறிக்கையும் முடிவுகளும் வரும்வரை, திருக்கோயில் நிலையிலும், துறை நிலையிலும் இப்பிரச்சினையைச் சமாளிக்க அரசு முடிவு செய்தது. துறை, முன்னர் நியமித்த பரம்பரை முறையில் வராத அறங்காவலர்கள் பதவிகள் அனைத்தும் குடியரசுத் தலைவர் சட்டத்தின் மூலம் (சட்டம் எண். 24/1976) 1-6-1976 முதல் நீக்கப்பட்டன. பரம்பரை அறங்காவலர்கள் எவரும் இல்லாத திருக்கோயில்களில், அறங்காவலர்களின் பணிகளைக் கவனிக்கக் கவனமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களை அரசு நியமித்தது. பெரிய அளவில் நிர்வாக அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டார்கள், ஆண்டுக்கு 10,000 ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வருமானம் உள்ளதாகக் கணிக்கப் பெறும் திருக்கோயில்களின் நிர்வாகம் அவர்களின் பொறுப்பில் விடப்பட்டது. பல சூழல்களில் அறங்காவலர்களின் பணிகளை ஆற்ற துறை அதிகாரிகளுடன் பிற துறை அதிகாரிகளும், அரசு அதிகாரிகளும் அவர்களுடைய இதர பணிகளுடன் இதனையும் கவனிக்கும் 'தகுதியுள்ள நபர்களாக' நியமிக்கப்பட்டனர்.

அறங்காவலர்களின் பதவியில் நியமிக்கப்பட்ட தகுதியுள்ள



நபர்கள் தங்கள் கடமைகளை மன நிறைவளிக்கும் வகையில் நிறைவேற்றும் பொருட்டு நிர்வாக நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டன. தகுதியுள்ள, மேற்சொன்ன நபர்களுடன், திருக்கோயில்களில் உள்ள எல்லாத் திரு ஆபரணங்கள், விலை மதிப்புள்ள பொருள்கள் ஆகியவற்றையும், உண்டியல்களையும் கூட்டாகப் பாதுகாக்கப் பிற துறை அதிகாரிகள் இரண்டாவது காப்பாளர்களாக ( Second Look Officers ) நியமிக்கப்பட்டனர். திருக்கோயிலுக்கு வரப் பெறும் வரவுகள் அனைத்தும் I ஆம் கணக்கில்தான் வரவு வைக்கப்பட வேண்டும் என்று திட்டவட்டமான கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. விதிகளின்படி இக்கணக்கு அறங்காவலர்கள் குழுத் தலைவர் பெயரில் இருக்கிறது. நிர்வாக அதிகாரியின் பெயரில் உள்ள II ஆம் எண் கணக்கிற்கு I ஆம் எண் கணக்கிலிருந்து தொகை எதுவும் மாற்ற வேண்டுமானால், துணை ஆணையர்களின் முன் அனுமதியின் பேரில்தான் செய்ய வேண்டும். ஒப்புதல் அளிக்கப்பட்ட ''திட்டம்'', வரவு செலவுத் திட்டம் ஆகியவற்றையொட்டியே நிர்வாக அதிகாரிகள், தொகையைச் செலவிட வேண்டும். அறங்காவலர்கள் என்ற புதிய பதவிகளை ஏற்படுத்துவதற்கான அவர்களது அதிகாரங்கள் தடை செய்யப்பட்டுள்ளன. குற்றச் சாட்டுகளின்படி கணிசமான அளவுக்கு முறைகேடு நடந்துள்ளதாகக் கருதப்படும் அர்ச்சனைச் சீட்டுகள் அச்சிடுதல் பணி, உதவி ஆணையர்கள்-துணை ஆணையர்கள் அளவில் செய்யப்படுகிறது. உரிய, முறையான கணக்குகள் வைத்த பின்னர் இவை அவர்களின் முத்திரையுடன் கொடுக்கப்படுகின்றன. மதிப்பீடுகள் ஒப்பளிக்கப்பட்டு ஆனால் பணி இன்னும் தொடங்கப் பெறாத சிவில் பணிகள் அனைத்தும், அப்பணி தொடங்க வேண்டுவது அவசியமா என்பது பற்றியும், கிடைக்கக் கூடிய நிதி வசதிகளைப் பற்றியும் இறுதியாக மீண்டும் ஆய்வு செய்வதற்காக நிறுத்தப்பட்டன. ஏற்கெனவே நிறைவேறிவரும் கட்டுமானப் பணிகள் குறித்து அதன் பணி அளவைப் பதிவு செய்யாமல் தொகை வழங்கப்படக் கூடாது என்று ஆணையிடப்பட்டது. துறைப் பொறியாளர்கள் 'அளவை-ஆய்வு' செய்யாமல் இறுதியான தொகை எதுவும் வழங்கப்படக்கூடாது என்றும் ஆணையிடப்பட்டது. திருவிழாக்களுக்கான ஏற்பாடுகள் நிகழ்ச்சிகள் குறித்துப் பொது மக்களுக்குத் தகவல் தெரிவிக்க மட்டுமே விளம்பரம் கொடுக்கப்படலாம் என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

துறை அளவில், ஒரே இடத்தில் அல்லது அவரவர் சொந்த



மாவட்டங்களில் அதிக நாட்கள் பணியாற்றிய அதிகாரிகள் அனைவரும் பிற இடங்களுக்கு அல்லது பிற மாவட்டங்களுக்கு மாற்றப்பட்டனர். பொது நல நிதியிலிருந்து தொகை எடுப்பது குறித்தும், அரசின் முன் அனுமதியின்றி நிறுவனங்களின் உபரி நிதியைப் பிற காரியங்களுக்குச் செலவிடுதல் குறித்தும் ஆணையாளருக்குள்ள அதிகாரங்கள் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. ஆணையாளருக்கு உதவ, பல்வேறு நிலையில் உள்ள தரமானவர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. வட்டாரத் துணை ஆணையாளர்களிடம் நீண்ட காலமாக முடிவு பெறுமல் உள்ள நீதிமன்ற நடவடிக்கைகளை விரைவாக முடிவு செய்யப் பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்று முடிவு செய்யும் அதிகாரங்களுடன் துணை ஆணையர்கள் என்ற தனிப் பதவி ஒன்று ஏற்படுத்தப்பட்டது. சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான குடியிருப்புக் கட்டிடங்கள், குடியிருப்பல்லாத கட்டிடங்களுக்கான நியாய வாடகையை முடிவு செய்வதன் மூலம் சமய நிறுவனங்களுக்கு உதவ நிர்வாகப் பொறியாளர் பதவி ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. அப்போது தான் அந்த நிறுவனங்கள் தங்கள் நிதிவாயில்களைப் பெருக்கிக் கொள்ள இயலும். நன்கொடைத் தொகைப் பாக்கிகளை வசூலித்தல், தணிக்கைக் கட்டணங்களை வசூலித்தல், நிர்வாக அதிகாரிகளின் சம்பளங்களை வசூலித்தல் ஆகியவற்றிற்கான இயக்கம் ஒன்று தொடங்கப்பட்டு 1-2-76-க்கும் 30-11-1976-க்கும் இடைப்பட்ட கால அளவில் ஒரு கோடி ரூபாய்க்கும் மேல் தொகை வசூலிக்கப்பட்டது. இந்த இயக்கம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. 15 பசலிக்கும் மேற்பட்டவை தொடர்பாக நான்கு லட்சத்திற்கு மேற்பட்ட எண்ணிக்கையில் குவிந்து விட்டதும், 18 கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட தொகை சம்பந்தப்பட்டதுமான தணிக்கை மறுப்புரைகள் கோட்ட வாரியாக வரிசைப்படுத்தப்பட்டு தணிக்கை அதிகாரிகளும், நிர்வாக அதிகாரிகளும் ஒருங்கு கூடும் ஆய்வுக் கூட்டங்கள் வாயிலாகத் தீவிரமாகச் சரி செய்யப்பட்டு வருகின்றன. தொகை கையாடல் அல்லது விதிகள் தவறுகப் பயன்படுத்தல் ஆகியவை எங்கெல்லாம் நடைபெறுவதாக அறியப்படுகிறதோ அங்கெல்லாம் நிறுவனங்கள் அடைந்த இழப்பை ஈடுகட்ட அதிகப்படிக் கட்டணம் வசூலிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சரிபார்க்கும் பிரிவில் கூடுதல் பணியாளர்களை நியமிப்பதற்கான செயற் குறிப்புகள் அரசின் பரிசீலனையில்




புராதன கோயில்களைப் பாதுகாக்கும் பணியில் கல்லூரி மாணவர்களும், மாணவிகளும் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர்.

உள்ளன. அப்போதுதான் சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான திரு ஆபரணங்கள், பிற விலை மதிப்புள்ள பொருள்கள் விரைவில் நாளது வரையில் சரி பார்க்கப்பட இயலும்.

திருக்கோயிலின் திருப்பணிக்காகப் பல்வேறு சமய நிறுவனங்களுக்கு உதவ, நடப்பாண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 15 இலட்சமும், அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 17 இலட்சமும் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. ஆயினும், திருப்பணிக் குழுக்கள் எங்கெல்லாம் அமைக்கப்படுகின்றனவோ அவை ஆணையாளரின் அனுமதியை முதலில் பெறவேண்டும் என்றும் திருக்கோயிலின் பொறுப்பாக உள்ள நிர்வாக அதிகாரியைச் செயலாளராக நியமிக்க வேண்டும் என்றும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில் திருப்பணிக்காக வசூலிக்கப்படும், பெறப்படும் தொகைகளுக்குக் கணக்கு வைத்து வரும் பொறுப்பு, செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. திருப்பணிக் குழு, திருப்பணி குறித்த வரைபடங்களுக்குத் தொல்பொருள் ஆய்வு இயக்குநர் அலுவலகத்திடமிருந்து முதலில் அனுமதி பெற வேண்டும். அப்போதுதான் திருக்கோயிலின் உண்மையான கட்டிடக் கலை நுட்ப அமைப்பினையும், கோயிலில் உள்ள அரிய கல்வெட்டுகள் ஏதேனுமிருப்பின் அவற்றைப் பாதுகாக்கும் விஷயத்தில் தொல்பொருள் ஆய்வு இயக்குநர் திருப்பணிக் குழுவிற்கு வழி காட்ட இயலும். திருக்கோயிலில் காணப்படும் புராதன மதிப்புடைய சிலைகளைப் பாதுகாப்பதற்கான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.

அழிந்து வரும் நிலையில் உள்ள பழங்காலக் கோயில்களின் விவரங்களையும் துறை சேகரித்து வருகிறது. அப்போதுதான் அவைகளைப் படிப்படியாக, பழைய நிலைக்குக் கொண்டு வர முடியும். இத்துறையில் முதல் நடவடிக்கையாக, தஞ்சாவூரில் கடல் அரிப்பால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள தரங்கம்பாடிக் கோயிலை மீண்டும் புதுப்பித்துக் கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அதே போல, சிதம்பரம் அருள்மிகு சபாநாயகர் திருக்கோயில், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருவரங்கம் அருள்மிகு ஸ்ரீரங்கநாத சுவாமி திருக்கோயில் போன்ற புகழ்பெற்ற திருக்கோயில்கள் உட்பட பல திருக்கோயில்களில் படிப்படியான நிலைகளில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்குரிய பெருந்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

சமய நிறுவனங்களில் உபரியாக உள்ள நிதிகளைக் கொண்டு, சமூக நல நடவடிக்கைகளைத் துறை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அரசு மேற்கொண்ட பல்வேறு சமூக நலத் திட்டங்களுக்குக் கடந்த ஆண்டில் உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன. கோயில் நிதிகளைக் கொண்டு, செவிடர், ஊமையர் பள்ளிகள் இரண்டு, கருணை இல்லங்கள் மூன்று, 204 நூலகங்கள், 22 சித்த மருத்துவ மனைகள், ஒரு ஆங்கில முறை மருத்துவ மனை, (மூவாயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்களுக்காக) பல அனாதை இல்லங்கள் ஆகியவை தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகின்றன. இம்மாநிலத்தில் உள்ள பல்வேறு சமய நிறுவனங்களின் ஆதரவின் கீழ் ஏழு கல்லூரிகளும் 18 உயர் நிலைப்பள்ளிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இக்கல்லூரிகள், பள்ளிகளின் நிர்வாகத்தைச் சீரமைக்கவும், அவைகளின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்குமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எண்ணற்ற சமய நிறுவனங்களை நிர்வகிக்கும் மிகப் பெரிய பணி, அதிகாரிகளிடம் மட்டும் நெடு நாட்களுக்கு விட்டுவிடப்படக்கூடாது என்பதை மாநில அரசு நன்கு உணர்ந்துள்ளது. தெய்வ வழிபாட்டிலும், கடவுள் நம்பிக்கையிலும் ஈடுபாடுடைய, அதிகாரிகளல்லாத பிற நேர்மையாளர்களிடையேயிருந்து அறங்காவலர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு எண்ணியுள்ளது.




# குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் மின்சாரத் துறையில் முன்னேற்றம்


— சி. என். ராகவன், ஐ.ஏ.எஸ்.,
செயலாளர்,
பொதுப்பணித் துறை, தமிழ்நாடு அரசு.

மின் திட்டங்களில் செய்யப்படும் முதலீடு ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தி வளத்தைப் பெருக்க உதவுகிறது. 1976-77-ல் மின் திட்டங்களுக்கான முதலீடு கணிசமான அளவுக்கு உயர்த்தப்பட்டது. மின் திட்டங்களுக்காக, 1974-75-ல் 29.50 கோடி ரூபாயும், 1975-76-ல் 40 கோடி ரூபாயும் முதலீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், நடப்பாண்டில் 70.18 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை, கடந்த இரண்டு ஆண்டுகளிலும் முதலீடு செய்யப்பட்ட தொகைகளின் மொத்த அளவைக் காட்டிலும் அதிகமாகும். 1977-78-ஆம் ஆண்டில் மின் திட்டங்களுக்குரிய முதலீட்டை மேலும் உயர்த்தி, மொத்தம் 94.1 கோடி ரூபாய் ஒதுக்குவதென அரசு கருதியுள்ளது. மொத்த ஒதுக்கீட்டில் மின் உற்பத்தித் திட்டங்களுக்கு மட்டும் ஆண்டுதோறும் சராசரியாக 17 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு வந்துள்ளது. ஆனால் இந்த ஆண்டில் செயற்படுத்தப்பட்டு வருகின்ற மின் உற்பத்தித் திட்டங்களில் அடங்கிய பணிகளுக்குப் போதிய ஆதரவு அளிக்க வேண்டி மின் உற்பத்தித் திட்டங்களுக்குரிய ஒதுக்கீடு 43.7 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

## வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

1976-ஆம் ஆண்டில், சென்னைக்கருகேயுள்ள எண்ணூர் அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டம் (110 மெ. வா), நீலகிரி மாவட்டத்தில் நடுவட்டம் நீர்த் திசை திருப்புத் திட்டம் (69 மில்லியன் யூனிட்டுகள்) கன்னியாகுமரி மாவட்டத்தில் குட்டியாறு






நீரேற்றுத் திட்டம்(40 மில்லியன் யூனிட்டுகள்) ஆகிய மூன்று திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றி முடிக்கப்பட்டன.

**நிறைவேற்றப்படவிருக்கும் திட்டங்கள்**

கட்டுமானப் பணிகள் நடைபெற்று வரும் திட்டங்களில், குந்தா 4-ஆம் நிலைத் திட்டம், சுருளியாறு நீர் மின் திட்டம், தூத்துக்குடி அனல் மின் திட்டம் ஆகியன 5-ஆம் திட்டக் காலத்தில் . (1978-79-க்கு முன்னதாக) உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குந்தா 4-ஆம் நிலைத் திட்டத்தின் கீழ், குந்தா 3-வது மின் நிலையத்தில் 60 மெ.வா. உற்பத்தித் திறன் கொண்ட மூன்றுவது பிரிவையும், குந்தா 4-வது மின் நிலையத்தில் 50 மெ. வா. உற்பத்தித் திறன் கொண்ட இரண்டாவது பிரிவையும் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு 11.64 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப் பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் இடம் பெற்றுள்ள இத் திட்டத்தை 1977-78-ல் நிறைவேற்றி முடிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில் சுருளியாறு, ஏர வங்கலாறு என்னும் ஆறுகள் பாய்கின்றன. இவை 39. ச. கி. மீ. பரப்புள்ள நீர்ப்பிடிப்பு பரப்புடையவை. சுருளியாற்றின் வெள்ளப் பெருக்கைப் பயன்படுத்தி சுருளியாறு மின் திட்டம் நிறுவப்படுகிறது. 19.41 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் அமைக்கக் கருதப்பட்டுள்ள இத்திட்டம், 1978-79-ல் நிறைவேற்றி முடிக்கப்படும்.

தூத்துக்குடி அனல் மின் திட்டத்தின் கீழ், தொடக்கத்தில் 2×210 மெ. வா. உற்பத்தித் திறனும், இறுதியில் 630 மெ. வா. உற்பத்தித் திறனும் கொண்ட அனல் மின் நிலையம் ஒன்றை தூத்துக் குடியில் ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. 140.86 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவினைக் கொண்ட இத்திட்டத்தினை 1978-79-ல் (முதல் பிரிவு) முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சுருளியாறு திட்டத்திற்கு 1975-76-ல் 2.43 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. 1976-77 நிதியாண்டில் 1976-ஆம் ஆண்டு டிசம்பர் வரையில் 3.74 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. அதுபோலவே, பாண்டியாறு—புன்னப் புழா திட்டத்திற்கு 1975-76-ல் 24 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. 1976-77-ல் ஒன்பது மாத காலத்தில் 73 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. தூத்துக்குடி அனல் மின் திட்டப்பணிக்கு மேலும் ஊக்கமளிக்கும் வகையில் சிறப்பு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. 1975-76-ல் இத்திட்டத்திற்கு 11 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததற்கு மாறாக, 1976-77-ல் 34.5 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்தொகை 1977-78-ல் 43 கோடி ரூபாயாக மேலும் உயர்த்தப்படவிருக்கிறது.

மின்சக்தியைக் கொண்டு செல்லுதல் மற்றும் விநியோகத்திற்கான ஒதுக்கீடு, ஆண்டு ஒன்றுக்கு 10 கோடி ரூபாய் என்ற அளவில் மட்டுமே இருந்து வந்தது. 1976-77-ல் அதிகப்படியான திட்டப் பணிகள் நிறைவேற்றி முடிக்கப்படவிருப்பதைக் கருத்திற்கொண்டு, அக்கால அளவிற்கான நிதி ஒதுக்கீடு 15 கோடியாக உயர்த்தப்பட்டது. முந்திய மூன்று ஆண்டுக்கால அளவில், மொத்தம் 14

துணை மின் நிலையங்களும், மொத்தம் 196 கி.மீ. நீளமுள்ள 14 கூடுதல் உயர் அழுத்த மின் கம்பி வழிகளும் ( Extra High tension lines ) நிறுவப்பட்டுள்ளன. இவ்வாண்டில் 26 துணை மின் நிலையங்களையும் மொத்தம் 340 கி.மீ. நீளமுள்ள 15 கூடுதல் உயர் அழுத்த மின் கம்பி வழிகளையும் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. மின் அமைப்பின் மின் வழங்கு நிலைமைகள் மன நிறைவளிக்கின்ற வகையில் செம்மையாகவும் நிலையாகவும் அமைவதற்குப் போதிய வசதிகள் செய்து கொடுப்பது கூடுதல் பணிகளை மேற்கொள்வதன் குறிக்கோளாகும். நுகர்வோரின் தேவைகளைச் சமாளிக்க 1977-78-ஆம் ஆண்டுக்கான பேராவல் திட்டம் ஒன்று தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, 28 துணை மின் நிலையங்களை ஏற்படுத்தவும், மொத்தம் 408 கி.மீ. நீளத்திற்கு 20 கூடுதல் உயர் அழுத்த மின் கம்பி வழிகளை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 28.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முடிவு செய்துள்ளது. மின் அமைப்பின் மின் வழங்கல் நிலையில் காணப்படுகின்ற ஏற்றத் தாழ்வைக் களைவதில் மின் வாரியத்திற்கும் அரசுக்கும் உள்ள பேரார்வத்தை இந்த ஒதுக்கீடு தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது எனலாம்.


**முன் எப்போதும் இல்லாத அளவுக்கு மின்சார உற்பத்தி பெருகியது !**

தற்போதைய மின் உற்பத்தி நிலையங்களின் ஆற்றல்களை முடிந்த அளவுக்கு மிகுதியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசரத் தேவையைக் கருத்திற்கொண்டு, 1970-ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாகப் பல முறை இயந்திரக் கோளாறுகளுக்கு உட்பட்ட எண்ணூர் அனல் மின் நிலையத்தின் பழுதுபட்ட பிரிவுகளைப் பழுதுபார்த்துப் புதுப்பிப்பதற்கான திட்டவட்டமான, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கனரக மின் சாதனங்களை வழங்கும் நிறுவனமான பாரத் ஹெவி எலக்டிரிக்கல்ஸ் லிமிடெட்டின் நெருங்கிய ஒத்துழைப்புடனும், ஆதரவுடனும், மத்திய மின்சார அதிகார மன்றத்தின் மூலம் பெற்ற வல்லுநர்களின் உதவியைக் கொண்டும், அடிக்கடி பழுது ஏற்பட்ட பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டுச் சரிசெய்யப்பட்டதால் எண்ணூர் அனல் மின் நிலையம் 1976-இல் முதன் முறையாக இயல்பான நிலைமைக்குத் திரும்பி, மின்சார உற்பத்தியைத் தொடங்கியது. இந்த மின் நிலையத்திலிருந்து பெருமளவு மின் உற்பத்தி எதிர்பார்க்கப்பட்ட போது, தக்க நேரத்தில் நிலைமை சீரடையத் தொடங்கிவிட்டது. எண்ணூர் அனல் மின் நிலையம் பழுது பார்க்கப்பட்டு உற்பத்தியைத் தொடங்கியதால் எதிர்பாராத வகையில் பருவ மழை பொய்த்து அதன் காரணமாக நீர் மின்சார உற்பத்தியில் ஏற்பட்ட பற்றுக்குறையை ஓரளவுக்கு ஈடு செய்ய முடிந்தது.

எண்ணூர் அனல் மின் நிலையம் 1975-ஆம் ஆண்டில் 812 மில்லியன் யூனிட்டு மின் சக்தியை உற்பத்தி செய்தது. ஆனால் 1976-ஆம் ஆண்டில் அதே அனல் மின் நிலையம் 1840 மில்லியன் யூனிட் மின்சக்தியை உற்பத்தி செய்தது. இதனை எண்ணூர் அனல் மின் நிலையத்தின் அரிய சாதனை என்றே சொல்ல வேண்டும். இந்நிலையம், நாள் ஒன்றுக்கு உயர்ந்த அளவாக 400 மெ. வா. உற்பத்தியும், 913 மில்லியன் யூனிட் மின்சார உற்பத்தியையும் செய்யும் சாதனையளவு திறனை எய்தியுள்ளது. இங்கு அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பிரிவும் இயக்கப் பெற்று உற்பத்தி செய்யும் நிலை பெரிதும் சீரடைந்துள்ளது. அவை இயந்திரக் கோளாறுகளால் வேலையில்லாதிருக்கும் நேரமும் படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகிறது. எண்ணூரிலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவு மின்சாரம் உறுதியாகக் கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

எண்ணூரைப் போலவே, பேசின் பிரிட்ஜ் மின் நிலையத்திலும், 'பேசின்பிரிட்ஜ் மின் உற்பத்திப் பெருக்கத் திட்டம்' என்று ஒரு திட்டம் செயற்படுத்தப்பட்டு நல்ல பலன் கிட்டியுள்ளது. இந்த மின் நிலையத்தின் நிறுவனத்திறன் 90 மெ. வாட்டாக இருந்த போதிலும், நீரைக் குளிர வைப்பதில் சில இக்கட்டுகள் ஏற்பட்டதாலும் கொதிகலன்கள் யாவுமே மிகவும் பழையனவாத இருந்தபடியாலும் கடந்த பல ஆண்டுகளாக இந்நிலையம் 50 முதல் 55 மெ. வாட். மின்சாரத்தையே






உற்பத்தி செய்தது. சில சீரமைப்புப் பணிகளை மேற்கொண்டதனுல், இந்த மின் நிலையத்தின் உற்பத்தி அளவு 1976-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களிலிருந்து 60 மெ. வாட்டாக உயர்ந்தது. தற்போது இதன் உற்பத்தி அளவு 70 மெ. வாட். என்ற உயர்ந்த அளவை எட்டியுள்ளது. இதன் சராசரி மின் உற்பத்தியளவு நாள் ஒன்றுக்கு 1.5 மில்லியன் யூனிட்டுகள். 1976-77-ல், ஒருநாளின் உயர்ந்த அளவு உற்பத்தித் திறன் 72.6 மெ. வாட். மற்றும் 1.675 மில்லியன் யூனிட்டுகள் என்று பதிவாகியுள்ளது.

சென்ற ஆண்டுடன் ஒப்பிட்டுப் 'பார்க்கையில் நெய்வேலி அனல் மின் நிலையத்தின் உற்பத்தித் திறனும் இவ்வாண்டு சீரடைந்துள்ளது. 1975-76-ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின் அமைப்பிற்கு 1987 மில்லியன் யூனிட்டுகள் கிடைத்தன. 1976-77-ஆம் ஆண்டின் முதல் 9 மாத காலத்திலேயே, நெய்வேலி அனல்மின் நிலையம் 194.1 மில்லியன் யூனிட்டுகளைத் தமிழ்நாடு மின் அமைப்பிற்கு வழங்க முடிந்தது.

**மின்வெட்டின் அளவு குறைந்தது!**

இதற்குமுன் இல்லாத அளவுக்கு தென் மேற்குப் பருவமழை பொயத்ததனுல், 1976-ஆம் ஆண்டு ஜுலை, ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில், தமிழ்நாட்டு நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் எப்போது மில்லாத அளவுக்குக் குறைந்தது. எடுத்த எடுப்பிலேயே 50 சதவீத மின்சார வெட்டினைச் செயற்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இருந்தாலும் கவனமாகவும் உறுதியாகவும் திட்டமிட்டு நிர்வகித்ததால், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அனல் மின் நிலையங்களின் மின் உற்பத்தி 1975-ஆம் ஆண்டில் இருந்ததைக் காட்டிலும் இரண்டு மடங்கிற்கும் கூடுதலாகக் கிடைக்கச் செய்ய முடிந்தது. வியக்கத்தக்க அளவில் மின் நிலையங்களின் மூலம் கிடைத்த மின் உற்பத்தியின் உதவியால், பெருமளவில் செயற்படுத்த வேண்டியிருந்த மின் வெட்டு தவிர்க்கப்பட்டது. அன்றியும், மின் விசையைப் பயன்படுத்தும் அளவில் 25 சதவீதம் முதல் 30 சதவீதம் என்னும் குறைந்த அளவுக்கே அரசு மின் வெட்டைச் செயற்படுத்தியது. மொத்த மின் தேவையில் 20 சதவீதம் முதல் 40 சதவீதம் மட்டுமே வெட்டுச் செய்தது. அதே சமயம், ஏராளமான பல இன்றியமையாத் தொழில்களுக்கும், சிறு தொழில்களுக்கும் மின் வெட்டைத் தளர்த்தியும் விதிவிலக்கு அளித்தும் சலுகைகள் வழங்கியது; இத்தகைய நடவடிக்கைகளால் அரசு மின்சார வெட்டை ஒருவாறு சமாளிக்க முடிந்தது.

**மின் இணைப்பு தருவதில் அரிய சாதனை**

நாடு முழுவதிலும் உள்ள கிராமங்களின் பொருளாதாரத்திற்கும், கிராம மக்களின் வாழ்க்கைக்கும் மின்சாரம் புதிய பொலிவை ஊட்டியுள்ளது. குறிப்பாகத் தமிழ்நாட்டில் இந்த நிலைமையைத் தெளிவாகக் காணலாம். நாடு விடுதலை பெற்ற பின்னர், திட்டமிட்டு மின் உற்பத்தியைப் பெருக்கியும் அவற்றை வழங்கியும் மேற்கொண்ட பணிகள் மூலமாக இந்த முப்பதாண்டுகளாக நாம் நல்ல முன்னேற்றம் எய்தி வந்துள்ளோம்; எய்திய முன்னேற்றத்தை நிலை நிறுத்தியும் உள்ளோம்; இவ்வளவு காலத்துக்குப் பிறகு இப்போது தமிழ்நாட்டில் கிராமங்களை மின் மயமாக்கும் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறியுள்ளது; புதிதாக மின் இணைப்புக் கொடுக்க வேண்டிய கிராமம் எதுவுமேயில்லை என்னும் நிலை வந்துள்ளது.

இருப்பினும் இனிமேல், மின் வசதியைப் பெருக்குவதை இருபது அம்சத் திட்டத்தில் ஒன்ருகக் கருதி அதன்படி, மின்விசை இணைப்பு

பரபரப்பூட்டும்
## நம்பகமான மூன்று புதிய
பாலிஸிகளைப் பற்றி அறிந்து கொள்ள
உங்கள் எல்.ஐ.சி. முகவரைக்
கண்டீர்களா?



### 'குறித்த காலத்தில் பணம் பெறும் பாலிஸி'

மற்ற திட்டங்களை விட விரைவாகவும், அதிகமாகவும், பாலிஸி முதிர்ச்சி அடைவதற்கு முன்பே இடை இடையே குறித்த காலங்களில் பணத்தைத் திரும்பப் பெறலாம்.

தவிர, முழு ஆயுள் பாதுகாப்பும் கிடைக்கிறது.

### 'பணம் மற்றும் பாதுகாப்பு (கேஷ் அண்ட கவர்) பாலிஸி'

5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தவணைத் தொகைகள் நிச்சயமாகக் கிடைப்பதுடன், முழுக் காப்புத் தொகையின் மீதும் போனஸ் கிடைக்கிறது. இத்துடன் உங்கள் ஆயுள் முழுவதும் பாதுகாப்பு கிடைக்கிறது.

### 'வளரும் பாதுகாப்புப் பாலிஸி'

புதுப் பிரேரணையோ மருத்துவப் பரிசோதனையோ இன்றி, உங்கள் பாலிஸியின் மதிப்பு குறிப்பிட்ட காலங்களில் கூடிக் கொண்டே போகிறது.

**மாறிவரும் காலங்களுக்கும்...**
**மாறிவரும் தேவைகளுக்கும்.**

**லைப் இன்ஷ்யூரன்ஸ்**
**கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா**

DaCunha/LIC/38 TAM


வழங்குவதன் மூலமாக மேலும் அதிக அளவு ஏக்கர்கள் பாசனவசதி பெறுவதை நமது குறிக்கோளாகக் கொண்டுள்ளோம். 1975-ஆம் ஆண்டில் மொத்தம் 29,280 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டிருந்ததற்கு மாறாக 1976-ஆம் ஆண்டில், மொத்தம் 36,093 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. 1976-ஆம் ஆண்டு ஏப்ரலில் மட்டும் 5,770 விசையேற்றங்களுக்கு மின் இணைப்புத் தரப்பட்டது என்பது ஓர் அரிய சாதனையாகும். இதே கால அளவில் குறைவழுத்த மின் சக்தியைப் பயன்படுத்துகின்ற 8,064 தொழில்களுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

### நீண்டகாலத் திட்டங்கள்

சென்னை நகரில் மின்சார சக்தியைப் பயன்படுத்துபவர்களுக்கு உதவும் வகையில் நன்கு கவனம் செலுத்தும் பொருட்டு தற்போதைய, மின் அமைப்பு அண்மையில் இரு பிரிவாக்கப்பட்டது. 1976 நவம்பரில் சென்னை மாநகரமும், செங்கற்பட்டு மாவட்டத்தின் சில பகுதிகள் உட்பட மாநகரின் சுற்றுப்புறங்களும், எதிர்பாராத புயல், வெள்ளம் இவற்றால் மிகவும் பாதிக்கப்பட்டன. விபத்துக்களைத் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகப் பல இடங்களில் மின்சாரத் தொடர்பு துண்டிக்கப்பட்டது. வெள்ளம் வடிந்த உடனே மின்சாரத் தொடர்பு மீண்டும் கொடுக்கப்பட்டது. மின் வழங்கு அமைப்பில் பல இடங்களில் ஏற்பட்ட சேதங்கள் அனைத்தும் கண்டுபிடிக்கப்பட்டு, உடனுக்குடன் பழுது பார்க்கப்பட்டு, மின் தொடர்பு கொடுக்கும் பணிகள் தொடங்கப்பட்டன. குறித்த கால வரையறைக்குள் செயல்படுத்தப்பட வேண்டிய, நிலையான சீர்திருத்தங்களுக்கான, நீண்டகாலத் திட்டங்களும் தீட்டப்பட்டன. இவற்றிற்காக மின்வாரியத்திற்கு நிதி உதவி வழங்க மாநில அரசும் உறுதி அளித்துள்ளது.

### குறை தீர்க்கும் குழு!

முக்கிய பிரச்சினைகளைப் பற்றிப் பொது மக்களுடன் நேரடித் தொடர்பு கொள்ளுவதற்காக மின்வாரியத்தில் 1976 டிசம்பரில் 'குறை



**1976-ஆம் ஆண்டில் 36,093 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.**

தீர்க்கும் குழு' ஒன்று நிறுவப்பட்டது. 'குறை தீர்க்கும் குழு, பயனீட்டாளர்களிடமிருந்து, நேரடியாக மனுக்களைப் பெற்றுக் கொள்ளும். அவற்றை வழக்கமான முறைப்படி உரிய பிரிவுகளுக்கு அனுப்பாமல் நடவடிக்கைக்காக தானே பரிசீலனை செய்து உடனுக்குடன் முடிவெடுக்கும்.

### திறமை உயர்ந்தது!

மின்வாரியம் அமைப்பிலும், நிர்வாகத்திலும், திறமை உயரும் வகையில் செம்மைப்படுத்தப்பட்டுள்ளது. வேலை நிறுத்தங்கள், முற்றுகைப் போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள் முதலியன இன்று பழங்கதைகளே! நிர்வாகிகளுக்கும், தொழிலாளர்களுக்குமிடையே ஒற்றுமை பரவி, எல்லா நிலைகளிலும் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டுள்ளது; இந்த அமைப்புடன் பொதுமக்கள் இதுகாறும் இல்லாத முறையில், அதிக அளவு உடனுக்குடன் தொடர்பு கொள்ள முடிகிறது; பொது மக்கள் பணியை உடனுக்குடன் கவனித்துப் பயன்தரத்தக்க விதத்தில் இது இயங்கி வருகிறது.

நிர்வாகத்தில் பணியாளர் அமைப்பின் தரத்தை வளர்க்கவும், திறமையை மேம்படுத்தவும் புகழ்பெற்ற நிறுவனங்களில் பயிற்சி பெற அலுவலர்கள் அனுப்பப்பட்டு வருகின்றனர். மின்வாரியத்தில், திட்டங்களைச் செயலாக்குவதற்கும், மேற்பார்வையிடுவதற்கும் நவீன மேற்பார்வை உத்திகள் புகுத்தப்பட்டு பரவலாகக் கையாளப்பட்டு வருகின்றன. மின்சாரக் கருவிகளின் உபயோகத்தைச் சிக்கனப்படுத்தவும், பல இடங்களில் தேக்கமுற்று நிற்கிற வேலைகளைச் செய்து முடிக்கவும் வெவ்வேறு மின்வழங்கு ஏற்பாடுகளுக்கிடையே நன்மை பயக்கும் போட்டியை ஊக்குவிக்கவும், மின் வழங்கு ஏற்பாடுகள் அளவில் அவை பணியாற்றுதல் பற்றிச் செவ்வனே கண்காணிக்கப்பட்டு வருகிறது.

### இழப்புகள் குறைந்தன!

மின் உற்பத்தி, மின்சாரத்தைக் கம்பிகளில் கொண்டு செல்லுதல், மின் வழங்குதல், இயக்குதலும், பேணுதலும், நிர்வாகம் ஆகியவற்றிற்குப் பிடிக்கும் செலவுகளைக் குறைக்கப் பற்பல சிக்கன நடவடிக்கைகள் எடுக்கப்பட்



டுள்ளன. தொழில் நுட்ப வகையிலும் வாணிக வகையிலும் ஏற்படும் மின்சக்தி இழப்புகளைத் தடுக்க, பல முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இவ்வகையில், கம்பிகளில் அனுப்பப்படும்போது ஏற்படும் மின்சக்தி இழப்புகளில் 40 மில்லியன் யூனிட்டுகள் குறைக்கப்பட்டு 80 இலட்சம் ரூபாய் மிச்சப்படுத்தப்பட்டது. மின்சக்தித் திருட்டையும், தவறான உபயோகத்தையும் கண்டு பிடிப்பதற்காகவே, திடீர்ச் சோதனைக் குழுக்கள், ஒவ்வொரு மின் வழங்கு ஏற்பாட்டிற்கும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மின் இணைப்புகளைத் திடீர்ச் சோதனையிடும் அமைப்பானது பலப்படுத்தப்பட்டுள்ளது. திடீர்ச் சோதனைகள் மிகப் பரந்த அளவில், செவ்வனே திட்டமிடப்பட்டு, வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளன.

**சோதனைகள் பெருகின!**

1975-ல், 1.84 இலட்சம், மின் இணைப்புகள் வழக்கப்படி ஆய்வு செய்யப்பட்டன. 1976-ல் இவற்றின் எண்ணிக்கை 5.57 இலட்சமாக உயர்ந்தது. 1975-ல் திடீர்ச் சோதனை செய்யப்பட்ட மின் இணைப்புகளின் மொத்த எண்ணிக்கை 1.05 இலட்சமாகும். இவற்றில் 313 மின் இணைப்புகளில் மின்சக்தி களவாடப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. `1976-ல் 4.67 இலட்சம் மின் இணைப்புகள் திடீர்ச் சோதனையிடப்பட்டன. இவற்றில் 606 இணைப்புகளில் மின் சக்தி களவாடப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டது. இந்த திடீர்ச் சோதனைகள் மூலம் 1976-ல் பதினொரு மாதங்களில் கிடைத்த வருமானம் ரூ. 20.42 இலட்சமாக இருக்கும் என மதிப்பிடப்படுகிறது. 1975-ல் இவ்வருமானம் ரூ. 6.23 இலட்சமாகத்தான் இருந்தது. இந்த திடீர்ச் சோதனைகள், தவறு செய்யும் பயனீட்டாளர்கள் உள்ளத்தில் அச்சமூட்டித் தவறாக நடக்காவண்ணம் தடுப்பதற்கு வழி செய்தன.

பலதரப்பட்ட பயனீட்டாளர்களின் தேவைகளைப் போதுமான அளவு நிறைவு செய்வதற்காக மின்சக்தி உற்பத்தி அளவைப் பெருக்குவதற்கான திட்டங்கள் பலவற்றை மேற்கொள்ளும் வகையில் மின்வாரியம், சிறப்பாக முடுக்கிவிடப்பட்டுள்ளது. 1978-79, 1979-80-ஆம் ஆண்டுகளில் கல்பாக்கம் அணு மின் சக்தித் திட்டம் மின் உற்பத்தியைத் தொடங்கியதும் மின்சக்தி நிலைமை சீராகும். அதனால் வருங்காலத்தில், இம்மாநிலத்தில் மின்சக்தி வழங்கு நிலை சீராக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**நல்லதொரு சூழ்நிலை உருவாகும்!**

இம்மாநிலத்தில் மின்சக்தித் தேவை, மின்சக்தி இருப்பைவிட எப்பொழுதுமே அதிகமாக உள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் அதற்குப் பின்னரும், இம்மாநிலத்தின் மின்சக்தித் தேவையைப் பூர்த்தி செய்ய உயர் அனல்-மின்சக்தி நிலையம் ஒன்று (1000 மெ. வா.) அமைப்பது தீவிரப் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தைத் தொடர்ந்து செயலாற்ற சாதகமான முடிவு எடுக்கப்படின், அது தமிழ்நாட்டுப் பொது மக்களின் நம்பிக்கையையும், பேராவல்களையும் நிறைவு செய்து எதிர்கால வளர்ச்சியில் நம்பிக்கையுள்ள நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கும்.

**மின் இணைப்புப் பெறாத கிராமம் தமிழ்நாட்டில் இல்லை என்னும் நிலை ஏற்பட்டுள்ளது!**





# தொழிலாளர் நலப்பணிகள்!

தொழில் துறைச் சமுதாயத்தில் தொழிலாளர் நல்லுறவு முக்கிய இடத்தைப் பெறுகிறது. தொழிலாளர்களுக்குத் தேவைப்படுகின்ற வசதிகளைச் செய்து தருவது தொழிலதிபர்களின் தலையாய கடமையாகும் என்றபோதிலும், தமிழ்நாடு அரசு தானே முன்வந்து தொழிலாளர் நல நடவடிக்கைகளை முனைந்து மேற்கொண்டுள்ளது. மலைத்தோட்டத் தொழிலாளர் சட்டம், மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம், தொழிற்சாலைகள் சட்டம் போன்ற பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள் தொழிலாளர்க்கு நன்மைகள் செய்யும் கருத்துடன் இயற்றப்பட்டவையாகும்.

ஏ. பத்மநாபன், ஐ.ஏ.எஸ்.,
செயலாளர்,
தொழிலாளர் மற்றும்
வேலைவாய்ப்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

எனினும், தொழிலாளர் நலச் சட்டங்களில் வகுக்கப்பட்டுள்ள விதிகள் தொழிலாளர் சமூகத்தின் தேவைகள் எல்லாவற்றையும் உள்ளடக்கிச் செய்யப்பட்டனவல்ல. மேலும் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள தொழிலாளர் நல நடவடிக்கைகள், தொழிலாளர்களுக்குத் தேவைப்படும் எல்லா வசதிகளையும் உரிமைகளையும் அளிப்பதாக இல்லை. எனவேதான் தொழிலாளர் நல நிதிச் சட்டம் இயற்றப்பட்டது. இதன் மூலம் ''தொழிலாளர் நல நிதி'' என்னும் பெயரில் நிதியொன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்நிதிக்குத் தொழிலதிபரும், தொழிலாளரும் ஆண்டுதோறும் முறையே ரூ. 2, ரூ. 1 என்ற





தொழிலாளர் நல நிலையங்கள் மூலம் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கப்படுகிறது.

விகிதத்தில் கட்டணம் செலுத்தி வரவேண்டும். ஏறத்தாழ 20,000 தொழில் நிறுவனங்களும் அவற்றில் பணிபுரிகின்ற 6,83,464 தொழிலாளர்களும் இந்தச் சட்டத்தின் கீழ் வருவர்.

ஆளுநர் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் தலைவராக உள்ள தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தால், தொழிலாளர் நல நிதி, நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இவ்வாரியத்தில் தலைவர் நீங்கலாக, 19 உறுப்பினர்கள் உள்ளனர். இவ்வாரியத்தில் தொழிலதிபர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் உரிய முறையில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இப்படி இவ்விரு தரப்பினரையும் சேர்த்துள்ளதன் நோக்கம் உழைக்கும் வர்க்கத்தின் வாழ்க்கை நிலைமை மேம்பட இவர்கள் பயனுள்ள திட்டங்களை அளிப்பர் என்பதே ஆகும். தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் காலாண்டுக்கு ஒரு முறை கூடி, என்னென்ன பயனுள்ள தொழிலாளர் நலத் திட்டங்களைச் செயற்படுத்தலாம் என்பது பற்றி அப்போது முடிவு செய்கிறது.


## நலம் தரும் நிலையங்கள்


அம்பத்தூர் (சென்னை), செம்பியம், கோயம்புத்தூர், மதுரை, திண்டுக்கல், கோவில்பட்டி, சோமனூர், குடியாத்தம், வாணியம்பாடி, சிவகாசி ஆகிய பத்து இடங்களில் தொழிலாளர் நல நிலையங்கள் உள்ளன. இந்த ஊர்கள் யாவும் தொழிற்சாலைகள் நிறைந்துள்ள இடங்களாகும்.

இந்த நிலையங்களின் பெண் தொழிலாளர்களுக்கும், தொழிலாளர்களின் மனைவியருக்கும், தொழிலாளர்களைச் சார்ந்துள்ள பெண் மக்களுக்கும் தையல் கலை வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இங்கே பயிற்சி பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் ரூ. 30 பயிற்சி உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது. தையற் கலையில் பயிற்சியைப் பெறுகின்ற இவர்கள் தங்கள் பயிற்சியை வெற்றிகரமாக முடித்ததும், தாங்களாகவே வேலை செய்து சம்பாதிக்க முடியும். ஆதலால் இந்தப் பயிற்சி, தொழிலாளர்களின் குடும்பவூதியம் கணிசமான அளவிற்குக் கூடுதலாவதற்குத் துணை புரியும். இவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக இந்த நிலையங்கள் ஒவ்வொன்றிலும் பயிற்சி பெற்ற தையற்கலை ஆசிரியை ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஓராண்டுக்காலப் பயிற்சியை முடித்தவர்கள், தையற்கலையில் டிப்ளமா பெறுவதற்குரிய அரசுத் தொழில் நுட்பத் தேர்வு எழுத வேண்டும்.

## தொழிலாளர் குழந்தைகளுக்குக் கல்வி வசதி

இந்த நல நிலையங்கள் ஒவ்வொன்றிலும் கிண்டர்கார்டன் முறைக் குழந்தைகள் பள்ளி ஒன்று நடைபெறுகிறது. தொழிலாளர்களின் குழந்தைகள் இவற்றில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இப்பள்ளியில் பாலர் கல்வி கற்பிக்கப்படுகின்றது. இங்குச் சேர்த்துக் கொள்ளப்பட்





*தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திற்காகக் கட்டப்படவிருக்கும் பலமாடிக் கட்டடத்தின் மாதிரி.*



ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் தொழிலாளர் நலம் காக்கின்றன.

டுள்ள குழந்தைகளுக்கு நாள்தோறும் ஒருவேளை உணவும், பாலும் வழங்கப்படுகின்றன. உரிய கல்வித் தகுதி பெற்றுள்ள பால சேவிகைகள் இப்பள்ளிகளில் வகுப்புகளை நடத்துவதற்கு நியமிக்கப்பட்டுள்ளனர். குழந்தைகள் விளையாடுவதற்காகப் பொம்மைகள் கொடுக்கப்படுகின்றன.

'கேர்' நிறுவனத்துடன் தொழிலாளர் நல வாரியம் செய்து கொண்டுள்ள ஒரு ஏற்பாட்டின்படி, அந்நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இந்தப் பாலர் பள்ளிகளில் பயிலும் குழந்தைகட்குக் குழந்தையுணவும், சத்துணவும் விரைவில் வழங்கப்படும். ''ஒருங்கிணைந்த உடல் நல முனைப்புத் திட்டம்'' என்னும் திட்டத்தின் கீழ், இக்குழந்தைகளும் பயன்பெற, வாரியம், விரைவில் ஏற்பாடு செய்யும்.

தொழிலாளர்களுக்காகப் படிப்பகங்கள் தொடங்கப்பட வேண்டும் என்றும் வாரியம் முடிவு செய்துள்ளது. சென்னையில் இரண்டும், மதுரையில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றுமாக மொத்தம் நான்கு படிப்பகங்களை வாரியம் நடத்தி வருகின்றது. தொழிலாளர்கள் படிப்பதற்காக, புதிய நாளிதழ்களும், வார, மாத இதழ்களும் இந்தப் படிப்பகங்களுக்கு வழங்கப்படுகின்றன. தொழிலாளர்கள் தமது பொது அறிவைப் பெருக்கிக் கொள்ள இது உதவும்.

சென்னையில் உள்ள திரு.வி.க. நகரில் மகளிர் மன்றம் ஒன்று, முழுவதும் வாரியம் அளிக்கும் நிதியுதவியைக் கொண்டு நடைபெற்று வருகின்றது. இது, தொழிலாளர்களின் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களை உறுப்பினராகக் கொண்டுள்ள பதிவு பெற்ற சங்கம் ஆகும். இந்த மகளிர் மன்றத்தார் குழந்தைகள் நல நிலையம் ஒன்றை நடத்தி வருகின்றனர். இங்கு 5 வயதிற்கு உட்பட்ட 50 குழந்தைகளுக்குப் பால் வழங்கப்படுகிறது. அவர்களுக்கென 'கிண்டர்கார்டன்' வகுப்புகளும் நடைபெறுகின்றன.

## புதிய அலுவலகக் கட்டடம்


தமிழ்நாடு அரசு சென்னை அண்ணாசாலைப் பகுதியில் 6.33 மனைப் பரப்புள்ள நிலத்தைத் தொழிலாளர் நல வாரியத்துக்கென நன்கொடையாக வழங்கியது. இந்த இடத்தில் 35 இலட்டம் ரூபாய் செலவில் வாரியத்துக்கெனப் பல மாடிகள்கொண்ட அலுவலகக் கட்டடம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. கட்டடம் கட்டி முடித்த பின்னர், வாரிய அலுவலகம் இங்கு அமையும். அலுவலகத்துக்குத் தேவையானது போக எஞ்சிய இடம் வாடகைக்கு விடப்படும். அதன் மூலம் வாரியத்துக்கு ஆண்டுதோறும் 4 இலட்சம் ரூபாய் வாடகை கிடைக்கக்கூடும். இந்த வருவாய், தொழிலாளர் நல நடவடிக்கைகளுக்குச் செலவிடப்படும். தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் அண்மையில் இக்கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினர்.

தண்டையார்ப் பேட்டையில் தொழிலாளர்களுக்கென விளையாட்டரங்கம் ஒன்றைக் கட்டும் திட்டம் உள்ளது. இங்கு கேரம், டேபிள் டென்னிஸ் போன்ற கட்டடத்துக்குள் விளையாடும் விளையாட்டுக்களுக்கும், வெளியில் திடலில் விளையாடுவதற்குரிய விளையாட்டுக்களுக்கும் வசதிகள் செய்யப்படும்.



**மருத்துவ வசதி**

சமுதாயத்தில், மற்ற பிரிவினரைக் காட்டிலும் தொழிலாளர்கள்தான் காசநோய்க்கு அதிக அளவில் ஆட்படுகின்றனர். தொழிலாளர்கள் பணிபுரிகின்ற இடங்களில் உள்ள சுகாதாரக் கேடான நிலைமையே இதற்குக் காரணமாக இருக்கலாம். நமது தொழிலாளர்களின் சமூக, பொருளாதார நிலைமை மிகவும் மோசமாகவுள்ளது. காச நோய்க்கு ஆளாகி விட்டோம் என்பதை அறிந்ததும் உடனடியாக மருத்துவக் கவனிப்பைப் பெறுவதற்குரிய பொருளாதார வசதிகள் அவர்களிடம் இல்லை. மேலும், நம் மாநிலத்தில் உள்ள காசநோய் மருத்துவ மனைகளில் சேர அனுமதி பெறுவதும் அவர்களுக்குக் கடினமாக உள்ளது. ஆகவே, தாம்பரத்தில் உள்ள காச நோய் மருத்துவ மனையில்



தொழிலாளியின் குழந்தை பரிசோதிக்கப்படுகிறது!

தொழிலாளர்களுக்கென்றே தனியாக, 26 படுக்கைகள் கொண்ட காச நோய் வார்டு ஒன்றை 3.6 இலட்சம் ரூபாய் செலவில் வாரியம் கட்டுகிறது. தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், தொழிலாளருக்கான காச நோய் வார்டு கட்டடத்திற்கு அண்மையில் அடிக்கல் நாட்டினார்.

**ஓய்வு இல்லங்கள்**

தொழிலாளர்கள் விடுமுறை நாட்களிலும், விடுமுறைக் காலங்களிலும், பல இடங்களைச் சென்று பார்க்கவும், மனமகிழ்வுடன் பொழுது போக்கவும் விரும்புவது இயற்கையே. இவ்வாறு அவர்கள் சுற்றுலா முக்கியத்துவமுடைய இடங்களுக்கும், தங்கியிருந்து உடல் நலம் பெறுவதற்குரிய இடங்களுக்கும் செல்லும்பொழுது அவ்விடங்களில் அவர்களுக்கென விடுமுறைக் கால ஓய்வு இல்லங்கள் அமைக்கப்பட்டிருப்பின், அவர்களுக்குப் பெரிதும் நன்மையாக இருக்கும். ஆகவே, இவ்வாரியம், மாமல்லபுரம், குற்றுலம், கொடைக்கானல், உதகமண்டலம், ஏர்க்காடு போன்ற சுற்றுலாச் சிறப்புடைய, உடல் நலம் பேணுதலுக்குரிய இடங்களில் தொழிலாளர்களுக்கென விடுமுறைக்கால ஓய்வு இல்லங்களைக் கட்டுவதெனை முடிவு செய்துள்ளது. மாமல்லபுரத்தில் விடுமுறைக்கால ஓய்வு இல்லம் விரைவில் கட்டி முடிக்கப்படும். மற்ற இடங்களில் இந்த ஆண்டில் அவை கட்டி முடிக்கப்படும். ஆனல், உதகமண்டலத்திலும், ஏர்க்காட்டிலும், கட்டடங்கள் கட்டும் பணியை மேற்கொள்வதற்குச் சிறிது காலம் பிடிக்கலாம். எனவே, அங்கு விடுமுறைக் கால ஓய்வு இல்லங்களைத் திறக்க, தற்காலிக ஏற்பாடாகத் தனியார் கட்டடங்கள் வாடகைக்குப் பெறப்பட விருக்கின்றன. தொழிலாளர்கள், தத்தம் குடும்பத்துடனே அல்லது சிலர் சேர்ந்து ஒரு குழுவாகவோ சென்று, இந்த இல்லங்களில் சிறிது காலம் தங்கி ஓய்வு எடுத்துக் கொள்ளலாம்.

நமது நாட்டிலும் மற்ற நாடுகளிலும் தொழிலாளர்கள் வேலை செய்யும் சூழ்நிலைகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை விளக்கும் வகையில், அந்நிலைமைகளைப் படம் பிடித்துக் காட்டுகின்ற திரைப்படங்களை நமது தொழிலாளர்கள் ஆர்வத்துடன் பார்ப்பார்கள் என்று வாரியம் எண்ணியது. தொழிலாளர்களின் பயனுக்கென்று திரைப்படம் காட்டும் கருவியொன்றை வாங்க வாரியம் முடிவு செய்துள்ளது.

தொழிலாளர் நலன்களையும், அவர்தம் குடும்ப நலன்களையும் மேம்படுத்துவதற்குப் பேரார்வத்துடன் வகுக்கப்பட்ட விரிவான பல சீரிய திட்டங்கள் வாரியத்திடம் உள்ளன. தொழிலாளர் நல நிதிக்கென ஆண்டுக் கட்டணமாகத் தொழிலாளர்கள் அளிக்கின்ற ஒவ்வொரு காசும் அவர்களது கடுமையான உழைப்பால் ஈட்டியது அல்லவா? அப்படி அவர்கள உழைத்துத் தரும் ஊதியத்திற்கு ஏற்ற வகையில் உயர்ந்த பலனை அவர்கள் பெற வேண்டும் என்னும் குறிக்கோளுடன் தொழிலாளர் நல வாரியம் மேலும் மேலும் பல நல நடவடிக்கைகளை எடுப்பதற்கென ஊக்கத்துடன், அயராமல் அரும்பணியாற்றி வருகின்றது.



# ஈடு இணையற்ற நல்வாழ்வை நோக்கிப் பீடுநடை போடுகிறது தமிழ்நாடு!

—திருமதி ரதி வினய் ஜா, ஐ.ஏ.எஸ்.,
இணைச் செயலாளர், பொதுத்துறை,
தமிழ்நாடு அரசு.

**த**மிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்பட்டு ஓராண்டு நிறைவுற்றுள்ளது. கடந்த ஓர் ஆண்டில் எய்திய சாதனைகளை எண்ணிப் பார்க்கிறோம். அவசர நிலைமைச் சட்டத்தின் நோக்கங்களைச் செயற்படுத்தியதன் விளைவாக, நமது மக்களிடையே கட்டுப்பாட்டுணர்ச்சியும், ஆக்கப் பூர்வமான செயல் திறனும் வளர்ந்தன; இத்தகைய சிறந்த சூழ்நிலையால் நம் மாநிலம் பொருளாதார மேம்பாட்டினைப் பெற்றது என்று உறுதியாகக் கூறலாம். நமது நாட்டில் வளர்ந்து வரும் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட சவால்களைச் சமாளிப்பதற்காக நாட்டின் சமூக-பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தப்பட வேண்டியிருந்த ஒரு நேரத்தில் தான் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டம் அறிவிக்கப்பட்டது. இது, தமிழ்நாட்டில், குடியரசுத் தலைவர் ஆட்சி செயல்படுத்தப்பட்ட பின்னர்தான் செவ்விய முறையில் நடைமுறைப் படுத்தப்பட்டது. அதன் பின்,

இந்த ஓராண்டில் ... களிலும், நாம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளோம்.

### விலைவாசி குறைந்தது!

தமிழகத்தில் அவசர நிலைமை நோக்கத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தபோது, எதிர் நோக்க வேண்டியிருந்த பெரும் பிரச்சினையாக, இன்றியமையாப் பண்டங்களின் விலை ஏற்றம் இருந்தது. அவற்றைக் கட்டுப்படுத்தப் போர்க்காலப் பணிகளைப்போன்று நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. இதற்காக உணவு உற்பத்தியைப் பெருக்குதல், செம்மையான பொதுப் பங்கீட்டு ஏற்பாட்டினை அமைத்தல், பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த பதுக்கல்காரர்கள், கள்ள வணிகர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்தல் ஆகியவழிகளில் முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற்றன. அதன் விளைவாக அரிசி விலையும் மற்ற இன்றியமையாத பொருள்களின் விலைகளும் உயராமல் கட்டுப்படுத்தப்பட்டு நியாயமான விலையில் விற்கப்படுகின்றன.

தமிழகத்தில் குடியரசுத் தலைவரின் ஆட்சி வருவதற்கு முன்னதாக முக்கிய உணவுப் பொருளான புழுங்கல் அரிசி(நடுத்தரம்) கிலோ ரூ. 2.50 வரை விற்கப்பட்டு வந்நது. இன்று அதே புழுங்கலரிசி கிலோ ரூ. 1.60 லிருந்து ரூ. 2.00 ஆக விற்கப்படுகிறது.

சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கும், மாணவர்களுக்கும் இன்றியமையாத பொருட்களை வழங்குவதில் சிறப்பான நாட்டம் செலுத்தப்பட்டது. பள்ளிகளிலும், கல்லூரிகளிலுமுள்ள மாணவர் விடுதிகளுக்குக் கட்டுப்பாட்டு விலைகளில் அரிசி, கோதுமைப் பொருட்கள், சர்க்கரை ஆகியவை தொடர்ந்து வழங்கப் பெறறன. இதனால் இந்த ஆண்டில் மாணவர் விடுதிகளில் உணவு கட்டணங்கள், கடந்த ஆண்டை விட சுமார் 15 முதல் 20 சதவீதம்வரை குறைந்திருக்கின்றன.

### உற்பத்தியைப் பெருக்க அயராத முயற்சிகள்!

மாநிலத்திற்கு மிக உயர்ந்த வருவாய் தேடித்தரும் ஒரே துறையாக வேளாண்மை விளங்குவதால், எந்த ஒரு உற்பத்தித் திட்டத்திலும், அதற்குச் சிறப்பான முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு, உரங்களை முழு அள...

... வேளாண் பொருளாதார நடைமுறைகளை மேம்படுத்துதல், தண்ணீரைப் பயன்படுத்தும் நவீன தொழில் நுட்ப உத்திகளை பின்பற்றுதல், மிகு பயன்தரும் வித்து வகைகளைத் தொடர்ந்து பயன்படுத்துதல், புன்செய்ப் பகுதிகளில் பல பயிர்களைப் பயிரிடும் திட்டத்தைப் புகுத்துதல் ஆகிய வழிகளில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க அயராத முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாண்டு வடகிழக்குப் பருவ மழை முன்னதாகவே தொடங்கி மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளில் பொதுவாக நன்கு பெய்துள்ளது. இதனால் நவரை போன்ற பின் பருவப் பயிர் விளைச்சலுக்குரிய வாய்ப்புகள் ஓங்கியுள்ளன.

**ஒரு ஏக்கரில் காணுகின்ற நெல் விளைச்சலின்** சராசரி **அளவைப் பொறுத்த மட்டில் தமிழ் நாடு முதலிடம் பெற்றுள்ளது.** இச்சிறப்பினைத் தக்க வைத்துக் கொள்ள உரங்களை உரியவாறு பயன்படுத்துதல், அவசியமான ஒருமித்த செய்நேர்த்தி முறைகளைப் பின்பற்றி மிகுபயன் தரும் வித்துக்களை அதிகப் பரப்பளவில் தொடர்ந்து பயிரிடுதல், ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


### பாசன வசதிகள் பெருகின!

நடுத்தர, சிறு பாசனத் திட்டங்கள் பல நடைபெற்று வருகின்றன. அவற்றை நிறைவேற்றி ... வம் கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களுக்கு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு கணிசமான அளவுக்குக் கூடுதலாக்கப் பட்டுள்ளது. பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்கள் மூலமாக புதிதாக 18,000 எக்டேர்களுக்கு பாசன வசதி அளிக்கப்பட விருக்கின்றது. திட்டமிட்டபடி இதுவரை பணிகள் நடைபெற்று வந்துள்ளன. குறிக்கோள் அளவையும் மிஞ்சி, 21,383.6 எக்டேர்களுக்குப் பாசன வசதி அளிக்கப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது. 1976-ஆம் ஆண்டு டிசம்பர் இறுதிவரை, 7.677 இலட்சம் விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டுள்ளது. இது, மற்ற மாநிலத்தில் உள்ளதை விட மிகவுயர்ந்த எண்ணிக்கையாகும்.

1976-77ல் 35,000 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட வேண்டும் என்று குறிக்கோள் அளவு நிர்ணயிக்கப் பட்டதற்கு மாறாக, கடந்த ஓராண்டில் 36,093 விசையேற்றங்களுக்கு மின்இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

### மின்சார உற்பத்தி பெருகியது!

தமிழ்நாடு அரசு 1976-ஆம் ஆண்டில் கவனமாகவும், உறுதியாகவும், கட்டுப்பாடாகவும் செயற்பட்டதன் விளைவாக, 1975-ஆம் ஆண்டில் அனல் மின் நிலையங்களின் மூலம் உற்பத்தி செய்த மின்சார அளவைக் காட்டிலும், இரண்டு மடங்கு அளவுக்கு மேல் மின் விசையை உற்...



பத்தி செய்து, அனல் மின் நிலையங்களை இயக்குவதில் வெற்றி கண்டுள்ளது. அதிக அளவில் மின் வெட்டினைத் தவிர்க்க இது உதவியது; பெயரளவுக்கு, 20 முதல் 30 சதவீத மின் வெட்டுடன் மின் சக்திப் பற்றுக் குறையைத் தீர்க்க மாநில அரசால் முடிந்தது; அதே நேரத்தில், இன்றியமையாத பெருந் தொழில்கள், சிறு தொழில்கள் பலவற்றிற்கு மின் வெட்டிலிருந்து சில விதிகளைத் தளர்த்தியும், சில விதி விலக்குகளை அளித்தும் சலுகைகள் வழங்கப்பட்டிருந்தன.

## எட்டே மாதங்களில் 6,700 துளைக் கிணறுகள்!

1975-76-ஆம் ஆண்டின் பின் பகுதியிலும், 1976-77-ஆம் ஆண்டிலும் தமிழ்நாட்டில் ஏறத்தாழ எல்லா மாவட்டங்களிலும் வரலாறு காணாத கடும் வறட்சி நிலவியது. எனவே, அதிக அளவிலான கிராமங்களிலும், நகர்ப் பகுதிகளிலும் குடிநீர் வழங்குவதற்கான மிகப் பெருந் திட்டம் ஒன்றை அரசு மேற்கொண்டது. வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் அனைத்திலும் ஆழ் கிணறுகளைத் தோண்டுவதற்கான பெருந்திட்டம் ஒன்று 1976 ஏப்ரலில் தொடங்கப்பட்டது. தோராயமாக 7 கோடி ரூபாய் செலவில் 6,700 துளைக் கிணறுகளை இறக்குவது இத்திட்டத்தின் குறிக்கோள். இத்திட்டம் முழுவதும் 1976 நவம்பரில் நிறைவேற்றி முடிக்கப்பட்டது. இதன் மூலம், பெரும்பாலும் கடந்த 4 ஆண்டுகள் முழுவதிலும் எத்தனை குடிநீர் வழங்கு துளைக் கிணறுகள் இறக்கப்பட்டனவோ அத்தனை துளைக் கிணறுகள் இந்த ஓராண்டில் தோண்டப்பட்டன. குடிநீர்ப் பற்றுக்குறையை நீக்க வழி காணப்படாமல் இன்னமும் எஞ்சியுள்ள சில பகுதிகளில் இந்தக் குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளிக்க மேலும் 1,000 ஆழ் துளைக் கிணறுகள் இறக்கப்பட்டு வருகின்றன. அவற்றுக்கு, கூடுதலாக 1 கோடி ரூபாய் செலவிடப்படும். மார்ச் இறுதிக்குள் அவை இறக்கப்படும்.

## நிலமற்றவர்களுக்கு நிலப்பட்டா!

சமூக நீதி, செல்வத்தை நியாயமான முறையில் பங்கீடு செய்தல் ஆகிய குறிக்கோள்களை அடையும் பொருட்டு நில உச்ச வரம்புக்கும், உச்சவரம்பைச் செயற்படுத்தியதால் கிடைத்த உபரி நிலங்களை விரைவாகப் பங்கீடு செய்தலுக்கும் உரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. **1976 பிப்ரவரி முதல் 13,580 ஏக்கர் நிலம் 9,709 பேர்களுக்குக் கொடுக்கப் பெற்றுள்ளது. அதில் 4,985 பேர் அரிசனங்கள், 13 பேர் பழங்குடி மக்கள் ஆவார்.**

## குத்தகைக்காரர்களுக்குப் பாதுகாப்பு!

இம்மாநிலத்தில் தொடர்ந்து வறட்சி நிலவியது. எனவே குத்தகைக்காரர்களை குத்தகை நிலங்களிலிருந்து வெளியேற்றாமல் பாதுகாப்பதற்கான சட்டம் ஒன்று 1976 ஆகஸ்டில் குடியரசுத் தலைவரால் பிறப்பிக்கப்பட்டது. 1976-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30-ஆம் நாள் வரை குத்தகைப் பாக்கி உள்ளதற்காக, 1978 ஜனவரி 15-ஆம் நாள் வரை குத்தகைக்காரர் எவரையும் நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட இயலாது. பயிரிடு குத்தகைக்காரர்களுக்கு உடைமை உரிமை வழங்குவது குறித்தும் முனைப்பாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.




## கொத்தடிமைகளுக்குப் புதுவாழ்வு!

மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளில் மிக அண்மைக்காலம் வரையிலும் கடந்த கால நிலப் பிரபுத்துவ முறையை நினைவூட்டும் கொத்தடிமை முறை நிலவி வந்தது. கொத்தடிமை முறை தமிழ்நாட்டில் எங்கெல்லாம் நிலவி வந்ததோ அந்த இடங்களைக் கண்டு பிடிக்க முதல் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது என்பது பாராட்டத்தக்கதாகும். **1976 பிப்ரவரி முதல், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் 2,251 குடும்பங்களில் உள்ள 2,870 கொத்தடிமைத் தொழிலாளர்கள் விடுவிக்கப்பட்டனர்.** பயிரிடுவதற்கேற்ற நிலங்களை அவர்களுக்கு ஒப்படை செய்தும், தற்காலிக வேலை வாய்ப்பு அளித்தும் பண்ணைத்தொழிலைச் சார்ந்த தொழில்களைச் செய்ய உதவித் தொகை அளித்தும் பெரும்பாலானவர்களுக்குப் புதுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ளவர்களுக்கும் புதுவாழ்வு அளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கொத்தடிமை முறையை ஒழிப்பதற்கான திட்டத்தின் கீழ் பல நோக்க வளர்ச்சித் திட்டம் ஒன்று கல்ராயன் குன்றுப் பகுதிகளில் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஜீப் செல்லுவதற்கேற்ற சாலைகளை அமைக்க ரூ. 54 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. பழங்குடி மக்களுக்கான துணைத் திட்டத்தின் கீழ், வேளாண்மை, கதர்-கிராமத் தொழில்கள், கால் நடை வளர்ப்பு, சமூக நலத் துறைகள், ஆகியவற்றிற்கு ரூ. 195 இலட்சம் செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் கீழ், ஒன்பது பாலர் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதுவரை இப்பள்ளிகளில் 353 சிறுவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## வீடற்றவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா!

ஏழை மக்களின் அடிப்படைத் தேவையான வீட்டு வசதி குறித்து அதிகக் கவனம் செலுத்தப்பட்டது. இம்மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி செயலுக்கு வந்த பின்னர் கிராமப் பகுதிகளில் வீடற்ற ஏழை மக்கள், அரசு நிலங்களில் செய்துள்ள ஆக்கிரமிப்புகளில் மறுப்புக்கிடமில்லாதவற்றை முறைப்படுத்தி அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் ஒப்படை செய்யும் பணியைக் குறித்த காலத்துள் முடிக்கத்



திட்டமிட்டும், முன்னுரிமை அளித்தும் செவ்விய முறையில், நிறைவேற்றப்பட்டு வருகிறது. **1976—பிப்ரவரி முதல் 1,69,992 வீட்டு மனைப் பட்டாக்கள் ஒப்படை செய்யப்பட்டுள்ளன.** 38,134 அரிசனங்களுக்கும், 2,009 பழங்குடி மக்களுக்கும் வீட்டு மனை ஒப்படை செய்ததும் இதில் அடங்கும். இந்த ஆண்டில் கிராமப் பகுதிகளில் வீடற்ற ஏழை மக்கள் அரசு நிலங்களில் செய்துள்ள ஆக்கிரமிப்புக்களில் மறுப்புக்கிடமில்லாத 57,000 வீட்டு மனைகளின் ஆக்கிரமிப்புக்களை முறைப்படுத்த வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## நலிந்த பிரிவினர் பட்ட கடன் ரத்து செய்யப்பட்டது!

சமுதாயத்தின் நலிந்த பிரிவினர் பட்டுள்ள கடன் தொல்லையினை நிவர்த்திக்க அரசு கருதியது. அதன்படி, உழவர்கள், உழவர்களல்லாதோரிடமிருந்து கடன் தொகைகளை வசூலிப்பதை ஒத்தி வைப்பதற்கான சட்டம் ஒன்று பிறப்பிக்கப்பட்டது. **இந்தக் கடன் வசூல் ஒத்தி வைப்புச் சட்டம் 15—7—1977 வரை தொடர்ந்து செயலில் இருக்கும் வகையில் நீட்டிக்கப்பட்டுள்ளது.** குடும்பத்தின் ஆண்டு வருமானம் 2,400 ரூபாய்க்கு மேற்படாத, நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் கிராமக் கைவினைஞர்கள், சிறு உழவர்கள் ஆகியோரது கடன்களை 'தமிழ்நாடு 1976-ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டம்' மூலமாக தமிழ்நாடு அரசு முழுவதுமாக ரத்து செய்துவிட்டது. இதுவரை மொத்தம் ரூ. 19,40,612 மதிப்புக்குக் கடன் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. **இதனால் 5,659 பேர் பயனடைந்துள்ளனர். இதில் 1,075 பேர் அரிசனங்கள்;** 8 பேர் பழங்குடினர்.

கடன் நிவாரண நடவடிக்கைகளை நீட்டித்தல், ஏனைய வகையினரின் கடன்களைக் குறைத்தல், கூட்டுறவுச் சங்கங்கள், வணிக வங்கிகள் மூலமாக ரொக்கக் கடன்களைப் பெறுவதில் தற்சார்பு நிலையை அடைவதற்காகச் சமூகத்தில் திட்டவட்டமான இயக்கத்தை உருவாக்குதல் ஆகியவற்றிற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

## வேளாண்மைத் தொழிலாளர்களின் ஊதியம் உயர்த்தப்பட்டது!


வேளாண்மைத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியங்கள் 1976 மார்ச்சில் உயர்த்தப்பட்டன. அப்போது பிறப்பித்த சட்டத்தின் மூலம் தொலாளர்களுக்குப் போதிய அளவு ஊதியங்கள் கிடைக்க உறுதி செய்யப்பட்டது. இச்சட்டத்திற்குப் பின், 1976 நவம்பரில் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. அதன் மூலம், அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச ஊதியங்களைவிட, அதிகமான ஊதிய வீதங்களை முன்பே கொடுத்து வருகின்ற பண்ணையதிபர்கள் அந்த அதிக வீதங்களிலேயே ஊதியங்களைக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். மாவட்டங்களில் இந்த ஊதிய வீதங்களைச் செயல்படுத்துவதற்குத் தேவையான பணியாளரமைப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## கூட்டுறவின்கீழ் கைத்தறிகள்!

தமிழ்நாட்டில் கைத்தறித் துறை, இருபது இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து சிறப்பான இடத்தினை வகித்து வருகின்றது. 1976 பிப்ரவரி முதல் 117 புதிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தனியார் துறையின் கீழ் பணியாற்றி வந்த 21,000 தறிகள் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

## மலிவுவிலைத் துணிகள்!

கட்டுப்பாட்டு விலைத் துணியை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விற்பனை செய்யும் பணி சீராக்கப்பட்டுள்ளது. இத்தகைய நடவடிக்கைகளின் பயனாக 75 சத வீதக் கட்டுப்பாட்டு விலைத் துணிகள் கிராமப் பகுதிகளில் உள்ள மக்களுக்குக் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. இத்துணிகளை விற்பனை செய்ய 4,713 விற்பனை நிலையங்கள் உள்ளன.





இவற்றில் 4,035 நிலையங்கள், கிராமப் பகுதிகளில் அமைந்துள்ளன. கட்டுப்பாட்டு விலைத் துணியை, குறிப்பாக சேலைகளையும், வேட்டிகளையும், பொது மக்கள் விரும்பி ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் தயாரிக்கும் பொருட்டு, கைத்தறிகளின் மூலம் அவற்றைத் தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் 55,000 சேலைகளும், ஒரு இலட்சம் வேட்டிகளும் உற்பத்தி செய்து வழங்கப்பட வேண்டும் என்று இலக்கு வரையறுக்கப்பட்டுள்ளது.

### புத்தக வங்கிகள்!

பள்ளிகள் அனைத்திலும், புத்தக வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் எண்ணிக்கை சுமார் 37,295 ஆகும். இதுபோல 245 தொழில் மற்றும் கலைக் கல்லூரிகளிலும் புத்தக வங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தினால் 1,02.455 கல்லூரி மாணவர்களும், 8,19,162 பள்ளி மாணவர்களும் பயன் அடைந்துள்ளனர்.



### 103 சதச் சாதனை!

கைவினைத் தொழில்-பழகுவோர்க்கு வேலையளிக்கும் திட்டத்தின் கீழ், 9,057 இடங்களில் தொழில் பழகுவோரை அமர்த்துவதெனக் குறிக்கோள் நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் 7,364 இடங்களில் தொழில் பழகுநர் அமர்த்தப்பட்டனர். இவ்வாறு அமர்த்தப்பட்ட 9,364 பேர்களில் 221 பேர் பெண்கள்; 1,512 பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள்; 5 பேர் மலைசாதியைச் சேர்ந்தவர்கள்; 4,132பேர் பின்தங்கிய வகுப்பினர்; 38 பேர் உடல் ஊனமுற்றோர் ஆவர். இவ்வாறு, தொழில் பழகுவோரைப் பயிற்சியிடங்களில் அமர்த்துவதில் நாம் 103 சதவீதம் சாதனை புரிந்துள்ளோம்.

### குடும்ப நலம் காத்தோம்!

குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. இந்திய அரசு நிர்ணயித்த 5 இலட்சம் கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் என்ற இலக்கைவிட, இம்மாநிலம் அதிகமாகவே அறுவைச் சிகிச்சைகள் செய்துள்ளது. 1977 மார்ச் இறுதிக்குள் 6 இலட்சம் கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.



மகப்பேற்றுக்குப் பின் தாய்-சேய்நலம் பேணுதல், மகப்பேறு சிறுர் நலத் திட்டங்கள், ஆகியவற்றின் மீது அடுத்து வரும் சில மாதங்களில் நாட்டம் செலுத்த அரசு கருதியுள்ளது.

**எழுத்தறிவின்மைக்கு எதிரான போர்!**

முதியோர் கல்வி வசதிகளை விரிவுபடுத்துவதன் வாயிலாகவே நாட்டு மக்கள் அனைவரையும் எழுத்தறிவுடையவராகச் செய்திட வேண்டும் என்னும் குறிக்கோளையடைய முடியும் என்று தமிழ்நாடு அரசு உணர்ந்துள்ளது. எனவே, 1976-ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் முதியோர் கல்விக்கென தனி இயக்குநர் அலுவலகம் ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. எழுத்தறிவின்மையைப் போக்க இந்த இயக்குநர் அலுவலகம் பல நடவடிக்கைகளை முனைப்பாக மேற்கொண்டுள்ளது.


**மரம் நடுவதில் மகத்தான முன்னேற்றம்!**

கடந்த ஆண்டில் இம்மாநிலத்தின் பெரும் பகுதிகளில் கடும் வறட்சி நிலவியது. சில பகுதிகளில் தொடர்ந்தாற்போல இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளாக வறட்சி நீடித்தது. 1976-ஆம் ஆண்டில் தென்மேற்குப் பருவ மழையும் சராசரி அளவுக்கும் குறைவாகவே பெய்தது. இத்தனை இடர்ப்பாடுகள் இருந்தும் 1976-77-ல் மரம் நடும் இயக்கத்தின் கீழ் 40 இலட்சம் மரங்கள் நட வேண்டும் என்ற குறிக்கோள் அளவு நிச்சயிக்கப்பட்டது. 1976 டிசம்பர் இறுதி வரை 55.40 இலட்சம் மரங்கள் இம்மாநிலத்தில் நடப்பட்டுள்ளன. மரம் நடும் பணிக்காக தமிழ்நாடு ஆளுநரைத் தலைவராகக்கொண்ட மாநிலக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மரம் நடுவதற்குப் பல்வேறு வகையில் ஊக்கம் அளிக்கக் கருதப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் மரம் நடும் திட்டத்தை ஒரு வெற்றிகரமான திட்டமாக நிறைவேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**வளமான நல்வாழ்வை நோக்கிப் பீடுநடை போடுவோம்!**

தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி செயல்படுத்தப்பட்ட நாளிலிருந்து மாநிலப் பொருளாதாரம் எல்லா அம்சங்களிலும் ஒரே சீரான வளர்ச்சியைப் பெற்றுள்ளது. 1976-77-ல் மாநிலத்திற்கான ஆண்டு திட்டத்தில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் 56 சதவீதம் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்திற்காகச் செலவிடப்பட்டது. இருபது அம்சப் பொருளாதாரத் திட்டம், ஐந்து அம்சத் திட்டம் ஆகியவற்றை வெற்றிகரமாகவும் செவ்விய முறையிலும் செயல்படுத்தியதன் விளைவாக புதிய, நேர்மையான சமுதாயகம் உருவாகும் என்று எதிர்பார்ப்பது நியாயமானதேயாகும். கடந்த ஓராண்டில் சமுதாயத்தின் எல்லா வகைப் பிரிவினரும் காட்டிய கடமையுணர்ச்சி, பொறுப்புணர்ச்சி, கட்டுப்பாடு வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து அமைந்தால், தமிழ்நாடு வளமான நல்வாழ்வை நோக்கிப் பீடு நடை போடும் என்பதில் ஐயமில்லை.





# தமிழ்நாட்டில் சர்க்கரைத்தொழில்

சி. ராமதாஸ், ஐ.ஏ.எஸ்.,
இயக்குநர், சர்க்கரைத் துறை,
தமிழ்நாடு அரசு.

முதலாவது ஐந்தாண்டுத்திட்ட ஆரம்ப காலத்தில் தமிழகத்தில் 4 சர்க்கரை ஆலைகளே இருந்தன. 1953-54-ஆம் ஆண்டில் தமிழகத்தில் சர்க்கரை உற்பத்தி 28,000 டன்களேயாகும். இது, 1953-54-ல், இந்தியாவின் மொத்த சர்க்கரை உற்பத்தியில் 2.69 சதவீதமாகும். அக்காலத்தில் இந்தியாவில் மொத்த சர்க்கரை உற்பத்தி 10.17 இலட்சம் டன்களாகும். ஆனால் இன்றைக்கு தமிழகத்தின் சர்க்கரை உற்பத்தி, ஏறத்தாழ பதிமூன்று மடங்குக்கு மேல் உயர்ந்து, இந்தியாவின் மொத்த சர்க்கரை உற்பத்தியில் ஒன்பது சதவீதத்தை எட்டிப் பிடித்திருக்கிறது.

இச்சீரான வளர்ச்சியின் காரணம் என்ன? பலப்பல; அவற்றில் சில:

சராசரி ஏக்கர் விளைச்சல் அதிகமாகியுள்ளது. இந்தியாவிலேயே ஏக்கர் கரும்பு விளைச்சலில் தமிழகம் முதலாவது இடத்தை வகிக்கிறது.

அது மட்டுமல்ல, ஒரு ஏக்கர் பரப்புக் கரும்பிலிருந்து கிடைக்கும் சர்க்கரை, இந்தியாவின் சராசரி சர்க்கரை கட்டுமானத்தைக் காட்டிலும் 50 சதவீதம் அதிகம்.

அதிக விளைச்சல், விவசாயிக்கும் அதிக வருவாய் ஈட்டித் தருகிறது. எனவே, கரும்பு பயிரிடப்படும் பரப்பளவும் அதிகரித்துக் கொண்டே சென்றது.

தமிழகத்தில் விளையும் சுமார் ஒன்றரைக்கோடி டன் கரும்பில், ஏறத்தாழ 31 சதவீதம் கரும்பு, சர்க்கரை ஆலைகளால் பயன்படுத்தப்படுகின்றது. மீதமுள்ள கரும்பு,வெல்லத் தயாரிப்புக்கும், விதைக்கரணை மற்றும் இதர உபயோகங்களுக்கும் பயனாகிறது. மேற்கண்ட சாதகமான சூழ்நிலைகள் தமிழகத்தில் மேலும் பல சர்க்கரை ஆலைகள் ஏற்பட ஏதுவாக இருக்கின்றன.

1975-76-ல் தமிழகத்தில் 16 சர்க்கரை ஆலைகள் இருந்தன. இவற்றில் 9 தனியார் சர்க்கரை ஆலைகள்; 7 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளாகும். தென்னார்க்காடு மாவட்டத்தில் நான்கு ஆலைகளும், திருச்சி மாவட்டத்தில் மூன்று ஆலைகளும், மதுரை, கோயம்புத்தூர் மாவட்டங்களில் ஒவ்வொன்றிலும் இரண்டு ஆலைகளும், தஞ்சாவூர்,வட ஆர்க்காடு, செங்கல்பட்டு, சேலம், தர்மபுரி ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு ஆலை வீதமும் உள்ளன. இவ்வாலைகள் நாளொன்றுக்கு 29,000 டன் கரும்பு பிழியும் திறன் கொண்டவை. இவைகளில் ரூபாய் 60 கோடிக்கு மேற்பட்ட தொகை நிரந்தர மூலதனமாக உள்ளது. ஏறத்தாழ 14,000 பேர்கள் நேரடியாக இத்தொழிலில் வேலை செய்கின்றனர். அது மட்டுமல்ல, கரும்பு பயிரிடல், போக்குவரத்து போன்ற சர்க்கரைத் தொழில் சம்பந்தப்பட்ட உப தொழில்களில் சுமார் 10 இலட்சம் பேர்கள் ஈடுபட்டுள்ளனர். இதனாலேயே கிராமப் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஊன்றுகோலாக

உள்ள இத்தொழில், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட மிகப் பெரிய தொழில்களில் ஒன்ருக விளங்குகிறது.

1975-76-ம் ஆண்டில் 19.69 இலட்சம் டன் கரும்பு மட்டுமே அரைத்த தமிழக சர்க்கரை ஆலைகள் 1976-77ஆம் ஆண்டில் முடுக்கி விடப்பட்டன. உற்பத்தியைப் பெருக்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எந்தெந்தத் துறைகளில் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என ஆராய்ந்து ஒவ்வொன்றின் முக்கியத்துவத்தைப் பொறுத்து, துரிதமாகச் செயல்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

1976-77-ஆம் ஆண்டில் தமிழகத்தில், சென்ற ஆண்டைவிட கரும்பு உற்பத்தி அதிகரித்திருப்பதோடு, சர்க்கரை ஆலைகள் 36 இலட்சம் டன்களுக்கும் அதிகமாகவே கரும்பு பிழியும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1975-76-ம் ஆண்டு அரைவையினை ஒப்பிடுகையில் இது ஏறத்தாழ 83 சதம் கூடுதலாகும்.

இக்கூடுதல் விளைச்சலுக்குக் காரணம்-கரும்பு விவசாயிகளே. தமிழகக் கரும்பு விவசாயிகள் கரும்பு பயிரிடுவதில் முற்போக்கு முறைகளைக் கையாளுகின்றனர். சர்க்கரை ஆலையினர் பரிந்துரைக்கும் புதுரகக் கரும்புகளைப் பயிரிட்டு அதிக மகசூல் பெற அயராது உழைக்கின்றனர். சர்க்கரை ஆலைகளின் உயர்வு, கரும்பு பயிரிடுவோரின் சீரிய ஒத்துழைப்பால் தான்! அவர்களது பணி போற்றற்குரியது.

## உற்பத்திப் பெருக்கத்திற்கான தொடர்பணிகள்

தமிழகத்தில் சர்க்கரை உற்பத்தியை அதிகரிக்க-மேலும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் கூட்டுறவு மற்றும் பொதுத்துறையில் புதிய சர்க்கரை ஆலைகள் நிறுவப்பட இருக்கின்றன. அத்துடன் தற்போது உள்ள சர்க்கரை ஆலைகளின் அரைவைத் திறனும் உயர்த்தப்படுகின்றது.

இதன்படி வட ஆர்க்காடு மாவட்டத்தில் திருப்பத்தூருக்கருகிலும் வேலூருக்கருகிலும் தினசரி 1,250 டன்கள் கரும்பு பிழியும் ஆலைகள் நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆலைக்கும் மொத்த முதலீடு சுமார் ரூ. 650 இலட்சங்களாகும். திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை தனது சோதனை அரைவையைக் கடந்த 6-2-1977 அன்று வெற்றிகரமாகத் தொடங்கியுள்ளது. பாலாற்றின் கரையில் கேதாண்டப்பட்டி என்ற இடத்தில் அமைந்துள்ள இவ்வாலையை 2-3-77 அன்று தமிழ்நாடு ஆளுநர் திரு மோஹன்லால் சுகாடியா அவர்கள் திறந்து வைத்தார்.

வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை 1977 மார்ச்சு மாதம் அரைவையைத் தொடங்க இருக்கின்றது.

பொதுத்துறையில் சர்க்கரை ஆலைகள் நிறுவ, தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் என்ற அமைப்பு தொடங்கப்பட்டு உள்ளது. இந்த அமைப்பின் கீழ், முதலாவது பொதுத்துறை ஆலை, தஞ்சாவூருக்கருகில் நிறுவப்பட்டுள்ளது. இந்த ஆலை, கடந்த 7-2-77 ஆம் நாள் தனது சோதனை அரைவையைத் தொடங்கியுள்ளது. தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு வே. கார்த்திகேயன் அவர்கள் தலைமையில் இவ்வாலையை 27-2-77 அன்று, தமிழ்நாடு ஆளுநர் திரு மோஹன்லால் சுகாடியா அவர்கள் திறந்து வைத்தார்.


இதனைத் தொடர்ந்து திருச்சி மாவட்டம் பெரம்பலூருக்கருகில்

சராசரி ஏக்கர் கரும்பு விளைச்சலில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் பெற்றுள்ளது!





முதிர்ந்த கரும்புகளை அறுவடை செய்யும் நோக்குடன் கரும்பின் முதிர்ச்சி ஆராயப்படுகிறது.



திருப்பத்தூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையைத் தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால்சுகாதியா அவர்கள், வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம். பரமசிவம் அவர்கள் தலைமையில், 2-3-1977 அன்று துவக்கி வைத்தார்.

1977 நவம்பர் மாதத்திற்குள் மற்றொரு ஆலை தொடங்கப்பட உள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் மொத்தம் 8 பொதுத்துறை ஆலைகள் நிறுவ ஏற்பாடு உள்ளது. தஞ்சாவூர் பெரம்பலூர் ஆலைகள் உட்பட மொத்தம் ஐந்து ஆலைகளுக்கு இதுவரை உரிமம் மத்திய அரசினல் வழங்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோவிலிலும், தென்னர்க்காடு மாவட்டத்தில் திருக்கோயிலூரிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகெங்கையிலும் நிறுவப்பட இருக்கும் ஆலைகள் மற்ற மூன்றுகும். இவை தவிர மேலும் இரண்டு ஆலைகளுக்கு உரிமம் பெற முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்துடன் கோயம்புத்தூரில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள ஆலையும், பொதுத்துறைக்கு மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது.

மதுராந்தகம், சேலம், அமராவதி, கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் அவைகளது அரைவைத் திறனை உயர்த்த நடவடிக்கை எடுத்துள்ளன. இதற்கான மொத்த மூலதனச் செலவு சுமார் ரூ. 904 இலட்ச மாகும். 1977-ஆம் ஆண்டில் முடிவடையும் விரிவாக்கப்பணியின் மூலம் இவ்வாலைகளின் தினசரி அரைவைத்திறன் மேலும் 3,000 டன்கள் உயரும். இதுபோன்று தனியார் துறையில் உள்ள சர்க்கரை ஆலைகளின் விரிவாக்கப்பணியின் மூலம் அவற்றின் தினசரி அரைவைத்திறன் 5,100 டன்கள் உயரும்.

மேற்கண்ட முயற்சியின் பலனக ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகளின் தினசரி அரைவைத்திறன் 45,850 டன்களாக இருக்கும். இது நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் இருந்த அரைவைத்திறனை ஒப்பிடுகையில் 70 சதவீதம் அதிகமாகும்.

## சர்க்கரைத் தொழிலைச் சார்ந்த உபதொழில்கள்

கழிவுப்பாகு — மொலாசஸ் (Molases) எனப்படுவது-சர்க்கரைத் தயாரிப்பில் கிடைக்கப் பெறும் உபபொருள்களில் ஒன்று. இதுவே --ஆல்கஹால்'' உற்பத்திக்கான மூலப்பொருளாகும். இதற்காகத் தமிழகத்தில் 7 வடிப்பகங்கள் ( distilleries ) தொடங்கப்பட்டுச் செயல்படுகின்றன. கழிவுப்பாகினை முறையாக சேமித்து வைக்க வேண்டும். திறந்த தொட்டிகளில் சேமித்து வைத்தால் மழைநீர் முதலியவைகளுடன் கலந்து அதன் தரம் குறைந்து, அவற்றிலிருந்து கிடைக்கப்பெறும் ''ஆல்கஹால்'' அளவும் குறைந்துவிடும். உற்பத்திக்குறைவு தொழிற்சாலைக்கும் இழப்பு, நாட்டுக்கும் பாதிப்பு.

கழிவுப்பாகு, நல்லெண்ணெய், கோழி, கால்நடைத் தீவனத் தயாரிப்பு, தோல் பதனிடுதல் மற்றும் வார்ப்புத் தொழில்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே, இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கழிவுப்பாகினை மூடப்பட்ட எஃகுத் தொட்டிகளில் (Steel Tanks) சேமித்து வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 1976-ஆம் ஆண்டு துவக்கத்தில் தமிழக சர்க்கரை ஆலைகளில் சுமார் 67,000 டன்கள் கழிவுப்பாகு முறையாகச் சேமித்து வைக்க வசதி இருந்தது. இப்போது மேலும் பல எஃகுத் தொட்டிகள் கட்டப்பட்டு வருகின்றன. இன்னும் ஐந்தாறு மாதங்களுக்குள் 1977 செப்டம்பர் மாதத்திற்குள்-இந்தச் சேமிப்பு வசதியின் அளவு 97,000 டன்களாக உயரும்; இது 1976-ஆம் ஆண்டு துவக்கத்தில் இருந்த முறையான கழிவுப்பாகு சேமிப்பு வசதியோடு ஒப்பிடுகையில் 45 சதவீதம் அதிகமாகும்.

கரும்புச் சக்கை (Bagasse) கழிவு மண் (Press Mud) ஆகிய கரும்பு பிழிதலில் கிடைக்கும் இதர உபபொருள்களாகும். சர்க்கரை ஆலைகளில் கிடைக்கும் உபரி கரும்புச் சக்கை, காகித ஆலைகளில் காகிதம் உற்பத்தி செய்யப் பயனுகிறது. கழிவுமண்-பயிருக்கான ஊட்டச்சத்து கொண்டது-உரமாகப் பயன்படுத்தக்கூடியது. எனவே, சர்க்கரை ஆலைகள், கரும்பு விவசாயிகளுக்கு குறைந்த விலையில் கழிவு மண்ணை விலைக்குக் கொடுக்கின்றன.

## தொழிலாளர் நலன்

விவசாயிகள்-குறிப்பாக கரும்பு விவசாயிகளின்-வாழ்க்கைத்தரம் உயர, உறுதுணையாக உள்ள சர்க்கரை ஆலைகள், கழனியிலிருந்து வரப்பெறும் கரும்பிலிருந்து சர்க்கரையைப் பிரித்தெடுக்கும் பணியாளர்களின் நலம் பேணுவதிலும் முன் நிற்கின்றன. பணியாளர்களுக்கான வீட்டு வசதி, மருத்துவ வசதி, கல்வி வசதி அனைத்தையும் அளிக்கின்றன. தமிழகத்திலுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் தங்கள் நிரந்தரப் பணியாளர்களில் சுமார் 40 சதவிகிதம் பேர்களுக்கு வீட்டு வசதி அளித்திருக்கின்றன. ''தொழிலாளர்களுக்கான வீட்டு வசதித் திட்டத்தின் கீழ்'' இன்னும் இரண்டு ஆண்டிற்குள் 1,000 வீடுகள் கட்டிக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் நிரந்தரப் பணியாளர்களில் சுமார் 72 சதவீதம் பேர் பயன்பெறுவர். மற்றும் மருத்துவமனை, பள்ளிகள் ஆகியவைகளும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் இயங்கி வருகின்றன.

## இருபது அம்சத் திட்டத்தில் ஆலைகளின் பங்கு

இருபது அம்சத் திட்டத்தின் கீழ் தொழிலாளர்கள் நிர்வாகத்தில் பங்கு பெற, சர்க்கரை ஆலைகள் வழி வகுத்துள்ளன. ஏழு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலும் தொழிலாளர், நிர்வாகத்தினர் அடங்கிய '-ஷாப் கவுன்சில்'' மற்றும் '-ஜாயிண்ட் கவுன்சில்'' ஆகியவைகள் ஏற்படுத்தப்பட்டு, செவ்வனே நடைபெறுகின்றன. இவைகளில் உற்பத்திப் பெருக்கத்திற்கான வழிவகைகள், சேதாரத்தைத் தவிர்த்தல்இன்னும் பல ஆக்கப்பணிகள் பற்றி உற்சாகத்தோடு விவாதிக்கப்படுகின்றன; அத்தோடு மட்டுமல்ல, அவைகள் விரைந்து செயலாக்கப்படுகின்றன.

வேலை வாய்ப்பு-பயிற்சியாளர் திட்டத்தின்கீழ் ஏழு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலும் 16 தாழ்த்தப்பட்ட மற்றும் பின் தங்கிய வகுப்பினைச் சார்ந்தோர் உட்பட 128 பேர்களுக்கு வேலை அளிக்கப்பட்டுள்ளது. இது, 100 சதவீதச் சாதனையாகும்.

பெருகி வரும் மக்கட் தொகையைக் கட்டுப்படுத்தும் பணியிலும், ஆலைகளின் சாதனை போற்றற்குரியது. குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ளும் பணியாளர்களுக்கு, அரசு அளிக்கும் பணம் மற்றும் இதர சலுகைகளுடன், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் ரூ. 200 வரை ஊக்கத் தொகை வழங்குகின்றன. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் குடும்பக்கட்டுப்பாடு செய்து கொள்ளத் தகுதியுடைய 1,985 பணியாளர்களில் இதுவரை 1,056 பேர்கள் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளனர். இது 53 சதவீத சாதனையாகும்.

சாதனை பெருக, சாலைகள் அவசியம். சாதனைக்கும் சாலைக்கும் என்ன உறவு? சர்க்கரை ஆலைகள் கிராமப் பகுதிகளிலேயே அமைக்கப்படுகின்றன—அது அவசியமும் கூட. அறுவடை செய்யப்பட்ட கரும்பு உடனடியாக ஆலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அரைக்கப்பட வேண்டும். அறுவடை செய்யப்பட்டபின், ஒரு நாளுக்கும் மேலாக தாமதப்படுத்தப்பட்டு கரும்பு அரைவை செய்யப்பட்டால், சர்க்கரை மீட்பில் சுமார் அரை சதவீதம் வரை குறைவு ஏற்படும். ஒரு ஆண்டில் தினசரி 1,250 டன் அரைவைத் திறனுள்ள ஒரு சர்க்கரை ஆலைக்கு இச்சர்க்கரை இழப்பின் மதிப்பு பல இலட்சக்கணக்கான ரூபாய்களாக இருக்கும். இக்கணக்கீடு ஒன்றே சர்க்கரை ஆலையைச் சுற்றியுள்ள கரும்பு பயிராகும் பகுதிகளில் போதிய அளவு சாலைகள் அமைத்தலின் அவசியத்தை வலியுறுத்தும். இம் முக்கியத்துவத்தைக் கருதி தமிழ்நாடு அரசு 1976-77-ஆம் ஆண்டில் சர்க்கரை ஆலையைச் சார்ந்த பகுதிகளில் புதிய சாலைகள் அமைக்கவும், பழைய சாலைகளில் தார் போடுதல் போன்ற பராமரிப்புப் பணிக்கெனவும் ரூ. 75 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. ரூ. 105 இலட்சம் 1977-78-ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடாகும். இதன் மூலம் பல கிராமங்களுக்குச் சாலை வசதி கிடைப்பதுடன், கிராமப் பொருளாதார முன்னேற்றம் ஏற்படவும் வழி கோலும்.


ஓம்

### அதிசய நீர் ஊற்று நிபுணர்

(1) குழாய்க் கிணறு இறக்கவும், புதிய கிணறு வெட்டவும் (பழைய கிணற்றில் போரிங் குழி இறக்கவும்) குறிப்பிட்ட பூமியில் தெற்கு திசையிலிருந்து வடக்கு நோக்கியும், மேற்கிலிருந்து கிழக்கு திசை நோக்கியும் சென்று கொண்டு இருக்கும் நீர் ஊற்றுகளை எல்லாம் விஞ்ஞான முறைப்படி கண்டுபிடித்து அவைகளிலேயே மிக அதிகமான அளவு தண்ணீர் உள்ள 2 நீர் ஊற்றுக்கள் கிராஸ் செய்யும் இடம் கண்டு பிடித்து குறிக்கப்படும்.

(2) என்னுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு குழாய்க் கிணறு இறக்குபவர்களுக்கு அதில் தண்ணீர் சப்ளை கிடைக்கவில்லை என்று நிரூபித்தால், 2:3 என்ற விகிதப்படி 3 ஆயிரம் ரூபாய் நஷ்டஈடு கொடுக்கப்படும்.

(3) நீர் ஊற்றுக்களைக் கண்டுபிடிப்பதில் எனக்கு உள்ள தொழில்நுட்பத் திறமையை விவரித்து (Ex. ஜனதிபதி) மேதகு பக்ருதீன் அலி அகமது அவர்களுக்கு நான் அனுப்பிய விண்ணப்பத்தின் கருத்துக்களை 40 பைசா ஸ்டாம்பு அனுப்புபவர்களுக்கு மட்டும் அனுப்பப்படும்.

முகவரி :

**கே. கந்தசாமி,**
நீர் ஊற்று நிபுணர்,
(**Exmember of the British Society of Diviners London.**)
**கணபதி அஞ்சல்,**
**கோயமுத்தூர்—6.**

Advt.